



நடுநிலை இதழ்

# தினப்புயல்

THINAPPUYAL

திනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -118

## தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமையிலிருந்து தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு விலகிச்செல்கின்றது - கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



## மீண்டுமொரு ஆயுதப்போருக்கு தமிழினத்தை தயார்படுத்தும் மைத்திரி அரசு

## "நான் சரியானதென்று உறுதியாகக் கண்டதை எழுதுகின்றேன். அதற்கான எந்த அழிவையும் சந்திக்கத்தயார்" - டி . சிவராம்



காலத்திற்கு காலம் மாற்றம்பெற்று வந்த அரசாங்கங்கள் அனைத்தும் ஏதோ ஒரு பொறிமுறைக்குள் நாட்டைக்கொண்டு வருவது வழக்கம். அது போன்றதான அரசியல் காய்நகர்த்தல்களையே தற்பொழுதும் சிங்கள பேரினவாத அரசு மேற்கொண்டுவருகின்றது. போராட்ட வரலாற்றில் இராணுவ சமநிலையினை தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்ற பொழுது, இராணுவத் தரப்பில் டென்சில் கொப்பேகடுவா, காமினி திஸா நாயக்க, அனுரத்த ரத்வத்த, ஜனக பெரேரா, சரத்பொன்சேகா, சர்வேந்திர டி சில்வா போன்றோரும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தரப்பில் கேணல். கிட்டு, தளபதி குணா, பிரிகேடியர் பால்ராஜ், கேணல் கருணா, தளபதி சொர்ணம், இராணுவக் கட்டளைத் தளபதி தீபன் போன்றோரும் யுத்த முனைகளில் காலத்திற்குக் காலம் வந்த இலங்கை இராணுவத் தளபதிகளுடன் போரியல் ரீதியில் விடுதலைப்புலிகள் வலுவானவர்கள். அவர்கள் தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமைக்காக போராடி இம் மண்ணில் விதையானவர்கள். இவர்களுடைய போராட்டமானது சர்வதேசமே வியக்குமளவிற்கு காணப்பட்டது. படிப்படியாக பேச்சுவார்த்தை என்ற போர்வையில் விடுதலைப்புலிகளின் போராட்டம் அமெரிக்கா, சீனா, இந்தியாவின்உதவிகளுடன்மழுங்கடிக்கச் செய்யப்பட்டது. ஆனாலும் சர்வதேச ரீதியாக தமிழீழ விடுதலைப்புலிகள் மேலோங்கி நிற்கின்றனர். இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்பட்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் கையில் கொடுக்கப்பட்டபோது, ரணில் விக்கிரமசிங்கவின் UNP கட்சிக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரு பெரும்பான்மை இல்லாததன் காரணமாக அனைத்து பேச்சுவார்த்தைகளும் என்ற அந்தக் கனவு அவர்களுக்கு நனவாகவில்லை. காட்டுக்குள் புலிகள் இருக்கின்றார்கள் என்று கட்டுக்கதைகளை பரப்பிவிட்டு, அதனோடு தமது அரசியல் நடவடிக்கைகளை கட்டவீழ்த்து விட ஆரம்பித்தனர். தற்பொழுது இருக்கக்கூடிய அரசாங்கத்திற்கும் அதேபோன்றதான தேவை ஏற்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் நாடு கடந்த தமிழீழ அரசின் உதவியுடன் செயற்பட ஆரம்பித்துவிட்டார்கள். அதற்காக தற்பொழுது உருத்திரகுமார் என்பவர் தலைமை தாங்கி வருகின்றார். சர்வதேச வலைப்பின்னலில் தமிழீழ விடுதலைப்புலிகள் பாரிய பரிணாம வளர்ச்சியை பெற்றுள்ளனர். எத்தியோப்பியா, எரித்தெரியா, லெபனான், அமெரிக்கா போன்ற நாடுகளின் ஆயுதப்பயிற்சிகள் இன்னமும் சிங்களப் பேரினவாத கட்சிகளினால் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டது. அதில் பல்வேறு சிங்களக் கட்சிகள் இணைந்து கொண்டதுடன், வடகிழக்கில் இருக்கின்ற தமிழ்க்கட்சிகளும் இணைந்து மைத்திரிபால சிறிசேனவின் கரங்களை பலப்படுத்தி, மஹிந்தவை வீட்டுக்கு அனுப்பிய விடயங்களையும் நாம் அறிந்ததே. இவ்வாறு நாம் இவர்களை அனுப்பியதன் நோக்கம் தமிழ்மக்களுக்கான நிரந்தர தீர்வுகள் கிடைக்கவேண்டுமென்பதுவே. ஆனால் 100 நாட்கள் வேலைத் திட்டம் என்று கூறி தமிழ்மக்களின் கண்களுக்குள் மண்ணைத் தூவிவிட்டு, செயற்பாடுகளை சரியாக மேற்கொள்ளாது, இன்னும் நூறு நாள் வேலைத்திட்டங்கள் முடிவுறுவதற்கு கால அவகாசங்கள் எடுத்துக்கொள்கின்றதான செயற்பாடுகளை சூட்சுமமான முறையில் இந்த அரசாங்கம் நகர்த்துகின்றது.

# மீண்டுமொரு ஆயுதப்போருக்கு தமிழினத்தை தயார்படுத்தும் மைத்திரி அரசு



போரிட்ட வரலாறு இன்னமும் தமிழர் வரலாற்றிலிருந்து நீக்கப்படவில்லை.

இவ்வாறிருக்க, விடுதலைப்புலிகளின் பல்வேறுபட்ட சிறப்புத் தாக்குதலின் மூலம் சந்திரிகா அரசு விடுதலைப்புலிகள் மற்றும் சர்வதேசத்திடம் மண்டியிடும் சூழ்நிலைக்கு விடுதலைப்புலிகளுடைய உக்கிரப்போர் அமைந்தது எனலாம். சிறீமாவோ பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ரணசிங்க பிரமேதாஸா, ரணில் விக்கிரமசிங்க, சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகிய ஆட்சியாளர்களால் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை தோற்கடிக்க முடியாது போனது. அக்காலகட்டத்தில் இலங்கைக்கு பாரிய அளவிலான ஒத்துழைப்புக்களை சர்வதேச நாடுகள் வழங்கியிருக்கவில்லை.

தொழில்நுட்பம் வளர்ந்த காலகட்டத்தில் சர்வதேச ரீதியாக மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு சாதகமாக வீட்டோ அதிகாரம் கொண்ட நாடுகளும், இந்தியா, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளும் விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தினை நிறைவுசெய்வதற்கு அவர்களை பயங்கரவாதிகள் எனச் சித்தரித்தது. எனவே மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் அந்நாடுகளின் உதவியைப் பெற்று, விடுதலைப்புலிகளுடனான போரை தீவிரப்படுத்தி, அதில் வெற்றியும் கண்டார். அனைத்து நாடுகளின் உதவிகளையும் பெற்றுக்கொண்டு மஹிந்த அரசு ஒட்டுமொத்த தமிழினத்தையும் அழிப்பதன் ஊடாகவே தமது இலக்கை அடையலாம் என எண்ணியது. அதன் விளைவாக இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் முள்ளிவாய்க்கால் பகுதியில் மட்டும் கொலை செய்யப்பட்டதாக பதிவுகள் இருக்கின்றன.

சர்வதேச ரீதியாக தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசிற்கும் இடையில் ஏழு கட்ட சர்வதேச பேச்சுவார்த்தைகளும், பதின்மூன்று உள்ளூர் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றன. . விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என்று கருதப்பட்டிருந்தால் ஏன் அவர்களுடனான பேச்சுவார்த்தைகளில் இந்த அரசாங்கங்கள் ஈடுபட்டிருக்கவேண்டும். தோல்வியில் நிறைவடைந்தன. அரசியல் அமைப்பின் படி தமிழ் மக்களுக்கான தீர்வு ஒற்றை ஆட்சிக்குள் அமைந்ததாகவே காணப்படுகின்றது.

ஆகவே தான் இந்த யாப்பில் மாற்றங்கள் எதுவும் இதுவரை ஏற்படுத்தப்படாமல் இருக்கின்றது. மாறி மாறி வந்த அரசாங்கங்கள் அனைத்தும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளில் அக்கறை காட்டியதாக தெரியவில்லை. தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு, தமிழினம் எந்நிலையில் இருந்தாலும் பரவாயில்லை என்ற வகையிலேயே இவர்களது செயற்பாடுகள் தொடர்ந்தன. தற்பொழுது சமாதானம் நிலவியிருக்கும் இந்த சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கான ஏகபோக உரிமைகளை கொடுக்காது தொடர்ந்தும் இழுத்தடித்து வருவதற்குரிய காரணம், மற்றுமொரு போர்ச்சூழலைஉருவாக்கிசிங்களப்பேரினவாத கட்சிகள் மாத்திரமே சுயாதீனமாக செயற்படவேண்டும் என்பதில் இதற்கான முன்னெடுப்புக்கள் தற்பொழுது திட்டமிடப்பட்டு வருகின்றது. மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆட்சிக்காலத்தின் பொழுது 2014ஆம் ஆண்டின் முற்பகுதியில் நெடுங்கேணிக் காட்டுப்பகுதியில் நந்தன், அப்பன், கோபி போன்றோர் இலங்கை அரசுக்கெதிராக ஒரு அணியைவைத்து இயக்கிக் கொண்டிருப்பதாக கூறப்பட்டு, அப்பாவிப் பொதுமக்களான அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். யுத்தகாலத்தின்போது எத்தனையாயிரம் பொதுமக்கள் தடுத்துவைக்கப்பட்டு இன்னமும் விடுதலை செய்யப்படாமல் துன்புறுத்தப்படுகின்றனர்.

அவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் நெடுங்கேணி அல்லது வன்னி காட்டுப் பகுதியில் தற்பொழுதும் ஏன் இருக்க முடியாது என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. அக்காலகட்டத்தில் அவ்வாறானதொரு செயற்பாட்டினை முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் மேற்கொண்டதன் நோக்கம் என்னவெனில், எங்கோயோ ஒரு மூலையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் இருந்து கொண்டிருந்தால் தமது அரசாங்கத்தை எப்பொழுதும் தக்கவைத்துக் கொள்ளலாம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றெல்லாம் இந்த மைத்திரி அரசு தற்பொழுது கதைவிடுகின்றது. இவர்கள் இவ்வாறு தமது காய்நகர்த்தல்களை நகர்த்திச் சென்றாலும், உண்மையில் போர் ஒன்று உருவாவதற்கான அடித்தளங்களை இந்த சிங்கள பேரினவாத அரச கட்சிகளே ஊக்கம் கொடுத்து வருகின்றன. எவ்வாறெனில் தேசிய கீதத்தை தமிழில் பாடக்கூடாது என்றும் வடகிழக்கு பகுதிகளில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் வழங்கப்படலாகாது, தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற பேச்சுக்கே இடமில்லை. சிங்கள மக்கள் தமிழ் மக்களுடைய பிரதேசத்தில் குடியேற்றப்படவேண்டும் போன்ற பல விடயங்கள் இன்னமும் தமிழ் இனத்திற்கெதிராக தொடர்ச்சியாக இடம்பெறுவதனைக் காணக் கூடியதாகவிருக்கின்றது.

இதேபோன்றதான செயற்பாடுகளே கடந்தகாலங்களிலும் அதாவது முப்பது ஆண்டுகளுக்கு முன்னரும், பின்னரும் இடம்பெற்றது. அத்தகையதொரு செயற்பாட்டினை இந்த அரசாங்கம் விரும்பியோ விரும்பாமலோ சிங்கள மக்கள் மத்தியில் கட்டவீழ்த்து விடப்பட்டு சர்வதேசத்திற்கு தான் நல்லவர்கள் என்று காட்டிக்கொள்கிறது. அதற்காகவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணசபைகளின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டு, தமிழ் மக்கள் பகுதிகளில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதே வேளை இணக்கப்பாட்டு அரசியல் என்ற போர்வையில் மைத்திரி அரசாங்கம் காய்நகர்த்திக்கொண்டு செல்கின்றது என்பதனைஉணர்ந்தும்உணராதமாகாண சபைகளாக இவர்களின் செயற்பாடுகள் அமையப்பெறுகின்றது.

பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள்இரண்டும்மாகாணசபைக்கு இருந்தும் அதனை அவர்களால் செயற்படுத்த முடியாது போனால் அந்த அதிகாரங்கள் இருந்தும் என்ன பயன். இந்நிலை தொடர்கின்றது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் உள்ள ஒருசிலர் கூட அரசுடன் அனுசரித்துப் போகவேண்டும் என்ற தோரணையில் அவர்களது செயற்பாடுகள் முன்னகர்த்தப்படுகின்றது. ஆயுதப் போராட்டம் ஆரம்பகட்டத்தில் ஏன் ஆரம்பிக்கப்பட்டது என்று பார்க்கின்ற பொழுது, தமிழ்மக்கள் மீதான இலங்கையரசின் அடக்குமுறையே அதற்கு காரணமாக அமைகின்றது. மீண்டும் அவ்வாறான ஒரு சூழ்நிலையினையே இந்த அரசாங்கம் உருவாக்கிவிட்டுள்ளது. யுத்தவடுக்களின் காயம்என்னவென்று இவர்கள்உணர்ந்தும் கூட அதனை பொருட்படுத்தாது தமது நிகழ்ச்சிநிரலுக்கேற்ப செயற்பாடுகளை மேற்கொள்ள முனைகின்றனர்.

தென்னிலங்கையில் குடும்ப அரசியல், சர்வாதிகார ஆட்சி என்ற காரணங்களால் தமிழர் பிரதேசத்தில் ஒரு பேச்சும், சிங்கள பிரதேசத்தில் ஒரு பேச்சுமாக இவர்களுடைய அரசியல் காய் நகர்த்தல்கள் இடம்பெறுகின்றன. இந்நிலையில் தமிழ் மக்களுக்கான பிரச்சினைகளுக்கான தீர்வு என்பது வெறும் கண்துடைப்பே எனலாம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களைவிட, தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் நாட்டைக் நன்றாக வழிநடாத்திச் செல்வார் என்பதே இன்று பலரின் கருத்தாகும். ஆனால் இங்கு தமிழ் மக்களுடைய பிரச்சினை தீர்க்கப்படாது இழுத்தடிப்புச்செய்யும் விடயம், மீண்டுமொரு யுத்த சூழ்நிலையை நாட்டில் உருவாக்கும் செயற்பாடாகவே கருத வாய்ப்பினை ஏற்படுத்தியிருக்கிறது. சர்வதேச நாடுகளில் இருக்கக்கூடிய தமிழ் பிரமுகர்கள், இராணுவ, அரசியல் ஆய்வாளர்கள் இவர்களது கருத்துக்களின்படி, மீண்டும் தமிழ் மக்களுடைய பிரதேசங்களில் சிறிது சிறிதாக அடக்குமுறைகளை தோற்றுவிப்பதுடன், அதனை வாழைப்பழத்திற்கு ஊசி ஏற்றுவது போல் ஏற்றி இறுதியில் தமிழ் மக்களுடைய உரிமைகள் அனைத்தையும் பறித்தெடுக்கும் ஒரு செயற்றிட்டத்தில் தான் இந்த அரசு செயற்படுகின்றது என்கின்ற கருத்தும் நிலவுகின்றது. இப்படியே பேச்சுவார்த்தைகள், நல்லிணக்கம், யுத்தக்குற்றவிசாரணைகள் என்று காலநீடிப்புச் செய்வதன் காரணம் தற்பொழுது இருக்கக்கூடிய அரசாங்கம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற்றுக்கொள்ளவேண்டும்.

அந்த கண்துடைப்புக்காகவே இந்த அரசாங்கம் சில விட்டுக்கொடுப்புக்களைச் செய்து வருகின்றதே தவிர, தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்பதல்ல. ஆட்சி அதிகாரத்தை பலமாக கைப்பற்றியதன் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ எவ்வாறு செயற்பட்டாரோ அதே போன்று பன்மடங்கு இந்த அரசாங்கம் செயற்படும் என்பதில் சந்தேகமில்லை. ரெலோ, புளோட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ், எல்.ரீ.ரீ.ஈ போன்ற இயக்கங்கள் உருவாகுவதற்கான காரணமும் நேரடியான மற்றும் மறைமுகமான அடக்குமுறைகளே. மீண்டும் அதே சூழ்நிலை உருவாகியுள்ளது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினுடைய செயற்பாடுகள் மீண்டும் வழிதவறிப் போகுமேயானால் அதாவது அரசாங்கம் எதைத் தருகின்றதோ அதை பெற்றுவிட்டு இருப்போம் என்று அவர்கள் இருப்பார்களேயானால், அடுத்து வருகின்ற தலைமுறை மீண்டும் புதிய இயக்கங்களை உருவாக்கி, தமது உரிமைக்காக போராடும் சூழ்நிலை உருவாகும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

இரணியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## தமிழரசுக்கட்சியை பலவீனப்படுத்த தமிழ்க்கட்சிகள் தீவிரம்

என்றுமில்லாதவாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஒரு சில கட்சிகளும், ஏனைய கட்சிகளும் தமிழரசுக்கட்சியைப் பிளவுபடுத்துவதற்கான அனைத்துவிதமான முயற்சிகளையும் மேற்கொள்கின்றன. எதிர்வரும்ஜூன்மாதத்தில் நடைபெறவுள்ள பாராளுமன்றத்தேர்தலை இலக்குவைத்து த.தே.கூட்டமைப்பையும், அதில் அங்கம் வகிக்கும் தமிழரசுக்கட்சியையும் சின்னாபின்னமாக்குவதற்கான நடவடிக்கைகள் அக்கட்சியிலுள்ளவர்களைக்கொண்டே மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இதற்கான காரணங்கள் பல்வேறு வகைகளில் கூறப்பட்டாலும் முக்கிய காரணமாக, இறுதி தீர்மானங்கள் அனைத்தையும் தமிழரசுக்கட்சியினைச் சார்ந்தவர்களே மேற்கொள்கின்றார்கள். த.தே.கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளுக்கு இவ்வாறான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதில்லை என்றும், ஆயுதக்குழுக்கள் அனைத்தும் தமிழ்மக்களுக்கு தீமையையே விளைவித்துவந்தன என்கின்றதானதொரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகின்றது. ஜனநாயக வழியில் இவர்களது பேச்சிற்கு சர்வதேசத்தில் இடமில்லை. இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் மறைமுகமாக தமிழரசுக்கட்சியை பிளவுபடுத்துவதற்கான முயற்சிகள் நகர்த்தப்படுகின்றன.

எவ்வாறாகவிருப்பினும் விடுதலைப் புலிகளின் தலைமையில் உருவாக்கப்பட்டதே த.தே.கூட்டமைப்பு என்பதில் மாற்றுக்கருத்தில்லை. இவ்வாறு த.தே.கூட்டமைப்பிற்கு களங்கம் விளைவிக்கும் திட்டங்களை தமிழ்க்கட்சிகளே மேற்கொண்டால் அது விடுதலைப்புலிகளுக்கும், தமிழினத்திற்கும் இவர்கள் மேற்கொள்ளும் பாரிய துரோகமாகவே கருதப்படும். சம்பந்தன், மாவை சேனாதிராஜா இருவருக்குப்பின் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை வழிநடத்திச்செல்வது யார்? என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. இவ் இருவரைப்பொருத்தவரையிலும் அறவழிப் போராட்டங்களில் குறிப்பாக தந்தை செல்வாவின் காலத்திலிருந்து போராட்டங்களை முன்னெடுப்பதற்கு உறுதுணையாக இருந்தவர்கள். சிங்கள தலைமைத்துவங்களின் அரசியல் நடவடிக்கைகள் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றது என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். பாராளுமன்ற உறுப்பினர்களான சரவணபவான், ஸ்ரீதரன், அரியநேந்திரன், பொன்.செல்வராசா போன்றோர் தமிழரசுக்கட்சியின் அடுத்த முக்கிய நிலையில் உள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் தேசியப்பட்டியலில் இருந்து வந்தாலும் அவரும் த.தே.கூட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றார். எத்தனையோ தமிழரசுக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அறவழிப்போராட்டங்களில் ஈடுபட்டவர்கள். எதிர்காலத்தில் இவர்கள் த.தே.கூட்டமைப்பை எவ்வாறு வழி நடத்திச்செல்லப்போகின்றார்கள் என்ற சந்தேகம் மக்கள் மற்றும் கட்சிகள் மத்தியிலும் இருக்கின்றது. இவ்வாறான குறைகளை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்பதை பற்றிச் சிந்திப்பதைவிடுத்து, கட்சியை பிளவுபடுத்த எண்ணுவது தமிழினத்திற்கு அழிவினை ஏற்படுத்தும் ஒரு விடயமாகும். அதற்காக ஆயுதப்போராட்டங்களில் இருந்து வந்தவர்கள் அனைவரும் கொலை, கொள்ளைக்காரர்கள் என அர்த்தம் கொள்ள முடியாது. சந்தர்ப்பம் சூழ்நிலை அவர்களை மாற்றியமைத்துள்ளது என்றே கூறவேண்டும். குறிப்பாக சகோதரப்படுகொலையே எனலாம்.

ரெலோ, புளொட் போன்ற கட்சிகளைத் தவிர, த.தே.கூட்டமைப்பிலிருக்கக்கூடிய ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியில் உள்ளவர்களே தமிழரசுக்கட்சி மற்றும் த.தே.கூட்டமைப்பின் பிழைகளை சுட்டிக்காட்டுகின்றனர். ஏனையவர்கள் மௌனித்திருப்பது மனவேதனையளிக்கிறது. பிழைகளை சுட்டிக்காட்டுகின்றபோதுதான் கட்சியை வளர்த்துச்செல்வதற்கான வாய்ப்பாக அதுஅமையும். அதற்காக கட்சியினை பிளவுபடுத்தியே வெற்றி பெறவேண்டும் என்றல்ல. அரசும் த.தே.கூட்டமைப்பை பிளவுபடுத்துவதற்கான முனைப்புகளில் தீவிரம் காட்டிவருகின்றது. இதற்கு தமிழ்க்கட்சிகளிலுள்ளவர்கள் துணைபோய்விடக்கூடாது என்பதே தமிழ்பேசும் மக்களுடைய ஆதங்கமாகவிருக்கின்றது.

**45**

நாங்கள் போய் ஒரு வாரமிருக்கும். பரப்புக் கடந்தானில் நின்ற மிதுலாவின் பிளாட்டூன் சாந்தகுமாரியுடன் தள்ளாடி நோக்கி நகர்ந்தது. படைத்தளத்தை எவ்வளவுக்கு நெருக்கிப் போக முடியுமோ, அவ்வளவு அருகில் போனது எமதணி. படையினரின் நடமாட்டங்களைப் பார்க்கக்கூடிய தூரங்களில் மறைவாக நின்று கொண்டு, அவர்களைக் கன்காணித்துக் கொண்டிருந்தது. எறிகணைகளை ஏற்றி வந்த ஊர்திகள் பெரிய ளால் நகர்ந்தது. அவர்கள் பெரிய மடுவை வந்தடையவே மறுநாள் பகலாகிவிட்டது. தமிழ்செல்வியுடன் நின்ற இளம்பிறையின் பிளாட்டூன் ஏற்கனவே அங்கு வந்து சேர்ந்துவிட்டிருந்தது.

ஆட்லறிகளைப் பாதுகாப்பாகப் பின்னகர்த்த வேண்டிய பொறுப்பு சாந்தகுமாரியின் அணிக்குப் படையினரின் கண்களில்படாமல், தற்செயலாகவேனும் அவர்களை எதிர்கொள்ளும் வாய்ப்புகளைத் தவிர்த்து, காடுகளுக்குள்ளால்

நாங்கள் குடிநீர் எடுப்பது, குளிப்பது பெரிய கதை. ஆறு ஒன்று நாம் நிற்குமிடத்திலிருந்துநீண்ட தொலைவுக்கு அப்பால் ஓடிக்கொண்டிருந்தது. குடிநீர் எடுப்பதற்கு இருந்த ஒரு கிணறு கூட எம்மிலிருந்து வெகு தொலைவில், ஆற்றருகேதான் இருந்தது. எமது காவல் நிலைகளோ நீண்ட இடைவெளிகளைக் கொண்டதாக, ஒரு காப்பரணிலிருந்து இரண்டுக்குமிடையேயுள்ள இடைவெளிகளை இனங்கண்டால், அல்லது காணாவிட்டாலும் தற்செயலாகவேனும் படையினர் உள்நுழைந்து பள்ளமடு-

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி

பெரிய கட்டடங்களுள் அவற்றை இறக்கி வைத்துக் கொண்டிருக்கின்றன. படையினர் தொடர்ச்சியாக நடமாடிக்கொண்டே இருக்கின்றனர். ராங்கிகள்தயார்நிலையில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அவை இடையிடையில் படையினரால் சரி பார்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஏராளம் படையினர் நடமாடிக்கொண்டிருக்கின்றனர். இவர்களின் தயார்படுத்தல்களைப் பார்த்தால், போர் முழக்கம்-03 தள்ளாடியிலிருந்துதான் புறப்படப் போகின்றதோ? என்கின்ற கேள்வி எங்களிடம் எழுந்தது. தாம் பார்த்த, அவதானித்த, ஊகித்த யாவற்றையுமே சாந்தகுமாரியின் ஆட்கள் தமக்குப் பின்னிருந்த நடவடிக்கைப் பணியகத்துக்கு உடனுக்குடன் சொல்லிக் கொண்டேயிருந்தனர்.

நம்மவர்கள் போய் மூன்று, நான்கு நாட்களின் பின் ஒரு காலையில், எமக்குப் பின்னால் பாதுகாப்பான தூரத்தில் நிலையெடுத்திருந்த எமது ஆட்லறிகள் முழங்கத் தொடங்கின. எறிகணைகள் எங்களின் தலைக்கு மேலால் கூவியவாறு போய், தள்ளாடி படைத்தளத்தினுள் வீழ்ந்து வெடித்து, அங்கிருந்த யாவற்றையும் வெடிக்கச் செய்தன. எம்மவர்கள் அனைத்தையும் நேரே பார்த்து ஆட்லறிகளுக்கு வழுத்திருந்தம் சொல்லிக்கொண்டிருந்தனர்.

எறிகணைகள் குவிக்கப்பட்ட கட்டடங்கள், ராங்கிகள், கவச ஊர்திகள், ட்ரக்குகள் உட்பட படை ஊர்திகள் வரிசை வரிசையாக நிறுத்திவைக்கப்பட்ட தொகுதிகள் அனைத்தும் வெடித்துக் கொண்டிருந்தன. தீ நாக்குகள் காற்றில் உயர எழுந்தன. தள்ளாடி எரிந்து கொண்டிருந்தது. மறுநாளும் வெடித்து வெடித்து எரிந்து கொண்டிருந்தது.

இதற்கிடையில் போர் முழக்கம் நடவடிக்கைப் படையினர் வேறொரு முனையில் எறிகணைகளைப் பொழிந்தபடி நகரத்தொடங்கினர். போர் முழக்கம்-03 ஆரம்பமாகிவிட்டது. பெரியமடு-தட்சணாமருதமடு வீதியில் நின்றவர்களிடமா, மடு-முருங்கன் வீதியில் நின்றவர்களிடமா, அல்லது யாருமற்ற பரப்புக்கடந்தானுக்கா படைநகரப் போகின்றது என்பது தெரியவில்லை. எறிகணைகள் எங்கோ விழுந்து வெடித்துக் கொண்டிருந்தன. மன்னாரின் வேவு அணிகள் தாம் திரட்டிய தகவல்களோடு மாலையில் எமது அணிகளைச் சந்தித்தன.

பாலம்பிட்டிவரை படையினர் வந்துவிட்டதால், எல்லோரும் காப்பரண்களை அதற்கும் பின்னால் அமைக்க வேண்டும் என்பதே அந்தத் தகவல். மடுவுக்கும் அப்பால் தர்சாவுடன் நிலைகொண்டிருந்த தனுசாவின் பிளாட்டூன் இரவிரவாகக் காடுக

ஆட்லறிகளை நகர்த்திப் பாதுகாப்பான இடம்வரை கொண்டுபோய்விட்டுவிட்டு, பெரியமடுவுக்கு வந்து சேர்ந்தது இந்த அணி. திசைக்கொன்றாக நின்ற பிளாட்டூன்கள் மூன்றும் இப்போது பெரிய மடுவில் சந்தித்தன. பள்ளமடுவிலிருந்து பெரியமடு நோக்கிய திசையில் வீதியின் வலது புறம், கிட்டத்தட்ட வீதிக்குச் சமாந்தரமாக அடம்பனைப் பார்த்தவாறு நிலைகொண்டன.

நாம் நின்ற இடம் பள்ளமடுவுக்கும் பெரியமடுவுக்குமிடையேயான பரட்டைக்காடு. எமக்கு இடப்புறமாக பெரிய மடுக் குடியிருப்பை அண்மித்து ஜெயந்தன் படையணி நிலைகொண்டது. அப்போது தான் இயற்கைக்கும் எங்களுக்குமான போராட்டம் தொடங்கியது. நிலமோ காய்ந்து வரண்டு இறுகிப்போய்க் கிடந்தது. நிலத்தைக் கொத்த மண்வெட்டியைப் போட்டால், ஒரு உதைப்புடன் மண்வெட்டி திருப்பி மேலுயருமேயன்றி, சிறு கிடங்குதானும் வெட்டமுடியாது.

பெரியமடு வீதியில் ஏறக்கூடிய ஆபத்து நிறையவேயிருந்தது.

எனவே குடிநீர் எடுப்பதாயினும், குளிப்பதாயினும் தேடுதல் நடவடிக்கையைச் செய்தே போகவேண்டும். கிணற்றைச் சுற்றி காவல் விட்டு, பெரிய கொள்கலன்களிலே நீரை நிரப்பித் தடிகளிலே கொழுவித் தோளிலே சுமந்து கொள்ள, முன்னும் பின்னும் பக்கவாடுகளிலும் தேடுதல் அணி நகர, தேர் போனது போல குடிநீர் எங்களின் இருப்பிடங்களுக்குப் போகும்.

குளிப்பதும் அப்படியே, அங்குலம், அங்குலமாக ஆராய்ந்தவாறே குளிக்கின்ற அணி நகரும், போகும் பாதையின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியவாறே போய், பாதிப்பேர் ஆற்றுக்கு அப்புறமும் இப்புறமும் காவலில் ஈடுபட, மீதிப்பேர் குளிப்பார்கள். பிறகு இவர்கள் காவலில் ஈடுபட, ஏனையவர்கள் குளிப்பார்கள். மறுபடி தேடலைச் செய்தவாறே



விடத்தல் மரங்களும், வேறு பெயர் தெரியாத மரங்களும் தமது பெரிய முட்களை நீட்டியவாறு எம்மை மிரட்டிக்கொண்டிருந்தன. உடம்பிலுள்ள நீர் அனைத்துமே வெகு வேகமாக ஆவியாகிக் கொண்டிருந்தது. மரங்கள் நின்றனவேயன்றி, நிழல் இல்லை. இருந்த சிறு இலைகளையும் கொட்டிவிட்டுத் தடிகளாக நின்ற மரங்களின் கீழ் வலைப்பின்னல் போன்று கோடுகளாக, சதுரங்களாக நிழல் விழும். அந்த நிழலும் சுடும்.

முதலில் பாதுகாப்புக்காக ஒரு 'ஐ' வடிவக் காப்பகழியை வெட்டுமாறு பணிக்கப்பட்டிருந்தபோதும், அதை வெட்டுவதற்குள்ளேயே உடலிலிருந்த ஈரம் அனைத்தையும் இழந்துபோனோம். உடலில் நீர் உலர்ந்தால், வெப்பம் மிகுந்தால் வரக்கூடிய அனைத்து நோய்களும் எங்களுக்கு வந்தன. எல்லோருடைய பாதங்களும் பாளம், பாளமாக வெடித்திருந்தன. கை,கால்,முகத்திலிருந்த தோல்கள் பொருக்கடித்து உதிரத்தொடங்கின.

திரும்புவர். குளிப்பதற்கென எமது காப்பரண்களிலிருந்து காலை 10.00 மணியளவில் புறப்பட்டால் (10.00 மணியின் பின்னர் தான் புறப்படலாம்) திருப்பிவர 3.00 மணியாகும். குளியல் ஒரு மாபெரும் வேலைத்திட்டம். ஆனால் நேரத்தை விழுங்குகின்ற வேலைத்திட்டம் என்பதால், ஒருவர் வாரத்தில் ஒரு முறைதான் குளிப்பதாக முறை வைத்துக்கொள்வதைத் தவிர, மாற்று வழியேதும் எமக்கு இருக்கவில்லை.

வேலைகளென்றால் தலைக்கு மேலே. முதலில் 'ஐ' வடிவக் காப்பகழி. அது முடிய காப்பரண் வெட்டும் வேலை. அதேநேரத்திலே எமது நிலைகளுக்குப் பின் பாதை எடுப்பதற்காகக் காடு வெட்டும் வேலை. காலையில் யார் யாருக்கு என்ன வேலைகள் என்று ஒவ்வொரு பிளாட்டூன் கட்டளை அதிகாரியும் பிரிப்பர். பிளாட்டூன்களின் பின் பகுதி, முன் பகுதிகளில் தேடல் நடவடிக்கை, காப்பரண் வெட்டுதல், பாதை அமைத்தல், குடிநீர் எடுத்தல், குளிக்கப்போதல் என்று வேலை பிரிபடும்.

தொடர்வான்...

### தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 248. | கப்டன் சுமித்திரா | ஜெயராணி முனியான்டி | வன்னி | 1997.09.08 | கல்யாணபுர |
| 249. | மேஜர் இளங்கிளி | பாமாதேவி கந்தையா | கிளிநொச்சி | 1997.09.08 | கல்யாணபுர |
| 250. | வீ.வே.சண்முகா | நகுலகிரி சின்னராசா | யாழ்ப்பாணம் | 1997.09.10 | புதூர் ஜெயசிக்குறுய் |
| 251. | 2ம்.லெப்.சுதர்சினி | ஜெயலலிதா கதிரவேலு | யாழ்ப்பாணம் | 1997.09.10 | புதூர் ஜெயசிக்குறுய் |
| 252. | 2ம்.லெப்.யசோ/மீன்மகள் | கனகேஸ்வரி செல்லத்துரை | முல்லைத்தீவு | 1997.09.10 | புதூர் ஜெயசிக்குறுய் |
| 253. | லெப்.தயா | அனற்றா சம்சோம் | மன்னார் | 1997.09.10 | புதூர் ஜெயசிக்குறுய் |

# புலிகளின் இராணுவ வல்லமையை உலகறிய வைத்த வரலாற்றுச் சமரின் நாயகன் பிரிகேடியர் பால்ராஜ்



விடுதலைப்புலிகளின் போரியல் வரலாற்றில் மகுடம் சேர்த்த, உலகப் போரியல் வரலாற்றில் தனியிடம் பெற்ற, தென்னாசியாவின் சிறந்த தரையிறக்கச் சண்டையாகப் பதியப்படக்கூடிய வகையில் தனித்தன்மை வாய்ந்ததாகக் கருதப்படும், இத்தாவில் பெட்டிச்சமரை வழிநடாத்திய தலைமைத் தளபதி பால்ராஜ் அவர்களின் 6ம் ஆண்டு நினைவுதினம் மே 20 ஆகும். தளபதி பால்ராஜ் அவர்களின் போராற்றலை எடுத்தியம்புவதற்கு பல தாக்குதல்கள், சண்டைகள், சமர்கள் இருந்தாலும் சிறப்பு வாய்ந்ததாக அமைவது இத்தாவில் பெட்டிச்சமர்.

சிங்களப்படைகளின் முதன்மைத் தளபதிகள் வகுத்த திட்டங்கள், தந்திரோபாயங்கள் மட்டுமன்றி சர்வதேச இராணுவ வல்லுனர்களின் ஆலோசனைகளையும் தவிடுபொடியாக்கிய சண்டை. புலிகளின் இராணுவ வல்லமையை உலகறிய வைத்த அந்த வரலாற்றுச் சமரின் நாயகன் பிரிகேடியர் பால்ராஜ் அவர்களின் நான்காம் ஆண்டில் இத்தாவில் சமர் பற்றிய சில விடயங்களை நினைவு மீட்பது பொருத்தமானது. ஓயாத அலைகள் எனப் பெயரிட்டு முன்னெடுக்கப்பட்ட வலிந்த தாக்குதலின் கட்டம் ஒன்று, இரண்டு நடவடிக்கைகளில் வன்னிப்பகுதியின் பிரதேசங்கள் மீட்கப்பட்டன.

அதன் அடுத்த கட்டமான ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கை யாழ்.குடாநாட்டை மீட்பதற்கான நடவடிக்கையாக முன்னெடுக்கப்பட்டது. ஏறத்தாழ குடாநாட்டின் மொத்த சனத்தொகையின் பத்திலொரு பங்களவிலான இராணுவம், பல இராணுவத்தளங்கள், கட்டம் கட்டமான பாதுகாப்பு வேலிகள், கடற்படைத்தளங்கள், விமானப்படைத்தளம் என முழுமையாக இராணுவமயப்படுத்தப்பட்ட பிரதேசமாகவே யாழ்.குடாநாடு இருந்தது. குடாநாட்டின் பாதுகாப்பு அரணாக, இரும்புக் கோட்டையாக இருந்தது ஆனையிறவுத்தளம்.

ஏனைய மாவட்டங்களுடன் யாழ் மாவட்டத்தை இணைத்து நின்ற ஒரே தரைவழிப்பாதையான ஏ-9 வீதியை உள்ளடக்கி அமைக்கப்பட்டிருந்த ஆனையிறவுத் தளம் வன்னி பெருநிலப்பரப்பின் உப்பளப்பகுதியையும் உள்ளடக்கியிருந்தது. ஆனையிறவின் பௌதீக அமைப்பு, நேரடி முற்றுகைத் தாக்குதலுக்கு முற்றிலும் சாதகமற்ற தன்மையைக் கொண்டது. பரந்த வெட்டை, கடல் நீரேரி, சதுப்பு நிலம் என சிங்களப்படைக்கு வாய்ப்பான களமுனையாக அமைந்திருந்தது. 1991ம் ஆண்டு ஆ.க.வெ எனப் பெயரிட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடவடிக்கை தோல்வியில் முடிந்தமைக்கு பிரதான காரணம் ஆனையிறவின் பௌதீக அமைப்புத்தான்.

யாழ். குடாநாட்டுக்கான தாக்குதலின் காத்திரத்தன்மை ஆனையிறவுத் தளத்தின் வீழ்ச்சியில்தான் தங்கியிருந்தது என்பதால், அதன் பௌதீக அமைப்பில் உள்ள சிக்கல்களை உணர்ந்த தலைவர் ஆனையிறவுத் தளத்தின் மீது நேரடியாகத் தாக்குதலை தொடுக்காமல், தனிமைப்படுத்துவதன் மூலம் வெற்றி கொள்ளலாம் என்பதனடிப்படையில் மூலோபாயங்களை வகுத்தார். ஏனெனில், பதினான்காயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தைக் கொண்ட பலமான தளமாக இருந்தாலும், அதற்கான விநியோகம் சாவகச்சேரி, பலாலி பிரதான தளங்களில்தான் தங்கியிருந்தது. எனவே அந்த உயிர்நாடியை இறுக்கி, இராணுவத்தின் விநியோகத்தை தடுப்பதுதான் தாக்குதலுக்கான பிரதான தந்திரோபாயமாகக் கண்டறிந்தார் தலைவர்.

இந்தச் சூழலில், விநியோகத்தை தடுத்தி நிறுத்தி சண்டையிடக்கூடிய பொருத்தமான இடம் எது என்பதை ஆய்வு செய்த தலைவரும், தளபதியும் ஆரம்பத்தில் பளைக்கும் புதுக்காட்டுச் சந்திக்கும் இடையில் உள்ள பகுதியில் பொருத்தமான இடத்தை தெரிவு செய்வதற்கு திட்டமிட்டனர். இதற்கான சாத்தியப்பாடுகளை மதிப்பிடுவதற்கான வேவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. என்றாலும் வேவு அணிகளின் தகவல்கள் திட்டத்தின் சாத்தியமின்மையை வெளிப்படுத்தியதால் அந்த இடம் கைவிடப்பட்டது.

எந்தவொரு பலத்திலும் ஒரு பலவீனம் இருக்கவே செய்யும். அதைச் சரியாக கண்டறிந்து திட்டமிட்டுத் தாக்குவதில்தான் வெற்றியின் ரகசியம் தங்கியிருக்கின்றது என்ற கொள்கையுடைய தலைவர், தளபதியுடன் அதற்கான அடுத்த சாத்தியப்பாட்டை ஆராய்ந்தார். அதன்படி பளைக்கும் எழுதுமட்டுவாளுக்கும் இடையில் இருந்த பிரதேசம் பொருத்தமாக இருந்ததால், விநியோகத்தை தடுக்கும் களமாக இத்தாவில் தெரிவாகியது. அதற்கு ஏற்றவகையில், வடமராட்சி கிழக்கின் குடாரப்பு - மாமுனைக் கரையோரம் தாக்குதலுக்கான தரையிறக்கத்தைச் செய்வதற்குப் பொருத்தமான இடமாகத் தேர்வு செய்யப்பட்டது.

எமது கட்டுப்பாட்டு பகுதியிலிருந்து 5 கிலோ மீற்றர் கடலால் நகர்ந்து இரண்டு இராணுவ முகாம்களிற்கு நடுவில் இருந்த குடாரப்பு மாமுனையில் தரையிறங்கி, வடமராட்சி கிழக்கையும் தென்மராட்சியையும் பிரித்து நிற்கும் சதுப்புக்கடல் நீரேரியைக் கடந்து பத்துக் கிலோ மீற்றர் தூரம் நகர்ந்து கண்டி வீதியை மறித்து நிற்கவேண்டும். அங்கு ஒரு கிலோ மீற்றர் நீளம் அகலத்தைக் கொண்ட பெட்டியமைத்து விநியோகத்தை தடுப்பதன் மூலம் ஆனையிறவை வெற்றிகொள்வதற்கு முடிவெடுக்கப்பட்டது.

மிகவும் சவாலானதும் ஆபத்தானதுமான இக்களத்தை தளபதி பால்ராஜ் அவர்களிடம் பொறுப்புக் கொடுத்த தலைவர், "ஆனையிறவிற்கான சண்டையை நீதான் நடத்தப்போறாய், நீ பெரிய வீரன், எத்தனையோ சோதனைகளை உனக்கு நான் தந்திருக்கிறன், நான் உனக்கு வைக்கிற முக்கியமான சோதனையிது, உன்னுடன் 1200 பேரையும் குடாரப்பில் சூசை தரையிறக்கி விடுவான். சிக்கலென்றால் உங்களை உடன் காப்பாற்றி வர ஏலாது. ஆனால் நீ ஏ-09 நெடுஞ்சாலையை இடைமறிச்சு யாழ்ப்பாணத்திலிருந்து ஆனையிறவிற்கு வரும் விநியோகத்தை நிறுத்தவேணும். அதைச்செய்தால் ஆனையிறவு தானா விழும். நான் குடாரப்பில தரையிறக்கி விடுவன். நீ ஏ-09 றோட்டாலதான் வரவேண்டும்" எனக்கூறி தனது திட்டத்தை விளக்கினார்.

குடாரப்பு இத்தாவில் பகுதியின் தரைத்தோற்றமானது சண்டையிடுவதற்கு சாதகமான இடமாக கருதமுடியாது. தரையிறங்கும் குடாரப்பு மணற்பரப்புக்களுடன் பனை, சிறுபற்றைக் காடுகளைக் கொண்ட பிரதேசம். குடாரப்பிலிருந்து இத்தாவிலுக்கு இடைப்பட்ட பகுதி சதுப்பு நிலத்துடன் கூடிய கண்டல் மரங்கள் வளர்ந்திருக்கும் நீரேரியைக் கொண்ட பிரதேசம். இந்த நீரேரியைத் தாண்டித்தான் இத்தாவிலுக்குள் கனரக ஆயுதங்கள், வெடிபொருட்கள் சகிதம் நகர வேண்டும். அது மட்டுமன்றி, காயம், வீரமரணங்களை அப்புறப்படுத்தல் உட்பட அனைத்து விநியோகங்களும் இந்த நீரேரிக்குள்ளால்த்தான் செய்யமுடியும்.

அப்பகுதிக்கான விநியோகங்களோ, காயப்பட்டவர்களை வெளியில் எடுப்பதோ, படையணிகளை நகர்த்துவதோ உடனடிச் சாத்தியமில்லாத தரையமைப்பு. அத்துடன் தளபதி தீபன் அவர்கள் தாளையடி முகாமைத் தகர்த்து, விநியோகத்திற்கான தரைவழிப்பாதையை ஏற்படுத்தும் வரை அணிகள் கொண்டு செல்லும் வெடிபொருட்கள், உணவு போன்றவற்றை வைத்தே தாக்குதலில் ஈடுபடவேண்டியிருந்தது. இப்படியான சாதகமில்லாத தரையமைப்பு, சூழலை சாத்தியமான களமாக மாற்றி வெல்லவேண்டும் என்பது மட்டுமல்ல குடாரப்பில் தரையிறங்கி, கவசவாகனங்கள், நவீன விமானப்படை மற்றும் கடற்படை உள்ளிட்ட அதிவல்லமை பொருந்திய படைகள், சிறப்புப்படைகளின் நடுவே, அவர்களின் பிடரிக்குப் பின்னால் நின்று மோதுவது என்பது கற்பனை செய்து பார்க்கமுடியாத செயல்.

சிறிலங்கா அரசபடையின் பலத்துடனும் ஒப்பிடும்போது குறைந்தளவு போராளிகளுடன் எதிர்கொள்வது என்பது சாதாரணமானதல்ல என்று கருதினாலும் ஆன்ம பலம்மிக்க, போரிடும் தன்மைகொண்ட வீரப்பரம்பரையின் வித்துக்களை வைத்து உறுதியாக சண்டை பிடிக்கலாம், வெல்லலாம் என்பதில் திடமான நம்பிக்கை கொண்டவர்கள் புலிகள். மேலும் "இந்த ஊடறுப்பு மறிப்புத் தாக்குதலைச் செய்வதற்கு தரப்பட்ட போராளிகளை வைத்து உனக்குத் தந்த பொறுப்பை நிறைவேற்றவேண்டும். மேலதிக உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்காதே" எனவும் தலைவர் கூறியிருந்தார்.

எனவே போராளிகளைப் பாதுகாத்து சண்டையிட்டு ஆனையிறவின் வீழ்ச்சிவரை விநியோகத்தை தடுத்து நிற்கவேண்டும் என்பதில் உள்ள கடினம் தளபதிக்குத் தெரியும். தாக்குதலுக்கான பயிற்சியின்போது தனது போர் அனுபவங்கள், சிங்களப்படைகளின் பலவீனங்கள், கிளிநொச்சியில் ஊடறுத்து நின்றபோது ஏற்பட்ட அனுபவங்கள், அங்கு இராணுவத்தை எதிர்கொண்ட முறைகள் போன்றவற்றை பகிர்ந்து போராளிகளின் மனவுறுதியையும், மனோபலத்தையும் மேலும் மேம்படுத்தினார். ஆனையிறவின் வெற்றி கைகூடுவதன் பிரதான தாக்குதல் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டும் என்ற முடிவில் உறுதியாக இருந்து தலைவரின் எண்ணத்தை நிறைவேற்றுவதற்காக கடுமையாக உழைத்தார். தாக்குதலுக்கான திட்டத்தை போராளிகளுக்கு விளங்கப்படுத்தியதுடன் சிங்கள இராணுவம் எப்படிப்பட்ட உத்திகளைப் பயன்படுத்துவான், அப்பிரதேசத்தில் எதிரி எப்படிப்பட்ட நகர்வுகளைச் செய்யமுடியும். குறிப்பாக "ராங்கிகளின் உதவியுடன் எதிரி நகரும்போது ராங்கியைப்பற்றி கவலைப்படாமல், அதை விட்டிட்டு வரும்படையினரைக் கொல்லுங்கள். ராங்கியால தனிய வந்து ஒன்றும் செய்ய ஏலாது. அது ஒரு குருட்டுச்சாமான், கிட்டப்போனால் என்ன நடக்கென்று ராங்கியில் உள்ளவர்களுக்குத் தெரியாது. ராங்கியைவிட்டிட்டுபின்னாலஎறிகுண்டை கழற்றிப்போட்டு ராங்கியை அழிக்கலாம்" என நம்பிக்கையுடன் நகைச்சுவையாக கதைக்கும் அவரது பாணி எந்த புதிய போராளியையும் சிலிர்த்தெழச்செய்யும். தன்னம்பிக்கையுடன் உத்வேகமாகப் போராடச்செய்யும் தன்மை கொண்டது. போராளிகளுக்கு சண்டையின் தன்மைபற்றியும், அதில்வரும் ஆபத்துக்களை எதிர்கொள்ளும் முறைபற்றியும் தெளிவுபடுத்தி சரியான விளக்கத்துடன் தயார்ப்படுத்தினால் இலகுவாகவும், விளையாட்டாகவும் சண்டைபிடிக்கக்கூடிய மனோநிலை அவர்களுக்கு உருவாகும் என்பது அவரது நம்பிக்கை. அது இத்தாக்குதலுக்கு மிகவும் அவசியம் என்பதை உணர்ந்து அணிகளை தயார்ப்படுத்துவதற்காக உழைத்தார்.

பயிற்சியின்போது ஒவ்வொரு சிறிய விடயங்களையும் உன்னிப்பாகப் பார்த்து, உலக வரலாறு ஒருகணம் ஸ்தம்பித்துப் பார்க்கப்போகின்ற யுத்தத்திற்காக தலைவரின் வழிகாட்டலுடன் ஒவ்வொரு விடயமாக செருக்கிச் செருக்கித் தயார்ப்படுத்தினார். 26.03.2000 அன்று, இருட்டுப் பரவத் தொடங்கிய நேரம் ஊடறுப்புத் தாக்குதல் படையணிகள் சுண்டிக்குளக் கடற்கரையில் தயாராகிக்கொண்டிருந்தன. பல களமுனை கட்டளைத் தளபதிகளும் வழியனுப்புவதற்காக ஒன்றாகக் கூடியிருந்தார்கள்.

எல்லோரது முகத்திலும் ஏதோ ஒரு பரபரப்பு. தரையிறக்குவதற்கு தயாராகிப் புறப்படுவதற்குமுன் போராளிகளுடன் கதைத்த தளபதி பால்ராஜ் அவர்கள் "எதிரி ஆக்கிரமித்துள்ள எங்களுடைய யாழ் மண்ணில் மீண்டும் நாம் காலடி எடுத்துவைக்கப்போகின்றோம். நாங்கள் வெல்லப்பட முடியாதவர்கள் என்பதை எதிரிக்கு சொல்லிவைக்கப் போகின்றோம். புலிகள் யார் என்பதை எதிரிக்கு காட்டப் போகின்றோம்" என்று கூறினார். தளபதியின் ஆக்ரோசமான வார்த்தைகளை உள்வாங்கிக்கொண்டு போராளிகள் மிகுந்த சந்தோசத்துடனும், தெம்புடனும் படகுகளில் ஏறி தாக்குதலுக்கு தயாரானார்கள்.

இத்தாக்குதலில் பங்குகொண்ட தளபதிகளான துர்க்கா, விதுஷா, ராஜசிங்கம் உட்பல பல தளபதிகளும் தங்களது அணிகளுடன் புறப்படத் தயாராகினர். சமநேரத்தில், ஊடறுத்து நிற்கும் தாக்குதல் அணிகளுக்கான தரைவழித் தொடர்பை ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்பை, முக்கியமாக ஊடறுப்புத் தாக்குதலின் தொடர் இருப்பை தீர்மானிக்கும் பிரதான களமுனையைப் பொறுப்பெடுத்த தளபதி தீபன் தலைமையிலான அணி தாளையடி இராணுவ முகாம் மீது தாக்குதல் நடாத்துவதற்கு தயாராகினர். ஏனெனில் தாளையடியை ஊடறுத்து கரையோரப்பகுதியை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தாலே ஊடறுப்பு அணிக்கான விநியோகங்களை தடைசெய்யலாம் என்பது இந்நடவடிக்கையின் வெற்றியில் பிரதான பங்கை வகித்தது. ஆனையிறவு வெற்றியைத் தீர்மானிக்கும் வரலாற்றுச் சமருக்கான அணிகள் தரையிறங்க வேண்டிய இடத்தின் பாதுகாப்பை உறுதி செய்த வேவு அணிகள் குடாரப்புக் கரையில் முன்மறிப்புப் போட்டுத் தயாராக இருந்தன.

தாக்குதல் அணிகள் சிறிய படகுகளில் தரையிறங்கும் குடாரப்பு பகுதியை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தன. படகுகளில் அணிகள் நகர்வதை தாளையடி முகாமிலிருந்த இராணுவம் ராடரில் அவதானித்து கடற்படைக்குத் தகவல் வழங்கியது. தரையிறக்க அணிகளின் படகுகளை தாக்குவதற்கு கடற்படையின் டோறா படகுகள் முயற்சியெடுக்க, கடற்புலிகளின் சண்டைப்படகுகள் தளபதி சூசை தலைமையில் கடற்தாக்குதலை ஆரம்பித்தனர். இதனால் தரையிறக்கச் சண்டை நடுக்கடலிலேயே ஆரம்பமானது. கடற்புலிகள் தாக்குதலை மேற்கொண்டு டோறாக்களை தடுத்து வைத்திருக்க, முதலாவது தரையிறக்க அணி தளபதி பால்ராஜ் அவர்களுடன் தரையிறங்கியது. முதலில் தரையிறங்கியவர்கள் அங்கிருந்த மினிமுகாம் ஒன்றையும் தகர்த்து, தங்களது இலக்கு இடங்களை நோக்கி முன்னேறினர். **தொடரும்...**

சுழியோடி

# தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பா? அல்லது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியா?



தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளாக தமிழீழ வரலாற்றில் விடுதலைப்புலிகள் பரிணமித்திருக்கின்றனர். அக்கால கட்டத்தின் போது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியில் உள்ளவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. காலப்போக்கில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த, தற்போதைய தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகி, தமிழ்மக்களின் பிரதிநிதிகள் தாமென கங்கணங்கட்டி, எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்காக தனது கட்சியை களமிறக்கியுள்ளார்.

தமிழ் மக்களுக்கான சரியான தீர்வொன்றை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்ளமுடியாத இந்த சூழ்நிலையில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் முரண்பட்டுக்கொண்டு தமது அரசியல் காய்நகர்த்தல்களை நகர்த்தி வருகின்றமையானது அரசாங்கக் கட்சிகளுக்கு பாதகமான தன்மைகளை ஏற்படுத்தும் ஒரு செயற்பாடாகவே அமையப்பெறும் என ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் அரசாங்கத்துடன் இணைந்ததாக அமைந்துள்ளது என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி நடாத்துகின்ற ஊடக மாநாட்டிலும், மக்கள் சந்திப்புக்களிலும் தெரிவித்துவருகின்றனர். ஆனால் இதற்குப் பதிலடியாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இன்னமும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கு எதிராக கருத்துக்களைக் தெரிவிக்கவில்லை. முக்கியமானதொரு விடயம், தமிழ்த்தேசிய முன்னணி பற்றி இங்கு குறிப்பிடுவது சிறந்ததொன்றாகும். அன்றிலிருந்து இன்றுவரை தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை என்பவற்றில் உறுதியாக இருக்கின்றார்கள். இருந்த போதிலும் அவர்களின் கடந்தகால பாராளுமன்ற, வடமாகாணசபைத் தேர்தல்களில் வெற்றிபெற முடியாத ஒரு சூழ்நிலை உருவாகிவிட்ட காரணத்தினால் அவர்கள் தேர்தலில் போட்டியிடவில்லை. தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு குரல் கொடுக்கின்றது என்பதை கவனத்தில் கொண்டு, தாம் ஒதுங்கிக் கொள்வதாக கருத்துக்களை கூறிவந்தனர். தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்காக பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அதனொரு நடவடிக்கையாக அக்கட்சியின் காரியாலயங்கள் திறக்கப்படுகின்றது.

ஒற்றையாட்சியின் கீழ் தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படமுடியாது. இணக்கப்பாட்டு அரசியலின் ஊடாக தமிழ்மக்களுடைய பிரச்சினை நீண்டுசெல்லுமே தவிர, மாற்றத்திற்கான வழி இல்லாது போகும். தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமைகள் என்று கூறிவிட்டு சுதந்திர தினத்தில் கலந்துகொண்டமையானது தமிழினத்திற்கும், தமிழ்த்தேசியத்திற்கும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தோண்டிய படுகுழியேயாகும். யுத்தம் நிறைவடைந்த காலகட்டத்தில் சரணடைந்த போராளிகளையும், பொதுமக்களையும் உரிய முறையில் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு மேற்கொள்ளவில்லை.

தேர்தல் காலங்களில் மாத்திரம் தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை, தாயகம் எனக்கூறி மக்களை ஏமாற்றும் செயல்களில் ஈடுபட்டுவருகிறார்கள். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் திம்புபேச்சுவார்த்தைகள் 1985 ஜூலை 08ம் திகதி ஆரம்பமாகி செப்ரம்பர் 18ம் திகதியுடன் முடிவடைந்தது. அதற்குக் காரணம் 1985ம் ஆண்டு செல்வநாயகம் ஐயா அவர்கள் தனித் தமிழீழம் என்று கூறியபோது, திட்டமிட்டவகையில் தமிழர் பகுதிகள் அழிக்கப்பட்டன. அக்காலகட்டத்தில் வடகிழக்கு பிரிக்கப்பட்டது. பொருளாதாரம் மற்றும் இனக்கலவரங்கள் அடக்கு முறைகள் என்பன உருவாக்கப்பட்டது. தமிழர்களுடைய அனைத்து உரிமைகளும் அழித்து ஒழிக்கப்பட்டதன் காரணமாகவே தனித்தமிழீழம் என்று தந்தை செல்வா அவர்களால் கூறப்பட்டது. இதனால் 1982இல் இந்தியா நேரடியாகத் தலையிட்டது. இதன் காரணத்தினால் அக்காலகட்டத்தில் ஆயுதம் ஏந்திப்போராட பல தமிழ்க்குழுக்கள் களமிறக்கப்பட்டன. அப்பொழுது இந்தியா தனித்தமிழீழத்தை விரும்பவில்லை. தமிழினத்தின் அடையாளம் பேணும் வகையில், உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையிலும் உதவமுடியும் என்றார்கள். அந்த அடிப்படையில் தான் திம்புக்கோட்பாட்டை ஆயுதக்கட்சிகள் அனைத்தும் ஏற்றுக்கொண்டது. தனித் தமிழீழத்திற்கு பதிலாக ஐக்கிய இலங்கைக்குள் அடிப்படைத்தேவைகளை பூர்த்தி செய்யும் ஒரு நிலைப்பாட்டை உருவாக்குதல் என்றது இந்தியா. இதனடிப்படையின் கீழ் தீர்வைப் பெற்றுத்தருவதாக இந்தியா தனது கோரிக்கைகளை முன்வைத்தது. அனைத்துக் கட்சிகளுமே ஒரு தேசத்தை வலியுறுத்தி தமது போராட்டத்தை ஆரம்பித்தனர். ஆனால் சிங்களவர்கள் எதையும் கொடுக்கத் தயாரில்லை என்ற நிலைப்பாட்டிலேயே இருந்தனர். 2001ம் ஆண்டு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு உருவாக்கப்படவும். விடுதலைப்புலிகள் அக்காலகட்டத்தில் வலுவாக இருக்க, அதற்காக ஒரு அரசியல் கட்சி தேவை என்ற. காரணத்தினால் அனைத்து இயக்கங்களும் சேர்ந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் தோற்றம் பெற்றது. அதாவது ஆயுதப்பலத்திற்கு அடுத்தபடியாக அரசியல்பலம் உள்ளது என்பதை நிரூபிக்க தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால் அக்காலகட்டத்தில் தனித் தமிழீழத்தை வலியுறுத்தாது, தேசம், சுயநிர்ணய உரிமை என்ற அங்கீகாரத்தை வலியுறுத்துவதே கூட்டமைப்பினுடைய நிலைப்பாடாகவிருந்தது. அந்த தேர்தல் விஞ்ஞாபனத்தை எழுதியது சம்பந்தனும், நானும் தான் (கஜேந்திரகுமார் பொன்னம்பலம்). இதன்பின்னர் யுத்தம் முடிவுக்குவர, 13வது திருத்தச் சட்டத்தை தீர்வாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூட்டமைப்புக்கு இந்தியா கூறியது. இந்தியாவைப் பொறுத்தவரையில் சீனா இலங்கையில் கால்பதித்திருப்பது பெரும் தடையாக இருந்தது. காரணம் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் சீனாவுடன் நெருங்கிய உறவை வைத்திருந்தது. இதற்கிடையில் இந்தியா-இலங்கை ஒப்பந்தமானது கைச்சாத்திடப்பட்டதன் நோக்கம் என்னவென்றால், தமிழ்மக்களுடைய பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமென்பது தான். இலங்கை-இந்தியா ஒப்பந்தம் என்பது இந்தியா தேசிய பாதுகாப்பிற்காக செய்துகொண்ட ஒரு ஒப்பந்தமாகவும் இது கருதப்படுகின்றது. இந்தியா-இலங்கை ஒப்பந்தம் இருக்கும் வரையிலும் சீனாவினுடைய தலையீடு இலங்கையில் கால் ஊன்ற முடியாது என்பதே உண்மை.

13வது திருத்தச் சட்டத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நிராகரிக்குமாகவிருந்தால் இந்திய-இலங்கை ஒப்பந்தமும் செல்லுபடியற்றதாகிவிடும். 13வது திருத்தச்சட்டத்தை நீங்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கூட்டமைப்பில் உள்ள அனைவருக்கும் கூறப்படுகின்றது. இதற்காகத்தான் நாங்கள் அடிப்படையில் சம்பந்தன் அவர்களுடன் முரண்பட வேண்டி ஏற்பட்டது. இங்கேதான் கொள்கை ரீதியிலான முரண்பாடு எமக்கும் கூட்டமைப்புக்கும் ஏற்படுகின்றது. 13வது திருத்தச்சட்டத்தின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படமாட்டாது என்பது இனங்காணப்பட்டதன் பின்னர் ஏன் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். அது அமுல்படுத்தப்பட்டும் பயனற்றதாகவே காணப்படும். மக்கள் தமிழ்த்தேசியம் என்ற விவாதத்தில் இருக்கின்றவரைக்கும் ஒருபோதும் 13வது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்படமுடியாது. தமிழ்த் தேசிய வாதத்தை இல்லாதொழிக்கும் வகையில்தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சிங்கக் கொடியைப் பிடிப்பது, சுதந்திரதினங்களில் கலந்துகொள்வது, இணக்கப்பாட்டு அரசியல் செய்வது இது போன்ற பல்வேறு விடயங்களில் தீவிரம் காட்டி வருகின்றனர். சம்பந்தனைப் பொறுத்தவரையில் தேசியநிறைவேற்று சபையில் பங்காளியாகவே காணப்படுகின்றார். டக்ளஸ் தேவானந்தா எவ்வாறு செயற்பாட்டாரோ அவ்வாறே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் செயற்படுகின்றது. அப்படியாயின் இவர்களுக்கும், அவர்களுக்கும் என்ன வித்தியாசம். இலங்கையில் ஆட்சிமாற்றம் இடம்பெறவேண்டும் என்று இந்தியாவும் தனது தீவிர முயற்சியை மேற்கொண்டது. ராஜபக்ஷவுக்கு ஆதரவாக சீனாவும், மைத்திரிக்கு ஆதரவாக இந்தியாவும் இருந்தது. மைத்திரி அவர்கள் ஆட்சிக்கு வந்தால் சர்வதேச விசாரணையைக் கைவிட்டு உள்ளூர் விசாரணை நடாத்தப்படும் என்று நாங்கள் அப்பொழுதே கூறியிருந்தோம். அதுதான் தற்பொழுது நடக்கின்றது. ஆகவே தான் நாங்கள் ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரியுங்கள் எனக் கூறியிருந்தோம். இப்பொழுது ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. சர்வதேசத்தின் உதவியுடன் மைத்திரி ஆட்சியை கைப்பற்றியதும், உள்ளூர் விசாரணைதான் சரியென்று கூறப்படுகின்றது. 13வது திருத்தமும் ஒரு நிலைக்கு வந்துவிட்டது, பொறுப்புக்கூறல் என்ற விடயமும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறாயின் கூட்டமைப்பின் செயற்பாடுகளில் என்ன முன்னேற்றம் காணப்படுகின்றது. சமஷ்டி என்று தமிழ்த்தேசிய கூட்டமைப்புக் கூறுகின்றது. 13வது திருத்தச் சட்டத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும், அதற்கு முதல் விடுதலைப்புலிகள் இருந்த காரணத்தினாலேயே TNAவிற்கு ஒன்றும் செய்யமுடியாது போனது என 2009 மே மாதம் 29ம் திகதிக்குப் பிறகு இந்தியா கூறுகின்றது. ஆகவே விடுதலைப்புலிகள் நியமித்தவர்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்து ஓரங்கட்டியதன் ஊடாக, அல்லது 13வது திருத்தச்சட்டத்தை ஏற்றுக் கொள்ளாத தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களை கட்சியிலிருந்து விலக்கும் முடிவுக்கு சம்பந்தன் வந்தார்.

கொள்கையில் ஒருமித்து செயற்பட்ட காலத்தில் நேரடியாக விடுதலைப்புலிகளின் தலையீடுகள் காணப்பட்டதன் காரணத்தினால் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அதற்கமைவாக செயற்பட்டோம் என தற்பொழுது கூறிவருகின்றார்கள். ஆனால் உண்மையில் இத்தனை வருட காலங்களாக தொடர்ந்து இடம்பெற்ற யுத்தம். அதன் பின்னரான சமாதானப் பேச்சுக்கள். அனைத்துமே தோல்வியில் முடிவடைய காரணமாக இருந்தவர்கள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பே தான். அரசியல்கட்டமைப்பினை செவ்வனவே செயற்படுத்த விடுதலைப்புலிகளால் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அதன் தலைவரான இரா. சம்பந்தன் அவர்கள் தமிழரசுக்கட்சியினை வளர்த்துக்கொண்டாரே தவிர, தமிழினத்திற்கு எந்த விதமான நன்மைகளையும் பெற்றுக்கொடுக்கவில்லை. மாறாக இந்தியாவின் நயவஞ்சகத்திற்குள் தொடர்ந்தும் உள்வாங்கப்பட்டு, அதே பாணியில் தற்பொழுதும் இந்தியா எங்களுக்கு பெரிதாக செய்யும் என நினைத்துக்கொண்டிருக்கின்றார்.

கடந்த காலங்களில் நாம் பொதுத் தேர்தல்களிலும், மாகாண சபைத்தேர்தல்களிலும் போட்டியிடாததன் நோக்கம், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு நன்மையான விடயங்களைச்செய்யும், தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமைக்கு உட்பட்டு அவர்களது காய்நகர்த்தல்கள் இடம்பெறவில்லை. ஆனால் இன்று தமிழ்த்தேசிய முன்னணிக்கு புலம்பெயர்ந்த மக்கள், இலங்கை வாழ் மக்களிடமும் அமோக வரவேற்பு இருக்கின்றது. கடந்த கால எங்களது செயற்பாடுகளை அவர்கள் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

ஆகவேதான் இன்றைய காலகட்டத்தில் எமது அரசியல் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு சாதகமான நிலைமைகள் தோன்றியுள்ளது. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தேர்தல் காலங்களில் மாத்திரம் போலியான வாக்குறுதிகளை வழங்கி, இரண்டு மூன்று தடவைகள் அல்லது தொடர்ச்சியாக பாராளுமன்றக் கதிரைகளை மாத்திரம் அலங்கரிக்கும் நோக்காகவே இவர்களது செயற்பாடுகள் அமைகின்றது. இந்தியாவினது ஆதரவு தேவை என உரத்துக்கூறியும் அதனது பிரதிபலிப்புக்கள் இதுவரையில் எட்டப்படவில்லை.

மாறாக மோடியின் இலங்கை விஜயமும் அவ்வாறே அமைந்திருந்தது. இலங்கையில் இடம்பெற்ற யுத்தம், இனப்படுகொலைகள் தொடர்பாக அவர் கருத்துக்களை முன்வைக்கவில்லை. வர்த்தக, இராஜதந்திர ரீதியாக மாத்திரமே அவரது இலங்கை விஜயம் அமைந்திருந்தது. ஆனால் தமிழ்த்தேசியக்கூட்டமைப்போ மோடியினது வருகையை சாதகமாக எடுத்துக்கொள்ளவேண்டும் எனக் கூறியிருந்தது. இனியும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நயவஞ்சக பேச்சுக்களை நம்ப மக்கள் தயாராக இல்லை. இலங்கைவாழ் தமிழ்மக்களை நாம் நெருங்கி தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தொடர்பிலான அவர்களது அபிப்பிராயங்களை வினவுகின்றபொழுது, கடந்த காலங்களிலிருந்து நழுவிப்போகும் அரசியலை மேற்கொள்கின்றனர்.

தொடரும்...

நெற்றிப்பொறியன்

# இராணுவ அட்டூழியத்தாலும், வன்முறையாலும் தமிழ் மக்களை அடிபணியச்செய்ய முடியாது - பிரபாகரன்

கடந்தவாரத்தொடர்ச்சி...

அப்போது தலைவர் பிரபாகரன் ஒப்பந்தத்திலுள்ள பலகுறைகளைச் சுட்டிக்காட்டினார். ஆனால் தலைவர் பிரபாகரன் இந்த ஒப்பந்தத்திற்குச் சம்மதம் தெரிவித்துவிட்டதாகப் பொய்யான செய்திகள் இந்திய அதிகாரிகளால் தொடர்பு சாதனங்களுக்குக் கொடுக்கப்பட்டது. உடனே தலைவர் பிரபாகரன் அதை மறுத்து அறிக்கை வெளியிட்டார். தலைவர் பிரபாகரன் தங்கியிருந்த அசோகா ஹொட்டலைச் சுற்றி 'கறுப்புப் பூனைகள்' என்ற இந்திய கொமாண்டோப் படைப்பிரிவினர் காவலுக்கு நிறுத்தப்பட்டனர்.

**இந்திய - சிறீலங்கா ஒப்பந்தம்**

1987ம் ஆண்டு ஆடி மாதம் 29ம் நாள் தமிழீழ மக்களின் ஒப்புதல் இன்றி, தமிழீழ விடுதலைப்புலிகளின் ஒப்புதல் இன்றி, தமிழீழ மக்களின் விடுதலையே தன் உயிர்மூச்சு என்று சொல்லி தமிழீழ விடுதலைப் போரை வழிநடத்திச் செல்லும் தலைவர் பிரபாகரனின் ஒப்புதல் இன்றி அவரை டில்லியில் ஹொட்டலில் பூட்டி வைத்துவிட்டு, பிராந்திய வல்லரசு என்ற இறுமாப்புடன் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சிறீலங்காப் பிரதமர் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுடன் இந்தியாவின் பூகோள நலனுக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். இந்திய இராணுவம் தமிழீழப் பகுதிகளுக்கு 'அமைதிப்படை' என்ற பெயரில் அனுப்பப்பட்டது. ஒப்பந்தம் செய்துவிட்டு இந்தியா திரும்பிய இந்தியப்பிரதமர் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துச் சில உறுதிமொழிகளை அளித்தார். இந்த உறுதி மொழிகளைப் பெற்றுக் கொண்ட தலைவர் பிரபாகரன் தமிழீழம் திரும்பினார்.

**சுதுமலைப் பிரகடனம், திலீபனின் தியாகச்சாவு**

இந்திய - சிறீலங்கா ஒப்பந்தம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை சுதுமலையில் நடந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கூட்டத்தில் பல ல்ட்சம் தமிழ்மக்கள், இந்திய இராணுவத் தளபதிகள், பத்திரிகையாளர்கள், முன்னிலையில் தலைவர் பிரபாகரன் தெளிவுபடுத்தினார். அதில் 'எம்மக்களது விடுதலைக்காக, எம்மக்களது விமோசனத்துக்காக நாங்கள் ஏந்திய ஆயுதங்களை இந்திய அரசிடம் ஒப்படைக்கிறோம்.

தமிழீழ மக்களின் ஒரே பாதுகாப்புச் சாதனமாக இருந்து வந்த இந்த ஆயுதங்களை இந்திய அரசு எம்மிடத்திலிருந்து பெற்றுக் கொள்வதிலிருந்து தமிழீழ மக்களின் பாதுகாப்பு என்ற பெரும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறது. ஆயுதக் கையளிப்பு என்பது இந்தப் பொறுப்பு மாற்றத்தை தான் குறிக்கிறது. நாம் ஆயுதங்களை கையளிக்காது போனால் இந்திய இராணுவத்துடன் மோதும் துர்ப்பாக்கிய சூழ்நிலை ஏற்படும். இதை நாம் விரும்பவில்லை. தமிழீழத் தனியரசே தமிழீழ மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை அளிக்கும் என்பதில் எனக்கு அசையாத' நம்பிக்கையுண்டு. தமிழீழ இலட்சியத்துக்காகவே நான் தொடர்ந்து போராடுவேன். தமிழீழ மக்களின் நலன்கருதி இடைக்கால அரசில் பங்கு பற்ற அல்லது தேர்தலில் போட்டியிட வேண்டிய சூழ்நிலை எமது இயக்கத்துக்கு ஏற்படலாம். ஆனால் நான் எந்தக் காலகட்டத்திலும் தேர்தலில் பங்குபற்றப்போவதில்லை. இதை நான் மிகவும் உறுதியாகச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்" என்றார்.

இதன் பின்னர் தலைவர் பிரபாகரனின் உத்தரவின் பேரில் ஆயுதங்கள் பலாலிஇராணுவமுகாமில்வைத்துஇந்திய இராணுவத்திடம் கையளிக்கப்பட்டது. ஆனால் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி, தலைவர் பிரபாகரனுக்குக் கொடுத்த எந்தவொரு வாக்குறுதியையும் நிறைவேற்றாது இழுத்தடித்து வந்ததோடு, தமிழ்த் துரோகக் குழுக்களை தமிழீழப்பகுதிகளில் கொண்டு வந்துவிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், தமிழீழ மக்களுக்கும் எதிரான செயல்களைப் புரிய அவர்களை ஏவிவிட்டார்.

**திலீபனின் தியாகச்சாவு**

இந்நிலையில் விடுதலைப் போரை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தவும் இந்தியாவின் 'இரட்சகர்" என்ற போலி வேடத்தை மக்களுக்கு புரிய வைக்கவும் தலைவர் பிரபாகரனின் அனுமதியுடன் தியாகி திலீபன், இந்திய - சிறீலங்கா ஒப்பந்தத்தில் இருந்த 5 விடயங்களை நிறைவேற்றும்படி கூறி நீராகாரம் இன்றி சாகும்வரையிலான உண்ணாவிரதத்தை 1987 ஐப்பசி 15ம் நாள் ஆரம்பித்தார்.இந்தியாவின் துரோகப் போக்கினால் ஐப்பசி 26ல் லெப்டினன்ட் கேணல் திலீபன் வீரச்சாவடைந்தார். லெப்டினன்ட் கேணல் திலீபனின் வீர மரணம் குறித்து தலைவர் பிரபாகரன் வெளியிட்ட அறிக்கையில், 'வடக்கு கிழக்கு அடங்கலுமுள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் முன்னெடுக்கும் இந்தச் சாத்வீகப் போராட்டத்தில் அணிதிரள வேண்டும். மக்களின் ஒரு முகப்பட்ட எழுச்சி மூலமே நாம் எமது உரிமைகளை வென்றெடுக்கலாம். திலீபனின் ஈடுஇணையற்ற தியாகத்திற்கு நாம் செய்யும் பங்களிப்பு இதுதான்' என்றார்.

**12 போராளிகள் வீரமரணம்**

திலீபனின் மரணத்தைத் தொடர்ந்து பருத்தித்துறைக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகள் இருவர் உட்பட 17 போராளிகள் சிறீலங்கா கடற்படையால் கைது செய்யப்பட்டுப் பலாலி முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டனர். 'போர் நிறுத்த நேரத்தில், பொது மன்னிப்பு வழங்கப்பட்ட சூழ்நிலையில் விடுதலைப் புலிகளின் தளபதிகளும் போராளிகளும் கைது செய்யப்பட்டது இந்திய - சிறீலங்கா ஒப்பந்தத்திற்கு முற்றிலும் முரணானது' என தலைவர் பிரபாகரன் இந்திய அரசுக்குக் கடும் ஆட்சேபம் தெரிவித்துப் போராளிகளை உடன் விடுவிக்குமாறு இந்திய, சிறீலங்கா அரசுகளைக் கேட்டுக்கொண்டார்.

ஆனால் இந்திய அரசின் துரோகத்தனத்தால் 17 போராளிகளும் சயினைட் உட்கொண்டனர். அவர்களில் 12 போராளிகள் வீரச்சாவை அணைத்துக் கொண்டனர்.இதுபற்றி மக்களுக்கு தலைவர் பிரபாகரன் விடுத்த அறிக்கையில் 'எமது போராளிகளை விடுவிக்க வேண்டுமென இந்திய அரசு சிறீலங்கா ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் உறுதியாகச் சொல்லி இருந்தால் இந்த அநியாயமான சாவுகள் நிகழ்ந்தே இருக்காது. இந்த வகையில் எமது போராளிகளுக்கும் மக்களுக்கும் பாதுகாப்பளிக்கும் பொறுப்பிலிருந்து இந்திய அரசு தவறிவிட்டது. எமக்குப் பாதுகாப்பளிக்கும் அதிகாரமும், பொறுப்பும், தார்மீகக் கடமைப்பாடும் இந்தியாவுக்கு இல்லை என்றால் இந்தியப் படைகள் இங்கிருப்பதன் அர்த்தம் என்ன?

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கும், சிங்கள இராணுவத்துக்கும், சமூக விரோத இயக்கங்களுக்கும் பாதுகாப்பளித்து விடுதலைப்புலிகளை ஒழித்துக் கட்டுவதுதான் இந்திய சமாதானப் படைகளின் நோக்கமா? எமது தலைவர்களுக்கும், போராளிகளுக்கும் பாதுகாப்பு அளிப்பதற்குப் பதில் அவர்களைச் சிங்கள இராணுவத்திடம் ஒப்படைக்கத் துணைபோனது இந்திய சமாதானப் படையினர் எமது மக்களுக்கு இழைத்த மன்னிக்க முடியாத குற்றம். இந்த சூழ்நிலையில்தான் நாம் இனி யுத்த நிறுத்தத்தைப் பேணுவதில்லை என முடிவெடுத்தோம்' என்றார்.

**இந்திய - தமிழீழப் போர்**

1987ஐப்பசி 10ம் நாள் இந்திய - தமிழீழப் போர் எவ்வாறு ஆரம்பித்தது என்பதை அப்போதைய தமிழக முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரனுக்கு 1987 ஐப்பசி 11ம் நாள் தலைவர் பிரபாகரன் எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். 'எமது தளபதிகளும் போராளிகளும் அநியாயமாகக் கொலையுண்ட சம்பவத்தின் எதிரொலியாக தமிழீழம் எங்கும் வன்முறைச் சம்பவங்கள் தலை தூக்கின. இன மோதல்கள் வெடித்தன. இந்த வன்முறை முயற்சிகளுக்கு நாம் தான் காரணம் என்றும் நாம் ஒப்பந்தத்தை முறிக்க முயன்றதாகவும் இந்தியா எம்மீது அபாண்டமான பழிகளைச் சுமத்தியது. இதனைத் தொடர்ந்து கொழும்பில் இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. பந்த், இந்திய தூதுவர் திரு.தீட்சித், இந்திய இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சுந்தர் ஆகியோர் ஒருபுறமும், சிறீலங்கா ஜனாதிபதி ஜெயவர்த்தனா, தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி மறுபுறமும் விடுதலைப்புலிகளை ஒழித்துக் கட்டும் ஒரு சதித்திட்டத்தை உருவாக்கினர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வது என்றும், எமது போராளிகளுக்கு பொது மன்னிப்பு இல்லையென்றும் ஜெயவர்த்தனா அறிவித்தார். விடுதலைப்புலிகளுக்கு எதிராககடும்இராணுவநடவடிக்கைஎடுக்க இந்தியா முடிவு செய்திருப்பதாக திரு. பந்த் அறிவித்தார். இதனைத் தொடர்ந்து இந்திய சமாதானப் படை விடுதலைப் புலிகள் மீது ஒரு விசமத்தனமான தாக்குதலைத் தொடங்கியது.

1987 ஐப்பசி 10ம் நாள் காலை அமைதிப்படையினர் யாழ்ப்பாண நகரிலுள்ள இரு தமிழ் தினசரிப் பத்திரிகைக் (ஈழமுரசு, முரசொலி) காரியாலயங்களுக்குள் புகுந்தனர். பின்னர் பத்திரிகை அச்சு இயந்திரத்திற்குள் வெடிகுண்டுகளை வைத்து அவற்றைத் தகர்த்தனர். அதன்பின் நண்பகல் விடுதலைப்புலிகளை வேட்டையாடி அழிக்கும் நோக்குடன் கோட்டை இராணுவ முகாமில் இருந்த இந்திய அமைதிப்படையினர் யாழ் நகருக்குள் பிரவேசிக்க முயன்றனர். அவர்களை நாம் தடுக்க முயன்றோம். அவர்கள் எம்மை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். நாம் எமது தற்பாதுகாப்புக்காக திருப்பிச் சுட்டோம். போர் மூண்டது. இந்திய இராணுவம்பீரங்கி, டாங்கிபோன்ற கனரக ஆயுதங்கள் சகிதம் குடியிருப்புக்கள் நிறைந்த பகுதிகள் மீது மணிக்கணக்கான தாக்குதல்களை நடத்தினர். தொடர்ந்தும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இதனால் எமது போராளிகள் மட்டுமன்றி பொதுமக்கள் பலரும் பெருமளவில் மடிந்து கொண்டிருக்கிறார்கள். பொது மக்கள் கொல்லப்பட்டாலும் பரவாயில்லை, விடுதலைப்புலிகளை அழித்து விடவேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கிறது இந்திய இராணுவம். நாலாபக்கமும் முற்றுகையிடப்பட்ட நிலையில் நாம் எமது தற்பாதுகாப்பிற்காக போராடி வருகிறோம். உயிருடன் கைதாகி அவமானப்பட்டுச் சாவதைவிட போராடி இறப்பதே மேலானது என்ற இலட்சியத்துடன் நாம் துப்பாக்கி ஏந்தியுள்ளோம்.'

யுத்தம் தீவிரமாக நடைபெற்றது. யாழ் குடாநாட்டை கைப்பற்ற இந்தியப்படை ஒரு மாதகாலம் போரிட்டது. இப்போரைத் தலைவர் பிரபாகரன் தலைமையேற்று விடுதலைப் புலிகளை வழிநடத்தினார். தொடர்ச்சியான கெரில்லாப் போர்முறைதான் இனிமேல் இந்தியப் படையை எதிர்கொள்ளத் தகுந்த போர்முறை எனத் தீர்மானித்து, தலைவர் பிரபாகரன் தனது போராளிகளுடன் தமிழீழக் காடுகளுக்குச் சென்றார். கெரில்லா போர் தொடர்ந்தது. இந்தியப் படையினர் தரப்பில் பெரும் சேதம் ஏற்பட்டது. விடுதலைப்புலிகளை எதிர்கொள்ளத் திராணியற்ற இந்தியப் படை பொதுமக்கள் மீதுதனதுவெறித்தனத்தைக்கட்டவிழ்த்து விட்டுப் பொது மக்கள் பலரைக் கொன்று குவித்தது. பெண்கள் பலரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொலை செய்தது.

இந்தப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் தலைவர் பிரபாகரன் 12.10.1987 இலும் 14.10.1987 இலும் 13.01.1988 இலும் இந்தியப்பிரதமர் இராஜீவ்காந்திக்குப் போர் நிறுத்தத்தை மேற்கொண்டு தம்க்கு அளித்த உறுதி மொழிகளின்படி இடைக்கால அரசைத் தமிழ்ப்பகுதிகளில் நிறுவினால் தாம் ஆயுதங்களை ஒப்படைக்கத் தயாராக இருப்பதாக உறுதியளித்துக் கடிதம் அனுப்பினார். ஆனால் ராஜீவ் காந்தி தலைவர் பிரபாகரனைக் கொன்று, தமிழீழ விடுதலை அரசியல் இலட்சியத்தை அறவே ஒழித்துவிட வேண்டும் என்ற வெறியுடன் தன்னுடைய ஆயுதப் படைகளை இலட்சக்கணக்கில் தமிழீழத்தில் இறக்கிவிட்டார். போர் தொடர்ந்தது.

**தமிழீழத் தேசியத் தலைவர்**

'தமிழீழ விடுதலை' என்று சொல்லிக் கொண்டு ஆயுதம் தூக்கிப் போராடப் புறப்பட்ட தமிழ்க்குழுக்கள் எல்லாம் தமிழீழ மக்களுக்குத் துரோகம் செய்து, 'தமிழீழவிடுதலை' என்ற இலட்சியத்தைக் கைவிட்டு இந்திய, சிறீலங்கா அரசுகளின் கைக்கூலிகளாக மாறிச் செயற்படத் தொடங்கினர். ஆனால் தலைவர் பிரபாகரனோ சாதி, சமய, பிரதேச வேறுபாடு இன்றி, தமிழீழ மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக தமிழீழ விடுதலைப்போரை முன்னெடுத்தார். உலகம் பார்த்து வியந்து நிற்க சின்னஞ் சிறிய தமிழீழ தேசம் வீராவேசத்துடன் போரிட்டது. இலங்கைத் தீவில் அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராக நடைபெறும் போரை தலைமை தாங்கி நடத்தும் ஒப்பாரும் மிக்காரும் அற்ற முதல் தலைவன் பிரபாகரன் தான் என்று சிறீலங்கா நாட்டு சிங்கள மக்களும் புகழ்ந்தனர். இப்போர் உக்கிரமாக நடைபெற்ற காலப் பகுதியில் இருந்து தலைவர் பிரபாகரன் என்ற நிலை 'தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன்' என தமிழ் மக்கள் தமிழீழத்திலும்உலகெங்கிலும்அழைக்கத் தொடங்கினர்.

**அன்னை பூபதி தியாகச் சாவு**

இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகத் தாய்க்குலம் எழுச்சி கொண்டு போராடப் புறப்பட்ட போது தென் தமிழீழத்தில் உள்ள மட்டக்களப்பில் அன்னை பூபதி தன் வயிற்றினில் போர் தொடுத்து சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கினார். விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்து என்று இந்திய அரசுக்குக் கூறி உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கினார். ஆனால் காந்தியம் பற்றி புகழ்ந்துரைக்கும் இந்திய தேசத்துப் பிரதமர் அன்னை பூபதியின் உண்ணாவிரதத்தை எள்ளிநகையாடினார். அன்னை பூபதி 19.04.1988 இல் 'தியாகச் சாவு' அடைந்தார்.

"அன்னை பூபதியின் தியாகச் சாவு பற்றி அறிக்கை ஒன்றை தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் விடுத்தார். 'எமது புனித விடுதலைப் போராட்டத்தில் வரலாற்றுக் காவியமாகிவிட்ட எமது தியாகிகளில் அன்னை பூபதி ஓர் உன்னத இடத்தைப் பெறுகிறார். ஒரு பெண்ணாக, ஒரு தாயாக, ஒரு குடும்பத்தின் தலைவியாக வாழ்ந்து வந்த சாதாரண வாழ்க்கையைத் துறந்து, சாதாரண பற்று உறவுகளைத் துறந்து, தனது இனத்தின் விடுதலைக்காக அவர் தனது உயிரை அர்ப்பணித்தார். இந்திய இராணுவ அடக்குமுறைக்கு எதிராக அவர் தொடுத்த அறப்போர்காந்தியதேசத்தைதலைகுனிய வைத்தது. தனி மனிதப் பிறவியாக அவர் சாகவில்லை. தமிழீழத்தாய்க் குலத்தின் எழுச்சி வடிவமாக அவரது தியாகம் உன்னத வடிவம் அடைகிறது' என்றார்.

தொடரும்...

மறவன்

படுகொலை செய்யப்பட்ட தர்மரத்தினம் சிவராமின் நினைவு தினம் 29 April, 2005 ஆகும். தர்மரத்தினம் சிவராம் கடந்த 2005ஆம் ஆண்டு இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். 'தராக்கி' மற்றும்'எஸ்.ஆர்' ஆகியபுனைபெயர்களில் சிவராம் பல ஆக்கங்களை எழுதிவந்திருந்தார். ஆங்கில ஊடகத்துறை மூலமே சிவராம் தன்னை ஊடகவியலாளராக அறிமுகப்படுத்தினார். எனினும், பிற்காலத்தில் ஆங்கிலப் பத்திரிகைகளில் ஆக்கங்கள் எழுதுவதை சிவராம் நிறுத்திக்கொண்டார்.

இந்த நிலையில், 2004ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் திகதி "நான் சரியென்று உறுதியாகக் கண்டதை எழுதுகின்றேன். அதற்காக எந்த அழிவையும் சந்திக்க தயாராகவே இருக்கின்றேன். ஓடிவிடமாட்டேன்" என்று வீரகேசரி வார வெளியீட்டில் சிவராம் கட்டுரையொன்றை எழுதியிருந்தார். இதேவேளை, கிடைக்கப்போவதில்லை என்பதுதான் ஸ்ரீலங்காவின் அரசியல் நுனிப்புல் மேய்ந்தவர்களுக்குக்கூட மிகமிக அப்பட்டமாகப் புரிந்திடக்கூடிய உண்மையாகும். இதில் யாருக்கும் இம்மியளவும் சந்தேகம் ஏற்பட்டுவிடக் கூடாதென்பதற்காக பொதுக்கட்டமைப்பு வழங்கப்பட்டால் தாம் சந்திரிகாவின் அரசிலிருந்து வெளியேறிவிடுவோம் என ஜே.வி.பி மிகத் தெளிவாக அமெரிக்கப் பிரதிநிதி கிறிஸ்ரினா ரொக்காவிடம் கூறிவிட்டது.

இங்கு நாம் சொல்ஹெய்ம்மைக் கடிந்து கொள்ளமுடியாது. எம்மை இலவு காத்த கிளிகளாக்கும் நோக்குடன்தான் அவர் இங்கு வருகிறார் என்றோ, சந்திரிகா அரசு எமது காதில் வழமைபோல் பூச்சுற்றுவதற்கு அவர் மலர் கோத்துக் கொடுக்கிறார் என்றோ நாம் அவரைக் கண்டனம் பண்ண முடியாது. ஏனெனில் அவர் எமது உடன்பாட்டுடனேயே இலங்கையின் இன முரண்பாட்டைத் நடந்ததோ ஒன்றுமில்லை. மாறாக தமிழ் பேசும் மக்களை பேய்க்காட்டிக்கொண்டு அவர்களை ஒற்றையாட்சி அமைப்பிற்குள் வாழப்பழக்குவதற்கு சொல்ஹெய்மின் வருகைகளும், அதையொட்டி எழும் எதிர்பார்ப்புக்களும் அரிய வாய்ப்பாக அமைந்தன அமைகின்றன.

ஏலவே கூறியதுபோல இதில் நாம் நோர்வேயையோ, அதன் சிறப்பு தூதுவரையோ குற்றஞ்சாட்டவும் முடியாது. குறை கூறவும் முடியாது. அவர்கள் அப்படித்தான் செய்வார்கள். இதில் அவதானமாக இருக்கவேண்டும் என்ற கேள்வி உடனே தோன்றும். முதலாவது சொல்ஹெய்மின் வருகையைச் சுற்றி உண்டாகும் ஊடக ஆரவாரத்தில் மக்கள் அறிந்திருக்க வேண்டிய சில அடிப்படை உண்மைகள் அடிபட்டுப்போகின்றன. இந்தஉண்மைகள் மறைந்துபோவது நுட்பமாகச் செயற்படும் சிங்கள மேலாண்மையாளர்களுக்கு மிக வாய்ப்பாகிவிடுகிறது. ஏன்? பொதுக்கட்டமைப்பு விடயத்தை இதனாலேயே ஸ்ரீலங்கா அரசு சுனாமிப் பொதுக்கட்டமைப்பு விடயத்திலும் மிக நுட்பமாகப் பம்மாத்துவிடத் தொடங்கிவிட்டது. இந்தப் பேய்க்காட்டலுக்கு சொல்ஹெய்மின் வருகைகளும், அறிக்கைகளும் வலுச்சேர்க்கின்றன என்பதுதான் இங்கு மீண்டும் கவனிக்கப்படவேண்டியதாகும்.

இதில்இருக்கும்ஒருபேராபத்தைப் பலரும் கவனிக்கத் தவறுகின்றனர். 1976 இலேயே நாம் தனித் தமிழ் ஈழமே எமது சிக்கலுக்கு ஒரே தீர்வு என்ற நிலைக்குத் தள்ளப்படுவதற்கு அன்று எமக்கிருந்த காரணங்களைவிட இன்று 29 ஆண்டுகள் கழித்து மிக வலுவான காரணங்கள் காணப்படுகின்றன. ஆனால் அப்போதிருந்த அரசியல் ஒருமைப்பாடு, வெகுசன எழுச்சி முனைப்பு என்பன இன்று மழுங்கிக் காணப்படுகின்றன. அது மட்டுமன்றி அமைதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில் எமது மக்களிடையே இருந்த

## "நான் சரியென்று உறுதியாகக் கண்டதை எழுதுகின்றேன். அதற்காக எந்த அழிவையும் சந்திக்க தயாராகவே இருக்கின்றேன். ஓழவிடமாட்டேன்

### - ஊடகவியலாளர் டி.சிவராம்



வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள தமிழ் பத்திரிகையாளர்கள் பலரை கணனி யுகத்திற்குள் கொண்டுவந்த பெருமையும் சிவராமையே சாரும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**மாமனிதர் சிவராமின் இறுதிக் கட்டுரை**

சிங்கள அரசின் கைக்கூலிகளால் கொழும்பில் வைத்து படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் சிவராம் அவர்கள் 24.04.2005 அன்று வெளியான வீரகேசரி வார இதழில் 'எரிக் சொல்ஹெய்மின் வருகைகளும் தமிழ்த்தேசியத்தின் நெருக்கடிகளும்" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையின் முழுவடிவம். இக் கட்டுரையே அவர் எழுதிய இறுதிக் கட்டுரையாகும்.

**எரிக் சொல்ஹெய்மின் வருகைகளும் தமிழ்த்தேசியத்தின் நெருக்கடிகளும்**

- தராக்கி டி.சிவராம்

நோர்வேயின் சிறப்பு சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் வருகிறார். போகிறார். அவர் வரும்போதும் போகும்போதும் தமிழ் ஊடக ஆரவாரம் ஒன்று கிளம்பும். அது மக்களிடையே ஏதோ நடக்கப்போகிறது என்ற எதிர்பார்ப்பை மீண்டும் ஏற்படுத்தும். அவர் வந்த வழியே திரும்பிப்போவார். ஊடக ஆரவாரங்கள் அடங்கும். பின்னர் வழமைபோல அது இது என்று எமது வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கும். சொல்ஹெய்ம் ஒவ்வொரு முறையும் ஏதாவது ஒரு நல்ல மாற்றம் விரைவில் ஏற்படும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டாக்கக்கூடிய வகையில் அறிக்கை விடுகிறார். அல்லது செய்தியாளர்களுக்குக் கருத்துச் சொல்கிறார்.

இன்னும் சில கிழமைகளில் சுனாமிப் பொதுக்கட்டமைப்பு வந்துவிடும் என அவர் இம்முறை இங்கு வருவதற்கு முன்னர்' ஒரு வெளிநாட்டுச் செய்தி நிறுவனத்திற்குச் செவ்வி கொடுத்திருந்தார். அது மட்டுமன்றி புலிகளின் மட்டு-அம்பாறை படைத் தளபதி பானுவைச் சந்தித்த பின்னர் பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்க வேண்டுமென்று ஸ்ரீலங்கா அரசும், விடுதலைப்புலிகளும் மிக ஆர்வத்துடன் இருப்பதாக அவர் அழுத்திக் கூறினார். பொதுக்கட்டமைப்பு கிடைக்கப் போவதில்லை. ஒரு மண்ணாங்கட்டியும் தீர்ப்பதற்கான அனுசரணையாளராக அமர்த்தப்பட்டார். ஏதோ ஒரு தீர்வோ அல்லது அதைநோக்கிய முன்னேற்றமோ வருகிறது என்றுதான் அவர் சொல்வார். சொல்ல முடியும். அவருடைய கதையில் எடுபட்டு பேயராகுவதா இல்லையா என்பது எம்மைப் பொறுத்தது.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்துமாறு பல வெளிநாடுகள் ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன. புலிகளின் தடையை நீடித்து வரும் அமெரிக்காகூட இதையே வலியுறுத்தியுள்ளது. அதுமட்டுமன்றி பொதுக்கட்டமைப்பு சரிவராவிடின் புலிகளுக்கு நேரடியாகவே உதவி வழங்குவதற்கான ஏற்பாடொன்று உண்டாக்கப்படல் வேண்டுமென சில நாடுகள் கருதத் தலைப்பட்டுள்ளன. இதைத் தடுப்பதற்கு ஸ்ரீலங்கா அரசிற்கு நேரடியான எந்த வழியும் தற்போது இல்லை. எனவே இக்கட்டமைப்பு உண்டாக வேண்டும் என்பதில் தானும் அக்கறையாக இருக்கிறேன் என ஸ்ரீலங்கா அரசு அறிக்கை விடுகிறது. அக்கறையாக இருக்கிறோம் ஆனால் சில விடயங்களைப் பேசி முடிவெடுக்க வேண்டியிருக்கிறது எனக் கூறிக்கொண்டிருந்தால் காலம் எப்படியாவது உருண்டோடிவிடும். அந்த ஓட்டத்தில் உதவி வழங்கும் நாடுகளும், புலிகளும், தமிழ் மக்களும் பொதுக்கட்டமைப்பு என்ற விடயத்தை வழமைபோல மறந்துவிடுவார்கள் என ஸ்ரீலங்கா அரசு கணக்குப்போடுகிறது. சொல்ஹெய்மினுடைய வருகைகளும், கூற்றுக்களும் இந்தக் கணக்கிற்கு மிகவும் வலுச்சேர்க்கின்றன.

வடக்குக் கிழக்கின் உடனடி மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்றுவதற்கென ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது (Sihrn) உங்களுக்கு ஓரளவு ஞாபகம் இருக்கும் அதையும் அதன் பின்வந்த சில ஒழுங்குகளையும் ஸ்ரீலங்கா அரசு இப்படித்தான் பம்மாத்திற்று. அப்போதும் சொல்ஹெய்ம் வந்து போனார். இரு தரப்பும் ஏதோவொரு உடன்பாட்டை அண்மித்துக்கொண்டிருப்பதாக அறிக்கை விட்டார். அவருடைய ஒவ்வொரு வருகையையும் விழுந்தடித்துக்கொண்டு எமது ஊடகங்கள் ஆரவாரப்படுத்தின. (இதில் தமிழ்நெற்றும் விதிவிலக்கல்ல) எடுத்துக்கொள்வோம். வாழ்விட அழிவுகள், இடப்பெயர்வு, அகதிகள் என்பவற்றை பற்றியதே இந்தப் பொதுக்கட்டமைப்பாகும். இந்த மூன்றையும் எப்படி எதிர்கொள்வது, எப்படி இவற்றிற்குத் தீர்வு காண்பது என்பது பற்றியதாகவே புலிகளுக்கும், ஸ்ரீலங்கா அரசுக்குமிடையில் நடைபெற்ற ஆறுசுற்றுப் பேச்சுக்களும் அமைந்திருந்தன. நடந்ததென்ன? ஒன்றுமேயில்லை.

வாழ்விட அழிவுகளைச் சரிசெய்வது என்றாலோ, இடம்பெயர்ந்த மக்களைக் குடியமர்த்துவது என்றாலோ தேவைப்படுவது முதலில் நிலம். பின்னர் பணம். இவையிரண்டுமேஸ்ரீலங்கா அரசின் அசைக்கமுடியாத கட்டுப்பாட்டில் உள்ளன. நிலத்தையும், நிதியையும் இவையிரண்டையும் உரிய முறையில் பயன்படுத்துவதற்குத் தேவையான நிறைவேற்று அதிகாரத்தையும் (executive power) எந்தவொரு கட்டமைப்பிற்கும் பகிர்ந்தளிப்பதை ஸ்ரீலங்காவின் அரசியல் யாப்பு தடைசெய்கிறது. இதனாலேயே போரில் அழிந்துபோன எமது வாழ்விடங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கும், இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கும் எந்தவொரு வலுவானதொரு கட்டமைப்பை உருவாக்குவதில் புலிகளும், ரணில் அரசும் தோல்வி கண்டனர். இவ்வாறான ஒரு கட்டமைப்பு ஸ்ரீலங்கா சட்டத்திற்கு முரணானதாக இருக்கும் என அப்போது சிங்களச் சட்டவல்லுனர்கள் சுட்டிக்காட்டினர். அதுமட்டுமின்றி அப்படியொரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டால் அதை ஸ்ரீலங்காவின் உயர் நீதிமன்றம் செல்லுபடியற்றதாக்க வேண்டுமென சில சிங்கள மேலாண்மையாளர்கள் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாகவும் அச்சுறுத்தினர்.

இவையெல்லாம் ரணில் அரசுக்கு நல்ல சாட்டாகிவிட்டன. சுனாமிப் பொதுக்கட்டமைப்பு என்பதும், வாழ்விட அழிவுகள், இடப்பெயர்வு, அகதிகள் என்பவை பற்றியதே. எனவே அதை ஏற்படுத்துவதில் மேற்கூறிய அடிப்படை முட்டுக்கட்டைகள் உண்டாகுவதை எவ்வகையிலும் தடுக்க முடியாது. சுனாமிப் பொதுக்கட்டமைப்பு என்பது வெறுமனே வெளிநாட்டு உதவிப் பணத்தைப் பெறுவது மட்டுமல்ல. அது அடிப்படையில் நிலம் பற்றியதாகும். மக்கள் குடியமரும் இடங்களுக்கு மின்சாரம், நீர் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்துகொடுப்பது பற்றியதாகும். இவற்றைவிட மேலாக மேற்படி அலுவல்களைச் செய்வதற்கான அதிகாரம் பற்றியதாகும் இந்த சுனாமிப் பொதுக்கட்டமைப்பு விடயமாகும். ஸ்ரீலங்காவின் அரசியல் யாப்பு முற்றாகத் தூக்கியெறியப்படாமல் ஒரு வலுவுள்ள சுனாமிப் பொதுக்கட்டமைப்பு எப்படி சாத்தியம் என்பது கேள்விக்குறி. அரசியல் முனைப்பும், எழுச்சியும்கூட மழுங்கிக் காணப்படுகின்றன. அது மட்டுமன்றி அமைதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில் எமது மக்களிடையே இருந்த அரசியல் முனைப்பும், எழுச்சியும்கூட மழுங்கிப் போவதை நாம் காண்கிறோம். இதற்குப் பல காரணங்கள் உள்ளன. காலத்திற்குக் காலம் ஏதோ ஒரு தீர்வு வரப்போகிறது என ஏற்படுத்தப்படும் எதிர்பார்ப்புகளும் இதில் ஒன்று என்பதுதான் உண்மை. நாங்கள் பேயராக்கப்படுகிறோம் என்ற தன்மான உணர்வு மக்களிடையே கூர்மையடைந்தமையாலேயே எமது போராட்டம் எழுச்சியடைந்தது. அந்த அரசியல் எழுச்சியும், முனைப்புமே எமது போராட்டம் தடம்புரளாமல் இருக்க உதவின. இவை மழுங்கிப் போகுமாயின் நாம் சலுகைகளுக்காகச் சோரம் போகின்ற கேவலமானதொரு கூட்டாகிவிடுவோம். எந்த ஒரு அரசும் அரசியல் ஒருமைப்பாடும் அறிவுமுள்ள ஒரு சமூகத்தை ஏமாற்றும்போது அந்த அரசுக்கும், அந்த மக்களுக்கும் முரண்பாடுகள் கூர்மையடைவது தவிர்க்க முடியாதது. இவ்வாறான முரண்பாடுகள் ஒருகட்டத்தை அடையும்போது அவை தமக்கெதிரான போராட்டங்களாக வெடிக்காமல் இருக்க அரசுகள் பல வழிகளைக் கையாளுகின்றன. அவற்றில் ஒன்று மாய எதிர்பார்ப்புகளை உண்டாக்குவதாகும்.

கருணா குழுவின் சாட்டில் ஸ்ரீலங்கா படைகள் கிழக்கில் கெடுபிடிகளை அதிகரித்து வந்தன. பொருளாதார வளர்ச்சியும், வேலைவாய்ப்புகளுமின்றி வடக்கு-கிழக்கில் எமது மக்கள் இன்னமும் வாழ்கின்றனர். போர் அழிவுகள் இன்னமும் மாறாது உள்ளன. யாழ்ப்பாணத்தில் தமது காணிகளையும், வீடுகளையும், ஊர்களையும் ஸ்ரீலங்கா படைகளிடம் பறிகொடுத்த பல்லாயிரக்கணக்கான மக்கள் இன்னமும் நாதியற்றுக் கிடக்கின்றனர். தமிழ்மொழி புறக்கணிப்பு இன்னமும் தொடர்கிறது. இப்படியே பல இன்னல்களைக் கூறிச் செல்லலாம்.

இவற்றையெல்லாம் விட சுனாமியும் பேரழிவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. இன்றுவரை எதற்கும் தீர்வில்லை. ஆனால் இவையெல்லாம் எமது மக்களிடையே எந்தவிதமான அரசியல் கோபத்தையும் உண்டாக்கவில்லை. இந்த இன்னல்கள் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு எதிராக அவர்கள் அணிதிரளவில்லை. திரட்டப்படுவதிலும் அதிகம் நாட்டம் காட்டுவதில்லை. யாழ்ப்பாணத்திலோ, மன்னாரிலோ, வவுனியாவிலோ, மட்டக்களப்பிலோ அரசியல் பேரணிகளுக்கு வருகின்ற மக்களின் தொகை வீழ்ச்சியடைந்துள்ளது என்பது மறைக்க முடியாத உண்மை. அவர்களிடம் விடுதலை உணர்வு இருக்கின்றது.

12ஆம் பக்கம் பார்க்க...

மறவன்

# பிராந்தியச் செய்திகள்

## மன்னார் மடுக்கரையில் இளைஞன் ஒருவன் நீரில் மூழ்கி பலி



மன்னார் மடுக்கரை மல்வத்துஓயா ஆற்றில் இளைஞன் ஒருவன் மூழ்கி பலியாகிய சம்பவம்ஒன்று வியாழக்கிழமை நடைபெற்றுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் முகமட் நசீன் வயது (18) என அடையாளம் காணப்பட்டுள்ளார். சடலம் மன்னார் பொது வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு பின் திடீர் மரண விசாரணை அதிகாரியின் மரண விசாரணைக்கு பின் உறவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 13ம் திகதி பனந்துறையை சேர்ந்த குடும்பம் ஒன்றும் அவர்களின் நண்பர்கள் சிலரும் கொழும்பு பாணந்துறையில் இருந்து மன்னார் சிலாவத்துறையில் உள்ள அவர்களது உறவினர் வீட்டிற்கு வந்து தங்கியுள்ளனர்.சம்பவதினமாகிய அன்று அவர்களின் உறவினர்கள் எட்டு சிறுவர்கள் உள்ளடங்கலாக 21 பேர் மடுக்கரை பகுதியிலுள்ள மல்வத்து ஓயா அற்றங்கரைக்கு அருகாமையில் பகல் வேளையில் சமைத்து உணவு உண்டு உல்லாசமாக இருந்துள்ளனர்.

இதன்போது மாலை மூன்று இளைஞர்கள் வாகன டயர் ஒன்றின் டியூப் மூலம்ஆற்றில்நீந்திவிளையாடியுள்ளனர். இதன்போது இளைஞனின் கையிலிருந்த பந்து ஒன்று ஆற்றில் விழுந்துள்ளது. இதனை அடுத்து இவ் இளைஞர்களில் ஒருவர் குறித்த டியூப்பில் இருந்து இறங்கி குறித்த பந்தை எடுக்க முயற்சித்த வேளை யிலே ஆளம் கூடிய பகுதியாகவும், இளைஞனுக்கு நீந்த தெரியாமையாலும் ஆற்றில் இழுத்து செல்லப்பட்டுள்ளார்.

இதன்போது அவரின் உறவினர்கள் அவரை காப்பாற்ற எடுத்த முயற்சியும் பலனளிக்கவில்லை. இதனை அடுத்து இவ்விடயம் தொடர்பாக கிராம சேவகர் ஊடாக பொலிஸ், கடற்படை ஆகியோருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து இங்கு வந்த அவர்கள் கடந்த வியாழன் முதல் வெள்ளிக்கிழமை வரை சுழியோடிகளுடன் இணைந்து தீவிர தேடுதலில் ஈடுபட்டு வெள்ளிக்கிழமை மாலை 4:30 மணியளவில் குறித்த இளைஞன் சடலமாக மீட்கப்பட்டார்.

## ஹலோ ட்ரஸ்ட் நிறுவன ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்



கிளிநொச்சியில் ஹலோ ட்ரஸ்ட் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தில் பணியாற்றிய நூற்றுக்கணக்கான ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் இன்றைய தினம் (25.04) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வந்த பணியாளர்களில் 200 பணியாளர்களைத் தவிர ஏனைய 450 பணியாளர்கள் நிதியின்மையால் வேலை யில் இருந்து நிறுத்தப்படவுள்ளதாக ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்நிலையிலேயே குறித்தபணியாளர்கள் இன்றுநிறுவனத்திற்கு முன் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நிறுவனத்தில் தற்போது காணப்படுகின்ற நிதியை கொண்டு அனைத்து ஊழியர்களுக்கும் சம காலத்தில் வேலைவாய்ப்பை வழங்க வேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை முன்வைத்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

## நீரில் மூழ்கி ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் பலி

தங்காலை பிரதேசத்தின் பழைய தங்காலை வீதியிலுள்ள கடற்கரைக்கு காலை (25.04.2015) சென்ற ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். இவர்கள் கொழும்பை சேர்ந்தவர்கள் என பொலி ஸார் தெரிவித்துள்ளனர். திருமண வீடொன்றுக்காக ஹம்பாந்தோட்டை சென்றிருந்த சந்தர்ப்பத்திலேயே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். தாய் உள்ளிட்ட இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

31 வயதான தாய், பத்து, ஆறு மற்றும் இரண்டரை வயதான அவரது பிள்ளைகளுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். மேலும் மற்றுமொரு குழந்தையின் சடலத்தை பொலி ஸார் தேடிக்கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை தங்காலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 150 வயதான மரம் முறிந்ததில் எண்மர் காயம்

ஹட்டன், கொட்டகலை டெனின்டன் தோட்டத்தில் 150 வருடம் பழைமையான மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் 08 பேர் காயமடைந்துள்ளனர். இரு வீடுக ளின் கூரைகளின் மேல் இன்று காலை (25.04.2015) இம்மரம் முறிந்து விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மரம் விழுந்ததில் காயமடைந்தவர்கள் கொட்டகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் ஒருவர் நாவலப்பிட்டிய வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சை பெறுவதற்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். நாட்டில் தொடர்ந்து நிலவிவரும் சீரற்ற காலநிலை யின் காரணமாக மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும் அனரத்த முகாமைத்துவ மத்திய நிலை யம் அறிவுறுத்தியுள்ளது.

## பெண்களுக்கு வாழ்வாதார உதவி

மன்னாரில் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பத்தலைவிகள், மற்றும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் பெண்கள் என தெரிவு செய்யப்பட்ட 16 பேருக்கு வடமாகாண கடற்றொழில், கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன்தையல்இயந்திரங்களை வழங்கிவைத்தார். பாதிக்கப்பட்ட பெண்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது இத் திட்டத்தின் நோக்கமாகும். குறித்த நிகழ்வு மன்னார் பிரதேச செயலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை (25.04) நடைபெற்றது.

வடமாகாண சபையினால் அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து குறித்த உதவித்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அமைச்சர் டெனிஸ்வரன் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் மன்னார் பிரதேச செயலாளர் வசந்தகுமார் அதன் பிரதி செயலாளர் உட்பட பல உயர் அதி காரிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## பாலகனைக் கழுத்தறுத்து கொன்றது யார்? தொடரும் மர்மம்.



உலகையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கும் தீவிரவாத அமைப்பு ஐ.எஸ்.ஐ.எஸ். இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் கழுத்தை அறுத்து கொலை செய்யும் காட்சிகள் வெளியாகி பெரும் பரபரப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. இந் நிலையில் அதே பாணியில் ஒன்றும் அறியாத பச்சிளம் பாலகனைக் கழுத்தை அறுத்து கொலை செய்த சம்பவம் வவுனியாவில் பதிவாகியிருந்தது.

இச்சம்பவம் இலங்கை முழுவதும் அதிர்ச்சியையும், ஏக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. 10 வயது நிரம்பிய இந்தப் பாலகனைக் கழுத்து அறுத்து கொலை செய்வற்கு யாருக்கு தான் மனம் வரும்...? இது என்ன கொடூரம் எனப் பலரும் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். வவுனியா, நெளுக்குளம், சாம்பல் தோட்டத்தில்வசித்து வந்த சந்திரசேகரன் குடும்பம். மூத்தவன் சுட்டித்தனம் மிக்க சஞ்சய். அவனுக்கு ஒரு தம்பி (வயது 6), ஒரு தங்கை. இந்தக் குடும்பத்தின் வாழ்க்கை அழகாக ஓடிக் கொண்டிருந்த வேளை கடந்த வருடம் கடைக்குட்டியான தங்கை மரணமடைந்தாள்.

அந்த சோகத்தில் இருந்து முழுக் குடும்பமும் மீளாத நிலையில் மீண்டும் அவர்கள் வாழ்க்கையில் விதி விளையாடியுள்ளது. மூத்தவன் சஞ்சய் மிகவும் கொடூரமான முறையில் கடந்த 9 ஆம் திகதி பட்டப்பகலில் கழுத்து அறுத்துக் கொலை செய்யப்பட்டுள்ளான். இம் மாதம் 21 ஆம் திகதி (அதாவது இன்றைய தினம்) தனது 10 ஆவது பிறந்த நாளை கொண்டாட இருந்த நிலையில் அவனை அந்த குடும்பம் இன்று இழந்து தவிக்கின்றது. **தகவல் :- பா.கதீஸன்**

## வெளியேறாவிட்டால் நாங்கள் வெளியேற்றுவோம் - மீனவர்கள் எச்சரிக்கை

முல்லைத்தீவு, மாத்தளன் பகுதி யில் கடற்றொழிலாளர் சங்கத்தின் அனுமதியில்லாமல் கடலட்டை பிடிப்பதற்காக வந்திருந்த வேறு பிர தேச மீனவர்களை நாளை மறுதினம்(26.04) ஞாயிற்றுக்கிழமைக்குள் வெளியேறுமாறு எச்சரித்திருக்கும் மக்கள், வெளியேற மறுத்தால் வெளியேற்றப்படுவீர்கள் என காட்டமாக எச்சரிக்கை விடுத்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் போருக்குப் பின்னர் அதிகரித்திருக்கும் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல்களினையடுத்து மாவட்டத் திற்குள் புதிதாக வேறு பகுதி மீனவர்களுக்கு அனுமதி வழங்குவதில்லை என மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்கள் மற்றும் சமாசம் ஆகியன தீர்மானம் எடுத்திருந்தன.

இந்நிலையில் (24.06 அன்று) மாத்தளன் பகுதியில்,வேறு மாவட்டத்தைச் சேர்ந்த 5 கடற்றொழிலாளர் குழுமங்கள் வந்து மக்களுடைய பகுதியில் வாடிகளை அமைத்து தங்கியிருந்து அட்டை பிடிக்கும் தொழிலை செய்ய முயற்சித்துள்ளனர். இந்நிலையில் இன்றையதினம் (25.06) அப்பகுதி மக்கள், கடற்றொழிலாளர் சங்க தலைவர் மற்றும் மாவட்ட சமாசத் தலைவர் ஆகியோர் நேரில் சென்று, குறித்த கடற்றொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தைநடத்தியபோதுஇதற்கான அனுமதியை யார் கொடுத்தார்கள் என வினவியுள்ளனர்.

இதன்போதுகுறித்தகடற்றொழிலாளர்கள் தமக்கு அனுமதியை மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களம் வழங்கியதாக கூறியிருக்கும் நிலையில் மக்கள் அனு மதி கொடுக்காமல் திணைக்களம், அனுமதி கொடுக்கமுடியாது என சுட்டிக்காட்டியிருக்கும் மக்கள் மற்றும் சமாச, சங்க தலைவர்கள் நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமைக்குள் வாடி கள் அகற்றப்பட்டு வெளியேறாவிட்டால் மக்களால் வெளியேற்றப்படுவீர்கள் என கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில் தாம் வெளியேறுவதாக அவர்கள் கூறியுள்ளனர்.

## பாதையில் வழிகாட்டி அம்புகுறிகள் இல்லாததால் மக்கள் அவதி




மஸ்கெலிய நோட்டன் பிட்ஜ் மற்றும் மஸ்கெலிய நல்லதண்ணி பிரதான நெடுஞ்சாலையில் மவுசாகலை முச்சந்தியில் அமைந்துள்ள வழிகாட்டி பெயர் பலகையில் முறையான வழிகாட்டி அம்புகுறிகள் இல்லாததால் சிவனடிபாதத்திற்கு வரும் பக்தர்கள் பாதை தவறி செல்வது அதிகரித்துள்ளது. ஆகையால் வீதி அபிவிருத்தி அதிகார சபை உடன் நடவடிக்கை மேற்கொண்டு புணரமைக்குமாறு பாதிக்கப்பட்டோர் வேண்டுகோள் விடுக்கின்றனர்.


**தகவல் :- செ.தி.பெருமாள்.மஸ்கெலியா**

## மன்னார் வளைகுடாவில் உயிரற்ற இராட்சத நீலத் திமிங்கலம்

ராமேஸ்வரம் அருகே நீலத்திமிங்கலம் உயிரிழந்த நிலையில் கரை ஒதுங்கியிருப்பது சுற்று சூழல் ஆர்வலர்களிடையே வேதனையை ஏற்படுத்தியுள்ளது. கடல்வாழ் உயிரினங்களின் சொர்க்கம் என அழைக்கப்படுவது மன்னார் வளை குடா உயிர்கோள காப்பக பகுதியாகும். ராமேஸ்வரத்துக்கும், கன்னியாகுமரிக்கும் இடைப்பட்ட நீர்பரப்புமற்றும்நிலப்பரப்பை உள்ளடக்கிய சுமார் 10 ஆயிரத்து 500 சதுர கி.மீ. பரப்பளவை கொண்டுள்ள இந்த உயிர்கோள காப்பக பகுதியில், ராமேஸ்வரத்திற்கும், தூத்துக்குடிக்கும் இடையே 21 தீவுகள் உள்ளன.

பவளப்பாறைகளையும், அதனைச் சார்ந்த பகுதிகளையும் கொண்ட கடல் வளமிக்க பகுதிதான் மன்னார் வளை குடா. தென் கிழக்கு ஆசியாவிலேயே இந்த இடத்தில்தான் உயிரின பன்மயம் அதிகமாக இருக்கிறது. சுமார் 3500க்கும் மேற்பட்ட கடல் வாழ் உயிரினங்கள் இங்கு காணப்படுகிறது. இவற்றில் அரிய வகை யான நீலத் திமிங்கலம் ஒன்று. உலகில் உள்ள உயிரினங்களிலேயே மிகப்பெரிய உயிரி நீலத் திமிங்கலம் ஆகும். மிதவை உயிரிகள், நண்டுகள், இறால்கள், கணுக்காலிகள் போன்றவற்றை உண வாக உட்கொள்ளும் இந்த திமிங்கலங்கள் அழிந்து போகும் அபாயத்தில் உள்ள அரிய வகை உயிரினமாகும்.

இதனை மெய்பிக்கும் வகையில் மண்டபம் தெற்கு கடற்கரை பகுதியில் திமிங்கலம் ஒன்று அழுகிய நிலையில் இறந்து கரை ஒதுங்கியது. சுமார் 40 அடி நீளமும், 15 டன் எடையும் கொண்ட இந்த திமிங்கலம் கடற்கரையோரம் உள்ள பாறைகளுக்கு இணையான தோற்றத்துடன் காணப்பட்டது. ஆழ்கடலில் மட்டுமே வாழக்கூடிய இந்த திமிங்கலம் இந்த கடல் பகுதியில் சென்ற கப்பலில் பல நாட்களுக்கு முன் அடிபட்டு இருக்கலாம் எனத் தெரிகிறது. கப்பலில் அடிபட்ட நிலையில் மேற்கொண்டு நீந்த முடியாமல் உயிரிழந்த நீலத்திமிங்கலம் உயிரற்ற நிலையில் கரை ஒதுங்கியுள்ளது.





## கடத்தலில் வந்த பணத்தில் உல்லாசமாக வாழ்ந்த நடிகை



செம்மரக் கடத்தலில் 20 தமிழர்கள் சமீபத்தில் ஆந்திரா காவல் துறையினரால் சுட்டு கொல்லப்பட்டனர். இதில் பிரபல நடிகர் சரவணனுக்கு இதே செம்மரக் கடத்தல் வழக்கில் தொடர்பு இருப்பதாக கூறப்பட்டது. பின்பு அவரே காவல் துறையினரிடம் தன்னை தேவையில்லாமல் இதில் சிக்க வைக்கின்றனர் என புகார் கொடுத்தார். சமீபத்தில் வந்த தகவலின் படி ஆந்திராவை சேர்ந்த தயாரிப்பாளர் ஒருவர் இந்த கடத்தலில் ஈடுப்பட்டுள்ளார்.

இது மட்டுமின்றி பிரபல நடிகை ஒருவருக்கு இந்த பணத்தில் ஒரு மாளிகையை வாங்கி கொடுத்து சந்தோஷமாக இருந்து வந்ததாக கூறப்படுகிறது. பிரபலங்கள் கடத்தல் செய்தால் கூட சிலர் கண்களுக்கு தெரியாது போல?.

## என்னை அறிந்தாலை ஓரங்கட்டிய ஓ காதல் கண்மணி



மணிரத்னம் இயக்கத்தில் சமீபத்தில் வந்த ஓ காதல் கண்மணி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பு பெற்று வருகிறது. மேலும், வசூல் ரீதியாகவும் வெற்றி பெற்றுள்ளது. இந்நிலையில் சமீபத்தில் வந்த தகவலின் படி இப்படம் அமெரிக்காவில் என்னை அறிந்தால் வசூலை முறியடித்துள்ளதாம்.

படம் வெளியான 4 நாட்களில் அரை மில்லியன் டொலரை தாண்டியுள்ளதாம். இந்த வாரமும் கூட்டம் அலை மோதுகிறதாம். அமெரிக்காவின் டொப் 10 பொக்ஸ் ஒபிஸில் ஓ காதல் கண்மணி 9வது இடத்தை பிடித்துள்ளதாம்.

## அருண் விஜய்க்கு அதிர்ச்சி கொடுத்த கௌதம் மேனன்



நடிகர் அருண்விஜய் நடிப்பில் மிக விரைவில் வெளியாகவுள்ள படம் வா. இப்படத்தின் இசை வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட கௌதம் மேனன் மிக விரைவில் நான் அருண்விஜய்யைகதாநாயகனாகவைத்து ஒரு படம் இயக்க போகிறேன் என்று விழா மேடையிலே அறிவித்தார். இதை சற்றும் எதிர்பார்க்காத அருண் விஜய் அவர் விழாவில் பேசுகையில் தனது மனமார நன்றியை கௌதமுக்கு தெரிவித்தார்.

## விஜய்யை புகழ்ந்து தள்ளிய புலி பட வில்லன்



விஜய்யை பிடிக்காத பிரபலங்களே இருக்க முடியாது. அந்த லிஸ்டில் இப்போது இணைந்திருப்பவர் புலி படத்தின் வில்லன் சரண்தீப். அவர் கூறியதாவது, புலி படப்பிடிப்பில் விஜய் அவர்கள் எனக்கு கொடுத்த ஊக்கம் எனக்கு ஒரு புது நம்பிக்கையை கொடுத்துள்ளது. நான் பேச இருக்கும் டைலாக்ஸ் ஒவ்வொன்றையும் அவ்வளவு அழகாக எனக்கு சொல்லி கொடுத்தார்.

நான் இதுவரை நிறைய பிரபலங்களுடன் வேலை செய்திருக்கிறேன், ஆனால் இவரை போல் நம்பிக்கையூட்டும் ஒரு பிரபலத்தை நான் பார்த்தது இல்லை. புலி படம் பாகுபலி படத்திற்கு இணையாக இருக்கும். இதுவரை யாரும் பார்த்திராத விஜய் இப்படத்தில் இருப்பார், இவ்வாறு சரண்தீப் கூறியுள்ளார்.

## குத்தாட்ட நாயகனாக மாறிய எஸ்.ஜே.சூர்யா



ஐஸ்வர்யா தனுஷ் இயக்கத்தில் வரும் மே 1ம் திகதி வெளியாக இருக்கும் படம் வை ராஜா வை. ஏ.ஜி.எஸ் என்டர்டெயின்மெண்ட் தயாரித்துள்ள இப்படத்தில் கௌதம் கார்த்திக், டொப்ஸி, ப்ரியா ஆனந்த் ஆகியோர் முக்கிய கேரக்டர்களில் நடித்திருக்க, இயக்குனர்கள் வசந்த், மனோபாலா, எஸ்.ஜே.சூர்யா ஆகியோரும் நடித்திருக்கிறார்கள். வழக்கமாக எல்லா படத்திலும் நாயகிகள் தான் குத்தாட்டம் போடுவதை பார்த்திருப்போம், ஆனால் இப்படத்தில் எஸ்.ஜே.சூர்யா குத்தாட்டம் போட்டிருக்கிறார்.

படத்தில்எஸ்.ஜே.சூர்யாவைகுத்தாட்டம் போட வைத்ததற்கு ஒரு முக்கிய காரணம் இருக்கிறது என்கிறார் இப்படத்தின் இயக்குனர் ஐஸ்வர்யா தனுஷ்.

## அஜித்தின் அடுத்த படத்தின் புதிய தகவல்



என்னை அறிந்தால் படத்திற்கு பிறகு அஜித் எப்போது அடுத்த படத்தின் படப்பிடிப்பை தொடங்குவார் என அவரது ரசிகர்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

இதன்நடுவில், மகன் பிறந்தது, சைனஸ் பிரச்சினை என படப்பிடிப்பை அஜித் தள்ளிப்போட்டிருந்தார். இந்நிலையில் அஜித்தின் 56வது படத்தின் படப்பிடிப்பு சைலன்ட்டாக தொடங்கியுள்ளது.

வீரம் சிவா இயக்கும் இப்படத்தில் ஸ்ருதிஹாசன் நாயகியாக நடிக்க, அனிருத் இசையமைக்கிறார். விரைவில் இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வரும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## சூர்யாவை பின்பற்றும் நட்சத்திர கிரிக்கெட் வீரர்



தமிழகத்தில் மட்டுமல்ல சூர்யாவிற்கு இந்தியா முழுவதும் நல்ல ரசிகர்கள் வட்டம் உள்ளது. இந்நிலையில் சில தினங்களுக்கு முன் தன் டுவிட்டர் பக்கத்தில் சூர்யா இந்திய கிரிக்கெட் அணியில் நட்சத்திர ஆட்டக்காரர் சுரேஷ் ரெய்னாவை வாழ்த்தியிருந்தார். இந்நிலையில் சுரேஷ் ரெய்னா தன் டுவிட்டரில் சூர்யாவை பாலோ செய்துள்ளார்.

தமிழ் சினிமாவில் இவர் ரஜினி மற்றும் சூர்யாவைமட்டும்தான்பாலோசெய்கிறார் என்பதே குறிப்பிடத்தக்கது. சூர்யாவின் புகழ் தற்போது வட இந்தியாவிலும் பறக்க ஆரம்பித்துள்ளது.

## விளம்பரத்தால் சர்ச்சையில் சிக்கிய ஐஸ்வர்யா ராய்



நடிகை ஐஸ்வர்யா ராய், அமிதாப் பச்சன், பிரபு மற்றும் பலர் சமீபத்தில் ஒரு பிரபல நகைக்கடையை திறந்து வைத்தனர். அந்த கடையின் விளம்பர படம் தற்போது ஒரு பெரிய சர்ச்சையை கிளப்பியுள்ளது. அந்த படத்தில் ஐஸ்வர்யா ராய் அமர்ந்திருக்கும் போது, ஒரு கறுப்பின சிறுவன் குடை பிடித்திருப்பது போல சித்தரிக்கப்பட்டிருந்தது.

'கருப்பாக இருப்பவர்கள் அனைவரும் அடிமைகள்' என்பதை போலவே இது காட்டுவதாக அனைவரும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதனால் அந்த படத்தை இப்போது விளம்பரத்திலிருந்து நீக்கி விட்டு, மன்னிப்பு கோரியுள்ளனர்.

## பிரபல நடிகரை இயக்குகிறாரா மணிரத்னம்?



மணிரத்னம் இயக்கத்தில் சமீபத்தில் வந்த ஓ காதல் கண்மணி படம்ரசிகர்களை வெகுவாக கவர்ந்து வருகிறது. இந்நிலையில் தற்போது அனைவரின் கேள்வியும் மணிரத்னத்தின் அடுத்த படத்தின் ஹீரோ யார் என்பது தான்?. இதற்கு கிட்டத்தட்ட விடை கிடைத்துவிட்டது. சமீபத்தில் ஒரு பேட்டியில் மணிரத்னம் தான் அடுத்து ஒரு ஹிந்தி படம் தான் இயக்கவிருப்பதாக கூறப்படுகிறது.

மேலும், அப்படத்தில் பெரும்பாலும் ஹீரோ தனுஷாக தான் இருப்பார் என கூறப்படுகிறது. இந்த செய்தி உண்மையானால் தனுஷ் ரசிகர்களுக்கு கொண்டாட்டம் தான்.


## தொலைக்காட்சி தொகுப்பாளரை மணக்கவிருக்கும் சாந்தனு



தமிழ் சினிமாவிற்கு சக்கரகட்டி படத்தின் மூலம் அறிமுகமானவர் சாந்தனு. இவரும் பிரபல தொலைக்காட்சி தொகுப்பாளர் கீர்த்தியும் நீண்ட நாட்களாக காதலித்துள்ளனர்.

தற்போது சாந்தனுவே தன் டுவிட்டர் பக்கத்தில் ஓகஸ்ட் 21ம் திகதி இவரை திருமணம் செய்து கொள்ளவிருப்பதாக தெரிவித்துள்ளார்.' விரைவில் மாப்பிள்ளையாக போகும் சாந்தனு அவர்களுக்கு அன்பான வாழ்த்துக்கள்.

## Living Together கன்செப்ட்க்கு ஓகே சொன்ன டாப்ஸி




தற்போது தமிழ் சினிமாவில் பேயாக வந்து அனைவரையும் மிரள வைக்கிறார் டாப்ஸி. இவர் சமீபத்தில் ஒரு பேட்டியளித்துள்ளார். அந்த பேட்டியில், ஓ காதல் கண்மணி படத்தில் சொன்னதை போல திருமணம் செய்து கொள்ளாமல் இணைந்து வாழ்வது பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டுள்ளனர்.

அதற்கு டாப்ஸி, திருமணம் செய்துகொள்ளாமல் இணைந்து வாழ்வது நல்லதுதான். திருமணம் செய்துகொண்டு பிறகு விவாகரத்து செய்தால் அது இரு குடும்பத்தினருக்கும் பிரச்சினையாக இருக்கும். ஆனால், திருமணம் செய்துகொள்ளாமல் இணைந்து வாழும்போது பிடிக்கவில்லை என்றால் பிரிந்துவிடலாம். இதனால் யாருக்கும் எந்த ஒரு பிரச்சினையும் இருக்காது என்று கூறியுள்ளார்.

## துல்கர் என்னை தவறாக புரிந்து கொண்டார்- ராம் கோபால் வர்மா



யார் இவர்? இவருக்கு என்ன தான் வேண்டும்? என்பது போலவே இந்திய சினிமாவில் இருப்பவர் ராம்கோபால்வர்மா. இவர் சமீபத்தில் துல்கரை புகழ்வதாக நினைத்து கொண்டு, மம்முட்டியை மிகவும் தரக்குறைவாக பேசினார்.தற்போது மீண்டும் துல்கரிடம் இதற்காக மிகவும் மனம்வருந்தி டுவிட்டரில் மன்னிப்பு கேட்டுள்ளார். இதில் 'உயர்ந்த தந்தை ஒருவரின் மிக சிறப்பான மகன் என்ற பொருள்படுமாறே நான் பேசியிருந்தேன் ஆனால் சில முட்டாள்களால் அந்த வகையான வாழ்த்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இங்கு தான் தவறு நடந்து உள்ளது. அவர்களிடம் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் தந்தையிடமும் இதை விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.' என்று டுவிட் செய்துள்ளார்.



# கவிதைப் பூங்கா



## தாயும் மகனும்

உணர்வை உருக்கி உயிர் தந்தாள்
உள்ளத்தை துலக்கி உறவு தந்தாள்
உதிரத்தை கலக்கி பால் தந்தாள்
வயிற்றை சுருக்கி உணவு தந்தாள்
கனவுகளை கருக்கி வாழ்வு தந்தாள்
இப்படி முழு மனிதனாய் வாழ
தன்னையே தந்த தாய்க்கு
மனிதா நீ என்ன தந்தாய்.?

## "ஏழ்மை"

ஏதோ ஒரு சோகம்
புரியாத வழியோடு
புறப்பட்டு விட்டேன்
ஏழ்மையின் காரணமாய்!

பணம் மட்டும் வாழ்கை
என்று வாழும் இந்த
காலகட்டதில் ஏழ்மையின்
கைப்பிள்ளையாய் நான்!

ஆசைகள் மட்டும் ஓராயிரம்
இருந்தும் என்ன பயன்
அதை செயல்படுத்த
இவனிடம் பொருளில்லையே!

இந்த ஏழ்மையின்
வாசலில் நான் மட்டும்
செல்லப்பிள்ளையாய்
பிறந்து விட்டதேன்!

அது பாசம் காட்டுவதால்
நான் பட்டினிகிடக்கிறேன்
அது அன்பு காட்டுவதால்
நான் அழுது தீர்க்கிறேன்!

ஏழ்மையின் காரணமாய்
இன்று என் கண்ணீர்துளிகள் கூட
எனக்கு சொந்தமில்லாமல்
போனதோ!

விரக்தி கொண்ட நான்
இன்று வீர வணக்கம்
எழுதுகிறேன்: நாளை இது
என் காலச்சுவட்டில் பதிவாகட்டும்...

## தயக்கம்

**நிச்சயம் நீ
என்
எதிர்பார்ப்புகளுக்கெல்லாம்
அப்பாற்பட்டவள்
என்று
எண்ணுவதால் தானோ
உன்னை
எதிர்கொள்ளவே
தயங்குகிறேன்**

---

**ஒருவரை இழக்கும்போது
வரும் கண்ணீரை விட
அவரை இழக்கக்கூடாது
என்று வரும்
கண்ணீருக்குத்தான்
வலிமை அதிகம்**

திருக்கோவிலான்

## தமிழ் மொழி

**எனக்கு மட்டும் இறக்கை இருந்திருந்தால்
தமிழ் மொழியை தூக்கி உச்சத்தில்
வைத்திருப்பேன்
ஆனால்
இறக்கை இல்லையென
ஒருபோதும் சிதைந்து போகவில்லை ஏனெனில்
நம்பிக்கை உள்ளது என
நான் பறக்க நினைப்பது
நில்வை பிடிக்கவோ அல்லது
வானை தொடவோ அல்ல
தமிழ் மொழியை பரப்பி
தேசத்தை காக்க வேண்டும் என்பதற்காக
சூரியன் பகலில் மட்டுமே ஒளி வீசும் – ஆனால்
தமிழ் மொழி செம்மொழி என
தன் புகழை எப்போதும் பரப்பிக் கொண்டிருக்கும்
கடலுக்கு எல்லையில்லை
காற்றுக்கு வேலியில்லை
அதுபோல தமிழுக்கு
எப்போதும் அழிவில்லை**

## சிந்தனைக்கு தாடி முளைத்தால்...

**சிந்தனைக்கு சிறகு முளைத்தால்
வானில் பறக்கும்
சிந்தனையில் காதல் மலர்ந்தால்
கவிதை பிறக்கும்
சிந்தனைக்கு தாடி முளைத்தால்
ஞானம் பிறக்கும்**

## ஜாக்கிரதை

**அழகாய் இருக்கும்
பெண்களை விட
தான் அழகு என்ற நினைப்பில்
அலையும் பெண்களிடம்
நண்பா
நீ ஜாக்கிரதையாக
இரு**

## பூ மனம்

**சற்றே தாமதமாக வந்த
எனக்காக காத்திருந்தது,
நீ விட்டுச்சென்ற
பூவின் வாசம்**

## பாடம்

காதலித்துக்கொண்டு
இருப்பவர்களுக்கு எல்லாம்
பாடம் கற்பிக்கப்பட்டு கொண்டு
இருக்கிறது

தோல்வி கண்டவர்க்கு
எல்லாம்... பரீட்சைகள்
நடந்துகொண்டு
இருக்கிறது

இங்கே வினாக்கள்
உண்டு
அங்கே விடைகள் மட்டுமே

## நட்பின் பிரிவு

எல்லோரும் அடைவது
காதல் தோல்விதான்
முதல் முறையாக
நான் அடைந்தேன்
நட்பில் தோல்வி!

என்னையும் நீயாக உணர்வாய்
என்று நான் நம்பினேன்
நீ பலவற்றை உணர்ந்தவன்
என்பதை அறியாமல்

எனது நட்பின் ஆழம் அதிகம்
என நான் நம்பினேன்
உனது நட்பின் அகலம்
என்னவென்று அறியாமல்

நான் யாரிடமிருந்தும்
சிரிப்பை பெற்றதில்லை
எப்பொழுதும் சிரித்துக்
கொண்டே இருப்பதால்
அதில் எனக்கு பஞ்சமில்லை.


முதல் முறையாக உன்னிடமிருந்து
அழுகையை பெற்றேன்

அது என்னிடம் இல்லாமல்
இருந்ததால்

நல்லதோ
கெட்டதோ
பிரிவின் சோகம்
**என்பது எனக்கு மட்டும்தானே!**



# புனைகதைப் புயல்



# முள்ளிடை முகிழ்த்த மலர்

## அன்னக்கிளி

தொடர் - 86

வதனாவின் தாயார் கூறியது ராமுக்கு அதிர்ச்சியாக இருந்தது. இரவு திடீரென அவளுக்கு மயக்கம் ஏற்பட்டு வைத்தியசாலை கொண்டு சென்று அங்கு கஸ்ரப்பட்டு பயந்தடித்து இருக்க வைத்தியர்களோ உடம்பு பலகீனமாக இருக்கிறது என்று ஏசியதுடன், குளுக்கோஸ் ஏற்றினர். ஆனால் இங்கோ அதையெல்லாம் கேட்டுவிட்டு 'எல்லாம் நல்ல விடயம்' என்று அவர் கூறியது அவனை மேலும் குழப்பியது.

"சரியப்பா வடிவாய் பிடிச்சிட்டு இரு உந்த கிடங்கு ரோட்டில நீ விழுந்து ஆஸ்பத்திரில இருந்திடாதை."

மாமனார் கூறியதைக்கேட்டு யோசனையிலிருந்து மீண்டு வந்தவன்.

"போவமே... சரி மாமா நீங்க வாங்கோ..."

என்று கூறி புறப்பட்டான். மோட்டார் சைக்கில் கல்லுகள் கிடங்குகள் கடந்து குறித்த நேரத்துள் வைத்தியசாலையை அடைந்தது. நேரம் முடிவதற்கு இன்னமும் இருபது நிமிடங்களே இருந்தன. அதனால் வதனா போன் எடுத்து என்ன இன்னும் காணயில்லை என்று அடிக்கடி கேட்டுக்கொண்டிருந்தாள். மோட்டார் சைக்கிலை நிறுத்திவிட்டு நிமிரவும் கோல் வந்தது.

"ஆ வந்திட்டம்.... என்ன ஏதாவது வாங்கி வரவா..."

"எல்லாம் கிடக்கு. நீங்க வந்தாக்காணும்.."

"தண்ணிப்போத்தல், பிஸ்கற், ஏதாவது.... வேணுமா? தண்ணி கிடக்கா...?"

"இம் கிடக்கு ஒரு லீற்றர் போத்தல் கிடக்கு அது போதும். இன்னும் வாங்கித்தந்து இங்கேயே இருத்திற பிளானோ."

"வருத்தம் மாறிட்டு எண்டது கதையில தெரியுது."

"கதைச்சுக்கொண்டு நடந்து படியில தடக்கி விழாம கட்பண்ணீட்டு வாங்க.."

அவள் கட் செய்தாள். தமிழைத் தூக்கியவாறு கன்ரீனுக்கு போய் அவளுக்கு பிடித்த கிறீம்பிஸ்கற், கன்டோஸ்என்பனவற்றைவாங்கினான். மாடிப்படிகளில் ஏறும்போது பக்க வாட்டின் கட்டில்கையை தொட்டுத்தட்டி விளையாடினாள். அதற்கு இசைவாக மெதுவாக நடந்தான். அதற்கிடையில் அவள் மீண்டும் போன் எடுத்தாள்.

"வந்திட்டம்...."

கூறும்போது வார்ட்டின் வாசலில் நின்றான். தாயைக்கண்டதும் தமிழ்

"அம்மா...."

என சினுங்கியபடி அவளிடம் போக எத்தனித்தாள். அவள் கையில் குளுக்கோஸ் ஏற்றுவதற்கு போட்டிருந்த ஊசியை கண்டதும் தயங்கினாள். தாய் இருந்த கோலம் ஏதோ அவளுக்கு பிடிக்கவில்லை அல்லது பயத்தை ஏற்படுத்தியது, அதனால் 'அப்பா..' என்று அவனது கழுத்தைக்கட்டிப்பிடித்தபடி மறு பக்கம்திரும்பினாள். அங்கும் கட்டில்களில் ஊசியேற்றப்பட்ட நிலையில் படுத்திருந்த நோயாளிகளை பாத்ததும் பயம் ஏற்பட்டிருக்கவேண்டும்

"வெளீல போவம்"

என்று அடம்பிடித்தாள்.

"பிள்ளை அம்மாட்டை வாங்கோ."

வதனா கூப்பிட்டதற்கு சட்டென திரும்பியவள் அதே வேகத்தில் மறுபக்கம் திரும்பி...

"வெளீல..வெளீல..."
என்று அடம்பிடித்தாள்.

"தம்பி குழந்தைப்பிள்ளையள வெளீல கொண்டு போங்கோ பயந்திடும்."

தாதி அருகில் வந்து கூறினாள். தட்டுத்தடுமாறி பிள்ளைத்தமிழில் சகோதர இனத்தாதி கூறியதை தமிழ் வியப்போடு பார்த்தாள். தன் பேச்சிற்கும் அவள் பேச்சிற்கும் இடையில் ஏதோ ஒற்றுமை இருப்பதைப்புரிந்து கொண்டவள் வியப்புடனும் புன்னகையுடனும் பார்த்தாள்.

"என்ன பபா. பாக்கிறது."

செல்லமாக கேட்டவள் கன்னத்தில்தட்டிவிட்டு அப்பால் சென்றாள்.

"நீங்க தமிழை கொண்டு போய் வெளீல வைச்சிருங்க.. மற்ற நேஸ் வந்தா...கத்துவா..."
"ஏன்..."
"இதுக்கை சின்னப்பிள்ளையள கொண்டு வரக்கூடாதாம் முன்னுக்கு



எழுதியும் போட்டிருக்காம் பாக்க இல்லையே."

"உதையார் பாத்தது."

"சின்னனுகளுக்கு வருத்தம் ஏதாவது தொத்தீடும் எண்டுதான். கதைச்சுக்கொண்டு நிக்காம போங்க..."

வதனாவே கலைத்தாள். அவன் நிற்கக்கூடாது என்பதற்காக அல்ல பிள்ளைக்கும் அவனுக்கும் ஏதாவது நோய்த்தொற்று ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே. பிள்ளைக்கு வருத்தம் என்றால் மருந்து எடுத்து சமாளிக்க முடியும். அவனுக்கு வந்தால் அவளால் என்ன செய்ய முடியும் அவனுக்கு கிட்டவே அவளால் போக முடியாது. முன்பொருதடவை அவனுக்கு காய்ச்சல் வந்து படுத்த போது அவள்பட்ட வேதனைக்கு அளவேயில்லை. அவன் கஸ்ரப்படும்போது கிட்ட இருந்தும் உதவ முடியாத கொடுமையான நிலை இனியும் எற்படக்கூடாது என்பதற்காகத்தான் அவசரப்பட்டு கலைத்தாள்.

ராம்குமார் வெளியில் வந்து வைத்தியசாலைக்கன்ரீனில் பனிஸ் வாங்கிக் கொடுத்தான். அவளுடன் தானும் சாப்பிட்டு ஒரு ரீயும் குடித்தான். இரவிலிருந்து அலைந்ததுடன் மன உளைச்சலுடன் இருந்தவனுக்கு அந்த ரீயும், பனிசும் தெம்பாக இருந்தது. அங்கிருந்து புறப்பட்டு வைத்தியசாலை வளாகத்திலிருந்த சிறிய பூந்தோட்டத்திற்கு சென்றான். அங்கிருந்த ராட்டினம் ஊஞ்சல் என்பவற்றைக்கண்டதும், தமிழ் அவனிடமிருந்து நழுவி இறங்கி ஓடினாள். பின்னால் சென்றவன் அவள் விரும்பியபடி ஊஞ்சலிலும் ராட்டினத்திலும் மாறிமாறி விளையாடினாள்.

பார்வை நேரம் முடிவதற்குள் வந்த வதனாவின் தந்தையாரும் போய் பார்த்துவிட்டு வந்தார்.

"நான் காணிக்கு போக வேணும் வரட்டே.."

"ஓம்மாமா... மாமியாக்கள் நிக்கனமோ.."

"அவை கதைச்சுக்கொண்டு நிக்கினம் ஏதும் தேவையெண்டால் வாறன்."

அவர் போய் சிறிது நேரத்தில் போன் ஒலித்தது. வதனா தான் எடுத்தாள்.

"அப்பாவும் மகளும் எங்க நிக்கிறியள்.?"
"நாங்கள் பூங்காவில விளையாடுறம். அதுசரி அம்மா, மாமியாக்கள் எங்க."

"இஞ்சைடொக்டர்வரப்போறார் எண்டு வெளீல விட்டாச்சு."

"அப்ப மாமிய வீட்டை கூட்டிற்றுப்போகட்டே..."
"அவவை கேட்டு செய்யுங்கோ... அது சரி தங்கட மாமியாருக்கு என்ன சொல்லி கூட்டி வந்தீங்க."

"உனக்கு வருத்தம் ஆஸ்பத்திரில... எண்டு..."
"அது சரி... என்ன வருத்தம்..... சொன்னீங்க..."

"அ...ஆ...சத்தி தலைச்சுற்று எண்டு...."

"(சிரித்து) அ... அது தானே பாத்தன்... நீங்க தான் அவவுக்கு சொல்லியிருக்கிறியள் அவ அப்பிடி யோசிச்சிட்டா...."
"என்ன ஏன் ஏதாவது சொன்னவவே..."
"ஆ... அவ நீங்க அப்பா ஆகீட்டிங்க எண்டு நினைச்சிட்டா."
"எ...என்னண்டு...."

"ஐசோ... பதட்டப்படாதேங்க... அப்பிடியில்லை... அம்மா அப்பிடி நினைச்சிட்டா..."
"அட... இப்ப சொல்லீட்டியளா...."

"இம்... அது வருத்தமில்லை பலகீனம் தான் எண்டு விளக்கமாய் சொல்லீட்டன். டொக்டர் வாறார் பிறகு எடுக்கிறன்."

அவள் கதைத்து சில நிமிடங்களில் அம்மா அவ்விடத்துக்கு வந்தார்.

"என்னை போகட்டாம்... தான் நிக்கிறாவாம்.. தமிழையும் ஏன் ரோட்டுவழிய வைச்சிருப்பான்... என்னையும் பிள்ளையையும் கொண்டுபோய்விடன்."

"இம்... வாங்கோ.... போய்ற்று தேவை எண்டால் வருவம்."

"இப்ப டொக்டர் பாத்தா சில வேளை துண்டு வெட்டுவினம்."

அம்மாவை வீட்டில் விட்டு கடைக்குள் சென்றான். அங்கு வியாபாரத்தை சுதன் கவனித்துக்கொண்டிருந்தான். களைப்பாக இருந்தது. மனசும் ஏதோ வெறுமையாக இருந்தது. ஒரு கதிரையை இழுத்துப்போட்டு சாய்ந்து இருந்தான். சற்று நேரத்தில் போன் சினுங்கியது . ஆவலுடன் எடுத்தான்.

"என்ன வரவா..."

"மதியம் சாப்பாட்டைக்கட்டிற்று பார்வை நேரம்வாங்க...."

"ஏன்.... என்னவாம்...."

"அது... தலை ஸ்கான் செய்ததில றிப்போட் டவுட்டாயிருக்காம் படம்பிடிச்சு பாக்கவேணுமாம்.... பத்து நாள் நிக்க வேணுமாம்"

"உண்மையா...,"

பதட்டத்துடன் திருப்பிக்கேட்டதற்கு அவள் சிரித்தபடி அவள் கூறிய பதில் அவனை அவசரப்படுத்தியது....

அவள் வருவாள்...



# ஆன்மீக உலகம்



## சித்திரா பௌர்ணமி

வானமண்டலத்தில் சூரியனுக்கும், சந்திரனுக்கும் இடைப்பட்ட தூரத்தை "திதி" என்கிறோம். அமாவாசையன்று சூரியனும் சந்திரனும் இணையும் நாளில் மூதாதையர்களுக்கு "திதி கொடுப்பதும், (அன்று சூரிய சந்திரர்கள் ஒரே டிகிரியில் இணைந்திருப்பார்கள்.) பௌர்ணமியன்று சிறப்பான பூஜைகள், வழிபாடுகள் செய்வதும் சிறந்தது. (அன்று சூரிய சந்திரர்கள் சம சப்தமமாக இருப்பார்கள்.) அமாவாசையில் சூரியனுடன் 0 டிகிரியில் இணைந்த சந்திரன், தினமும் 12 டிகிரி நகர்ந்து 15ம் நாளான பௌர்ணமி அன்று 180ம் டிகிரியை அடைகிறது. சூரியனுக்கு சம சப்தமமாகி முழுமையான ஆகர்ஷண சக்தியை (புவியீர்ப்பு) வெளிப்படுத்துகிறது. அதனால் அன்று செய்யும் பூஜைகள், வழிபாடுகள் சிறப்பைப் பெறுகின்றன.

**சிவசக்தி ஐக்கியம்**

சூரியனை பித்ருகாரகன் (தந்தையை நிர்ணயிப்பவர்) என்றும், சந்திரனை மாத்ருகாரகன் (தாயை நிர்ணயிப்பவர்) என்றும் கூறுவர். அதாவது அமாவாசையன்று சூரியனும், சந்திரனும் இணையும் நாளில் மூதாதையர்களுக்கு திதி, தர்ப்பணம் செய்கிறோம். சூரியனுக்கு அதிதேவதையாக பரம சிவனையும், சந்திரனுக்கு அதிதேவதையாக பார்வதியையும் வைத்திருப்பதும் ஆராய்ச்சிக்கு உகந்தது. அமாவாசை, பௌர்ணமி அன்று முறையே சூரிய சந்திர சங்கமத்தையும், சமசப்தமமாக இருப்பதையும் சிவசக்தியின் ஐக்கியம் என்று கூறுவது மிகையாகாது.

**மனித மனத்தின் மீது அமாவாசை, பௌர்ணமி திதிகளின் தாக்கம்**

அமாவாசை, பௌர்ணமி அன்று நிகழும் ஆகர்ஷண சக்தியின் வேறுபாடுகள் மனித மன இயல்புகளில் பெரும் மாறுதல்களை உண்டாக்குகின்றன என்பதை மருத்துவம் ஏற்றுக்கொள்கிறது. இந்தக் காலங்களில் மன நோயாளிகளின் நடத்தையில் மாற்றங்கள் உண்டாகின்றன. மேலும் ஜாதகத்தில் சூரிய சந்திரர்கள் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு சித்தப் பிரமை, மனஅழுத்தம், ஹிஸ்டீரியா போன்றவைகள் உண்டாவதையும் அனுபவ ரீதியாகக் காண்கிறோம்.

இதற்கு ஜோதிடத்தின் மூலமாக காரணங்களைத் தேடுங்கால், சூரியனை ஆத்மகாரகன் என்றும், சந்திரனை மனோகாரகன் என்றும் நமது புராதன நூல்கள் குறிப்பிடுவதன் மகத்துவம் புரிகிறது. நமது ஆத்ம பலம் பெருகினால்தான் நம்மால் இந்த உலகில் சிறப்புடன் வாழ முடியும். கடவுளைத் தேடும் ஆற்றலும் உண்டாகும். அதாவது ஆன்மீகத்தின் மூலமாக ஆத்மபலத்தைப் பெற, இத்தகைய ஜாதக அமைப்பு உதவுகிறது. ப்ராணாயாமம், யோகா போன்றவற்றிற்கு சூரிய பகவானின் அனுக்கிரகம் அவசியம் தேவை. ஆத்மபலம் மேம்பட, மனதின் சக்தி அவசியம். "மனம் வசப்பட்ட உன்னை உணர்வாய் என்பது பெரியோர் வாக்கு. அப்படிப்பட்டமனதை நிர்ணயிப்பவர் சந்திர பகவான். அதனால்தான் சூரிய சந்திரர்களின் பலத்தைப் பெருக்கிக் கொள்வதால், வசிய சக்திகளைப் பெறும் ஆற்றல் உண்டாகிறது.

**பௌர்ணமியின் சிறப்பு**

பௌர்ணமிகளில் சித்திரா பௌர்ணமி தினத்தன்று மாதத்தின் பெயரும், நட்சத்திரத்தின் பெயரும் ஒன்றாகி, சித்திரை மாதத்தில் சூரியன் உச்ச பலம் பெறுகிறார். சந்திரன் சித்திரை நட்சத்திரத்தில் சஞ்சரிக்கிறார். கார்த்திகை மாத பௌர்ணமி தினத்தன்று சூரியன் கார்த்திகை மாதத்திலும், சந்திரன் கார்த்திகை நட்சத்திரத்திலும் சஞ்சரிப்பார். அன்று சந்திரன் உச்ச பலம் பெறுவார். மற்றும் சில பௌர்ணமிகளுக்கு சிறப்புகள் உள்ளன. வைகாசி மாதம் வரும் பௌர்ணமி, விசாக நட்சத்திரத்தில் வரும்.

அன்று முருகக் கடவுள் அவதரித்த தினமாகும். மார்கழி மாதத்தில் வரும் பௌர்ணமி, திருவாதிரை நட்சத்திரத்தில் வரும். அது பரமசிவனின் திரு நட்சத்திரமாகி, ஆருத்ரா தரிசனம் காண பாவங்கள் தொலைந்துவிடும். அன்று ஆனந்த நடனமாடுகிறார் நடராஜப் பெருமான். அபஸ்மாரம் என்னும் முயலகனை தனது திருவடிகளால் மிதித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீநடராஜரை வழிபட்டால், அபஸ்மாரம் என்னும் காக்காய் வலிப்பு நோய் குணமாகும் என்பதும் ஓர் "சிதம்பர ரகசியம்.

தை மாதத்தில் பௌர்ணமி, பூசம் நட்சத்திரத்தில் வரும். அன்று செய்யும் முருக வழிபாட்டிற்கு ஈடு இணை இல்லை. மாசி மாதப் பௌர்ணமி, மக நட்சத்திரத்தில் வரும். அன்று அம்பிகையை வழிபட, தேவியின் பூரண அருள் கிட்டும். பங்குனி மாதத்துப் பௌர்ணமி, உத்திர நட்சத்திரத்தில் வரும். அன்று திருச்செந்தூரில் ஜராவத மண்டபத்தில் 108 சிவலிங்கங்கள் சாட்சியாக ஸ்ரீவள்ளி-ஸ்ரீமுருகர் திருமணம் நடப்பதைப் பார்த்தவர்கள் மறுபிறவி எய்தார் என்பது உண்மை.

மேலும் பஞ்சகோசங்களில் பரமேஸ்வரனுக்கு ப்ராணமய கோசமும், பராசக்திக்கு மனோமய கோசமும் கொடுக்கப்பட்டுள்ளதை ஆராய்ச்சி செய்து பார்க்கையில் நம் வாழ்க்கையில் சூரிய சந்திரர்களின் தாக்கம், இந்தப் பார்வதி-பரமேஸ்வரர் வழிபாட்டினாலும், "நமசிவாய என்னும் திருநாம ஜபத்தினாலும், லலிதா சஹஸ்ரநாம பாராயணத்தினாலும் பெருமளவு நலம் சேர்க்கும் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை என்று உறுதியாகக் கூறலாம்.

## நபிகளின் பொன்மொழிகள்



நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என் விஷயத்தில் ஒருவருக்கொருவர் நேசித்துக் கொள்பவர்களுக்கும் என் விஷயத்தில் அமர்பவர்களுக்கும் என் விஷயத்தில் போட்டி போட்டுக் கொண்டு செலவுசெய்பவர்களுக்கும் எனது பிரியம் உறுதியாகிவிட்டது என்று அல்லாஹ் கூறுகிறான். அறிவிப்பவர்: முஆத் (ரலி) நூல்: அஹ்மத் (21114)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் மறுமை நாளில் எனக்காக நேசம் வைத்துக் கொண்டவர்கள் எங்கே? என்னுடைய நிழலைத் தவிர வேறு நிழல் இல்லாத இந்நாளில் நான் அவர்களுக்கு எனது நிழலைத் தருகிறேன் என்று கூறுவான். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல்: முஸ்லிம் (4655)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்களே! நான் உங்களிடம் இரண்டு விஷயங்களை விட்டுச் செல்கின்றேன். அதைப் பற்றிப் பிடித்திருக்கும் காலமெல்லாம் ஒருபோதும் வழி தவறமாட்டீர்கள். 1. அல்லாஹ்வின் வேதம் 2. அவனது தூதரின் வழிமுறை ' என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி) நூல்: ஹாகிம் 318

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ்வின் சார்பாக நான் ஒரு கருத்தைக் கூறினால் அதைக் கடைப்பிடியுங்கள். ஏனெனில் அல்லாஹ்வின் பெயரால் நான் பொய் சொல்ல மாட்டேன்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர்: தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) நூல்: முஸ்லிம் 4711

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு மனிதருக்கு (மறுமையில் ) நன்மை செய்ய இறைவன் நாடினால் இவ்வுலகிலேயே அவருக்குரிய தண்டனையை முன்கூட்டியே அளித்து விடுவான். ஒரு மனிதருக்கு (மறுமையில்) அல்லாஹ் தீமையை நாடினால் அவருடைய பாவங்களை நிலுவையில் வைத்து நியாயத் தீர்ப்பு நாளில் கணக்குத் தீர்ப்பான் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அனஸ் பின் மாலிக்(ரலி) நூல்: திர்மிதீ 2319

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறை நம்பிக்கையுடைய ஆணும், இறை நம்பிக்கையுடைய பெண்ணும் தமது விஷயத்திலும், தமது பிள்ளைகள் விஷயத்திலும், தமது செல்வங்களிலும் தொடர்ந்து துன்பங்களுக்கு உட்படுத்தப்படுவார்கள். அல்லாஹ்வைச் சந்திக்கும் நாளில் அவர்கள் மீது எந்தக் குற்றமும் மீதமிருக்காது என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி) நூல்: திர்மிதீ 2323

## சாலொமோனின் உன்னதப்பாட்டு

அத்திமரம் காய்காய்த்தது. திராட்சக்கொடிகள் பூப்பூத்து வாசனையும் பரிமளிக்கிறது. என் பிரியமே என் ரூபவதியே நீ எழுந்துவா

கன்மலையின் வெடிப்புகளிலும் சிகரங்களின் மறைவிடங்களிலும் தங்குகிற என் புறாவே உன் முக ரூபத்தை எனக்குக் காண்பி. உன் சத்தத்தை நான் கேட்கட்டும். உன் சத்தம் இன்பமும் உன் முகரூபம் அழகுமாயிருக்கிறது என்றார்.

திராட்சத்தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறுநரிகளையும் நமக்குப் பிடியுங்கள். நம்முடைய திராட்சத்தோட்டங்கள் பூவும் பிஞ்சுமாயிருக்கிறதே.

என் நேசர் என்னுடையவர். நான் அவருடையவன். அவர் லீலி புஷ்பங்களுக்குள்ளே மேய்கிறார்.

என் நேசரே பகல் குளிர்ச்சியாகி நிழல் சாய்ந்துபோகும்வரைக்கும் நீர் திரும்பி குன்றும் பிளப்புமான கன்மலைகளில் குதித்துவரும் கலைமானுக்கும் மலைகளின் குட்டிக்கும் சமானமாயிரும்.

இராக்காலங்களில் என் படுக்கையிலே என் ஆத்தும நேசரரைத் தேடினேன். தேடியும் நான் அவரைக் காணவில்லை.

நான் எழுந்து நகரத்தின் வீதிகளிலும் தெருக்களிலும் திரிந்து என் ஆத்தும நேசரைத் தேடுவேன் என்றேன். தேடியும் நான் அவரைக் காணவில்லை.

நகரத்திலே திரிகிற காவலாளர் என்னைக் கண்டார்கள். என் ஆத்தும நேசரைக் கண்டீர்களா என்று அவர்களைக் கேட்டேன்.

நான் அவர்களை விட்டுக்கொஞ்ச தூரம் கடந்துபோனவுடனே, என் ஆத்தும நேசரைக் கண்டேன். அவரை நான் என் தாயின் வீட்டிலும் என்னைப் பெற்றவளின் அறையிலும் கொண்டுவந்து விடுமட்டும் விடாமல் பற்றிக்கொண்டேன்.

07ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஆனால் அது அரசியல் ரீதியாக அணிதிரளும் அளவுக்கு எழுச்சியுள்ளதாக இல்லை. எரிக்சொல்ஹெய்ம் வருகிறார். அவரைப் புலிகள் சந்திக்கிறார்கள். சிரித்துக்கொண்டே கைகுலுக்குகிறார்கள். எல்லாம் சுமூகமாகப் போகிறது என்பதுபோல் மகிழ்ச்சியாகப் பேசுகிறார்கள். இப்படியான செய்தி விம்பங்களை பொதுமக்கள் திரும்பத் திரும்பக் காணும்போது அவர்களை அறியாமல் உளவியல் தாக்கம் ஒன்று ஏற்படுவது இயல்பு.


விரைவில் எமக்கு தீர்வு கிடைக்கப்போகிறது என்ற உளப்பாங்கை இந்த விம்பங்கள் மக்களிடம் உண்டாக்குகின்றன. அதை மேலும் வலுப்படுத்தும் வகையில் சொல்ஹெய்மின் கூற்றுக்களும் அமைந்துவிடுகின்றன. இவையெல்லாம் நமது மக்களிடையே எழக்கூடிய அரசியல் சூட்சுமங்களைத் தணிக்கின்றன. "ஏதோவொரு தீர்வு அண்மித்துவிட்டது. எனவே நாம் எமதுபாட்டில் இருப்போம்" என்ற அரசியல் மலட்டுத்தனம் அவர்களிடையே பரவுகிறது. புதிய மக்கள் படை (New Peoples Army-NPA ) என்பது எண்பதுகளில் உலகின் மிகப்பெரிய கெரில்லா இயக்கங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது. பிலிப்பைன்ஸ் நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அது போராடி வந்தது. கடந்த பல ஆண்டுகளாக npa நோர்வேயின் அனுசரணையோடு பிலிப்பைன்ஸ் அரசுடன் அமைதிப் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகிறது. (அமெரிக்காவின் பின்னணியிலேயே நோர்வே அங்கும் அனுசரணையாளராக அமர்த்தப்பட்டது) NPA ஐ ஒரு பயங்கரவாத இயக்கமாக ஏலவே அமெரிக்கா தடைசெய்திருந்தது. அமைதிப் பேச்சுக்களில் குறிப்பிட்ட காலம் ஈடுபட்டு வந்தால் தன்மீதான தடையை அமெரிக்கா நீக்கும் எனவும், தனக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்குமெனவும் npa எதிர்பார்த்திருந்தது. ஆனால் npa இன் வளர்ச்சிக்கு அடித்தளமாக இருந்த பிலிப்பைன்சின் கிராமப்புற ஏழை மக்களிடம் காணப்பட்ட அரசியல் முனைப்பும், எழுச்சியும் பேச்சுக்கள் நடந்த காலத்தில் படிப்படியாக வீழ்ச்சியடையலாயின. இன்று npa வலுவிழந்த ஒரு அமைப்பாக காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கிறது.

NPA ஐ புலிகளோடு ஒப்பிட முடியாதென சிலர் கூறலாம். படைபலத்தில் புலிகள் NPA ஐ விட பல நூறு மடங்கு வலுவுள்ளவர்களாக இருப்பது உண்மையாயினும் மக்களின் அரசியல் முனைப்பு வீழ்ச்சியடைவது பற்றிய யதார்த்தத்தை நாம் எதிர்கொண்டே ஆகவேண்டும்.

எமது போராட்ட எழுச்சி மக்களிடையே மழுங்கடிக்கப்படாமல் இருக்கவேண்டுமாயின் நாம் சில வேலைகளை செய்தல் நல்லது. முதலாவது நமது கையில் திட்டவட்டமாக எதுவும் கிடைக்கும்வரை நாம் அதுபற்றிய ஊடக ஆரவாரத்தை சற்றேனும் குறைக்கவேண்டும். பிழையான எதிர்பார்ப்புக்களை மக்களிடம் ஏற்படுத்தும் செய்தி விம்பங்களை கூடியளவு தவிர்க்கவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக ஸ்ரீலங்கா அரசு எமக்கு எதையுமே தரப்போவதில்லை என்ற உண்மையை மக்களிடம் மீண்டும் மீண்டும் சொல்லவேண்டும். அதிலும் குறிப்பாக சொல்ஹெய்ம் வந்துசெல்லும் ஒவ்வொரு முறையும் அதை நாம் உரத்துக் கூறவேண்டும்.

# அறிவியல் உலகம்

## வளைந்த திரையுடன் LG G4 கைபேசி அறிமும்




LG நிறுவனம் இந்த வருடத்தில் வளையும் தன்மைகொண்ட LG G Flex 2 எனும் ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்திருந்தது. இந்நிலையில் தற்போது வளைந்த திரையினைக் கொண்ட LG G4 எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்யவுள்ளது. இதன் திரையானது 5.5 அங்குலமாக காணப்படுவதுடன் மேலிருந்து கீழாக 300 மில்லி மீற்றர்கள் வரை வளைந்ததாக காணப்படுகின்றது.

மேலும் இக்கைப்பேசியில் Octa Core Qualcomm Snapdragon 810 Processor, பிரதான நினைவகமாக 3GB RAM மற்றும் 32GB சேமிப்பு நினைவகம் என்பன தரப்பட்டுள்ளன. இதே வேளை சேமிப்பு நினைவகமானது microSD Card உதவியுடன் 2TB வரை அதிகரிக்கும் வசதியும் தரப்பட்டுள்ளது.

இவை தவிர 16 மெகாபிக்சல்களை (Megapixel) உடைய பிரதான கெமராவினையும் உள்ளடக்கியுள்ள இக்கைப்பேசி இம்மாதம் 28ம் திகதி அறிமுகம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.


## Samsung Galaxy S6 கெமராவின் துல்லியத்தை காட்டும் டெமோ



சம்சுங் நிறுவனம் அண்மையில் Galaxy S6 மற்றும் Galaxy S6 Edge எனும் இருவகையான கைப்பேசிகளை அறிமுகம் செய்திருந்தது. ஏறத்தாழ ஒரே வகையான வசதிகளை உள்ளடக்கிய இக்கைப்பேசிகளில் 16 மெகாபிக்சல்களைக் கொண்ட பிரதான கெமரா, 5 மெகாபிக்சல்களைக் கொண்ட வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கெமரா என்பன தரப்பட்டுள்ளன. இக்கெமராக்கள் மிகவும் துல்லியம் வாய்ந்தவையாகவும், தெளிவான வீடியோ பதிவு மற்றும் புகைப்படங்களை எடுக்கக்கூடிய வகையில் காணப்படுகின்றது.

இதனை விளக்கும் டெமோ வீடியோ ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இக்கைப்பேசிகள் 5.1 அங்குல அளவுடையதும், 2560 x 1440 Pixel Resolution உடையதுமான QHD தொடுதிரையினைக் கொண்டதாகவும் பிரதான நினைவகமாக 3GB RAM, 32GB, 64GB அல்லது 128GB சேமிப்பு கொள்ளளவுடையதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## வீடுகளுக்கான புதிய தானியங்கி பாதுகாப்பு முறைமை



சம காலத்தில் வீடுகளுக்கான பாதுகாப்பிற்காக பல்வேறு தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் Oomi எனப்படும் புதிய தானியங்கி பாதுகாப்பு முறைமை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இம்முறைமையுடன் 7 அங்குல அளவுடைய தொடுதிரைத் தொழில்நுட்பத்தினைக் கொண்ட தொலை இயக்கியும் (Remote Control) தரப்பட்டுள்ளது.

இது தேவைக்கு ஏற்றவாறு முறைமையினை மாற்றியமைப்பதற்கு உதவுகின்றது. சூழலை இலகுவாக இனங்காண ஏதுவாக 8 சென்சர்கள் உள்ளடங்கலாக உருவாக்கப்பட்டுள்ள இம்முறைமை தற்போது நிதி சேர்த்தலுக்காக Indiegogo தளத்தில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

## பாலுடன் தேன் கலந்து குடிப்பதால் கிடைக்கும் நன்மைகள்



பாலுடன் தேன் கலந்து குடித்தால் செரிமானப் பிரச்சினைகள் குணமாவதோடு மட்டுமல்லாமல் உடலுக்கு பல்வேறு விதமான ஆரோக்கியங்களை வழங்குகிறது.

இதில் உள்ள புரோபயோடிக் நல்ல பக்டீரியாக்களின் வளர்ச்சியை அதிகரித்து செரிமானத்தை மேம்படுத்த உதவுகிறது.

கோடை காலங்களில் வெயிலின் தாக்கத்தால் உடலின் ஆற்றல் குறையும், இதனால் பாலுடன் தேன் கலந்து குடித்தால் உடலுக்கு நல்ல ஆற்றல் கிடைக்கும்.

எலும்புகளின் ஆரோக்கியத்தை பேணி காக்க உதவும், பாலுடன் தேன் கலந்து குடித்ததால், எலும்புகளின் வலிமை அதிகரிக்கும்.

இரவு தூங்கும் போது குடித்தால் நிம்மதியான தூக்கம் வரும்.


மலச்சிக்கலால் அவதிப்பட்டு வருபவர்கள், வெதுவெதுப்பான பாலில் தேனை கலந்து, அதனை காலையில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால் மலச்சிக்கல் குணமடையும்.

சளித்தொல்லையால் அவதிப்படுபவர்கள் இதனை குடித்தால், அதில் உள்ள அன்டி பக்டீரியல், உடலில் உள்ள பக்டீரியாக்களை அழித்து சளித்தொல்லையில் இருந்து நிவாரணம் அளிக்கும்.

மேலும் இவற்றில் உள்ள கனிமச்சத்துக்கள் மற்றும் அமினோ அமிலங்கள் இனப்பெருக்க மண்டலத்தை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள உதவுகிறது.

உடல் உள்ள கொழுப்புகளை கரைத்து எடையை குறைக்க உதவுகிறது. நெஞ்செரிச்சல் உள்ளவர்கள் உணவு உட்கொண்ட பின்னர், பாலுடன் தேன் கலந்து குடித்தால் நெஞ்செரிச்சல் குணமாகும்.

## 600 கிலோமீற்றர் வேகத்தில் ஓடும் ரயில் வண்டி உருவாக்கம்




ஜப்பானிய ரயில் ஒன்று அதிவேகமாக ஓடுவதில் முன்னர் இருந்த சாதனையை முறியடித்து புதிய உலகச் சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. பூஜி மலைப் பகுதிக்கு அருகே நடைபெற்ற சோதனை ஓட்டத்தில் இந்த ரயில் மணிக்கு 600 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடி புதிய சாதனையைப் படைத்துள்ளது. இந்த ரயில் வண்டி மிக அதிக காந்த சக்தி மூலம் இயங்குகிறது.

ஓடும் ரயில் தண்டவாளங்களைத் தொடாமல் அதியுயர் காந்த சக்தி மூலமே செயற்படும் இந்த வண்டி, ஈர்ப்பு விசை மற்றும் இதர சக்திகளை சமன்படுத்தி பயணிக்கும். தலைநகர் டோக்யோ மற்றும் நகோயா நகருக்கு இடையே 2027 ஆம் ஆண்டு இந்த ரயில் சேவையை அறிமுகப்படுத்த மத்திய ஜப்பான் ரயில்வே நிறுவனம் எண்ணியுள்ளது. இந்த அதிவேக ரயில் வண்டி 283 கிலோமீற்றர் தூரத்தை நாற்பது நிமிடங்களுக்கும் குறைவான நேரத்தில் பயணிக்கும். ஆனாலும் இந்தச் சாதனை வேகத்தை ரயில் பயணிகள் தமது பயணத்தில் அனுபவிக்க இயலாது என அந்த ரயில் வண்டி சேவையை நடத்தும் ஜப்பான் மத்திய ரயில்வே கூறியுள்ளது. ஏனெனில் மிக அதிகபட்சமாக மணிக்கு 505 கிலோ மீற்றர் வேகத்திலேயே தாங்கள் அதை இயக்கவுள்ளதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

2003ஆம் ஆண்டு மணிக்கு 581 கிலோ மீற்றர் என்ற வேகத்தைப் பதிவு செய்த ஜேஆர் சென்ட்ரல், கடந்த வாரம் மணிக்கு 590 கிலோ மீற்றர் என்ற சாதனையை நிலைநாட்டியது. அதனை அந்தக் கம்பனியே முறியடித்திருப்பது சிறப்பம்சமாகும். மெக்லெவ் ரயில் வண்டி தண்டவாளத்தில் இருந்து 10 சென்ரி மீற்றர் உயரத்தில் வழுக்கிச்செல்வதுடன், மின்னேற்றப்பட்ட காந்தங்களின் மூலம் முன்னோக்கி உந்தப்படுகிறது.


## பாதுகாப்பான விண்வெளி பயணம் – ரூ.18 லட்சம் பரிசு




செவ்வாய் கிரகம் போன்ற பயணத்தில் விண்வெளி வீரர்களுக்கு பாதுகாப்பு வழிமுறைகளை தெரிவிப்பவர்களுக்கு ரூ.18 லட்சம் பரிசு வழங்கப்படும் என, நாசா அறிவித்துள்ளது. புவி வட்ட பாதையை தாண்டி சூரிய மண்டலத்திற்கு வெளியே செல்லும்போது அதிக சக்தி வாய்ந்த, அண்டக காஸ்மிக் கதிர்கள் (ஜி.சி.ஆர்.,) காணப்படுகின்றன. இவற்றில் தாக்குதலில் இருந்து நெடுந்தொலைவு கிரகங்களை ஆய்வு செய்யும் விண்வெளி வீரர்கள் தப்ப முடியாத நிலை உள்ளது. எனவே புவியீர்ப்பு மற்றும் வளி மண்டல பாதுகாப்பு எல்லையை தாண்டி, 500 அல்லது 1,000 நாட்கள் பயணிக்கும் வீரர்களுக்கு, இதன் தாக்குதலில் இருந்து பாதுகாப்பு அளிக்க வேண்டியது முக்கியமாகும்.

இதற்கான வழிமுறையை தெரிவிப்போருக்கு, பரிசுத் தொகை வழங்குவதாக அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான, நாசா அறிவித்துள்ளது. இப்போட்டியில், இம்மாதம் 29ம் திகதி தொடங்கி, யூன், 29ம் திகதி வரை பங்கேற்கலாம் என, தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே நீண்ட விண் பயணத்தில், கதிர்வீச்சின் பாதிப்பை கட்டுப்படுத்துவதற்கான வழிகளை கூறிய, 5 பேருக்கு, நாசா, ரூ.7.20 லட்சம் பரிசளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## கூகுள் Chromebook மடிக்கணனியில் அதிரடி வசதி





இணைய வலையமைப்பில் பல்வேறு சேவைகளை வழங்கி வரும் கூகுள் நிறுவனம், இணைய வலையமைப்பு தவிர்ந்த ஏனைய பல்வேறு இலத்திரனியல் சாதன வடிவமைப்புக்களிலும் காலடி பதித்து வருவது தெரிந்ததே. இவற்றின் ஒரு அங்கமாகவே Chromebook எனும் மடிக்கணனிகளை வடிவமைத்து வெளியிட்டிருந்தது.

தற்போது இந்த மடிக்கணனிகளை பாவிக்கும் பயனர்களுக்காக Box Cloud எனும் ஒன்லைன் சேமிப்பு வசதி யினை வழங்க முன்வந்துள்ளது.

இதன் மூலம் Chromebook பயனர்கள் கோப்புக்களை நேரடியாகவும், இலகுவாகவும் Box Cloud சேமிப்பகத்தில் சேமித்து பயன்படுத்த முடியும்.

## புற்றுநோய் சிகிச்சைக்கு உதவும் புதிய சாதனம் உருவாக்கம்




கொடிய உயிர்கொல்லி நோயான புற்றுநோய்க்கு சிகிச்சை வழங்கக்கூடிய சாதனம் ஒன்றினை MIT ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். புற்றுநோயைக் ஓரளவிற்கு கட்டுப்படுத்தக்கூடிய, ஏற்றுக்கொள்ளப்பட்ட சிலசிகிச்சை முறைகள் காணப்படும் நிலையிலேயே இப்புதிய சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது.

இச்சாதனம்உடலினுள்பொருத்தக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், புற்றுநோய் சிகிச்சைக்காக வழங்கப்படும் பல்வேறு மாத்திரைகளின் திறன்களையும் மதிப்பிடும் திறனையும் கொண்டுள்ளது. மேலும் இதனை 24 மணி நேரத்திற்கு மட்டுமே உடலில் பொருத்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

**உடலுக்கு நன்மை செய்யும் உடற்பயிற்சிகளில், நடைப்பயிற்சி மிகவும் முக்கியமானது. உச்சி முதல் உள்ளங்கால் வரை உடல் முழுமைக்கும் ஒரே நேரத்தில் பயிற்சி கொடுக்க வேண்டுமானால், அது நடைப்பயிற்சியால் மட்டுமே முடியும். இதனால் ஏற்படும் நன்மைகள் ஏராளம். நீரிழிவு நோயை கட்டுக்குள் வைப்பதுடன், மாரடைப்பு வராமலும் தடுக்கலாம். அதிகம் சர்க்கரை சேர்த்த ஜூஸ், திக்காக இருக்கும் தயிர் போன்றவற்றை உட்கொண்டால் எடை கூடும். சர்க்கரையும் பாலும் கலந்த மில்க்ஷேக் வகைகளைத் தவிர்த்து விட்டு, குறைவான சர்க்கரை கொண்ட ஃப்ரெஷ் ஜூஸ் வகைகளை குடியுங்கள். ஆரோக்கியமாக வாழலாம்.**

# விளையாட்டு உலகம்




## பொலிவூட் படத்தில் நடிக்கும் சச்சின் மகள் சாரா?



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர ஆட்டக்காரர் சச்சின் டெண்டுல்கரின் மகள் சாரா இந்தி படம் ஒன்றில் நடிக்கப் போவதாக தகவல் வெளியாகியுள்ளது. சச்சின் டெண்டுல்கர்–அஞ்சலி தம்பதிக்கு 2 குழந்தைகள். இதில் முதல் குழந்தை சாரா (18). இரண்டாவது மகன் அர்ஜூன். இவர் தந்தை வழியில் கிரிக்கெட் வீரராக உருவாக முயற்சி எடுத்து வருகிறார்.

தற்போது நன்றாக வளர்ந்து விட்ட சாரா, மிகவும் அழகாக மட்டுமல்ல, புத்திசாலியாகவும் இருப்பவர். இந்த நிலையில் அவரை நடிகையாக்க முயற்சிகள் நடந்து வருவதாகவும், ஷாஹித் கபூருடன் இணைந்து அவர் நடிக்கப் போவதா கவும் ஒன்லைன் செய்தி ஒன்று குறிப்பிட்டுள்ளது. தற்போது சாரா, திருபாய் அம்பானி சர்வதேச பள்ளியில் படித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## டெஸ்ட் போட்டியில் விளையாட காத்திருக்கும் டேவிட் மில்லர்



தென் ஆபிரிக்க அணிக்காக டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் விளையாட வேண்டும் என்பது எனது கனவாகும் என அதிரடி ஆட்டக்காரர் டேவிட் மில்லர் தெரிவித்துள்ளார். நடப்பு ஐ.பி.எல் போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியில் விளையாடி வரும் மில்லர் ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டார். 'டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தென் ஆபிரிக்க அணிக்காக விளையாட வேண்டும். அதனை நிறைவேற்ற கடுமையாக உழைத்து வருகிறேன்.

எனது கனவு நனவாக சில காலம் பிடிக்கும் என்பது எனக்கு தெரியும். இருப்பினும் அந்த வாய்ப்புக்காக தான் தயாராக காத்து இருப்பேன்' எனக் குறிப்பிட்டுள்ளார். 25 வயதான டேவிட் மில்லர் ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளில் தென் ஆபிரிக்க அணிக்காக விளையாடி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒருநாள் போட்டியில் 350 ஓட்டங்கள் பெற்று உலக சாதனை



லண்டனில் நடைபெற்ற முதல்தர ஒருநாள் போட்டியொன்றில் 350 ஓட்டங்களை குவித்து லிம் லிவ்விங்ஸ்டோன் சாதனை படைத்துள்ளார். லண்டன் தேசிய கிளப் சம்பியன்ஷிப் கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் நடந்து வருகிறது. இதில் கிளாடிஸ் கிளப் அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் நான்ட்விச் அணி 500 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சாதனை வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நான்ட்விச் அணி நிர்ணயிக்கப்பட்ட 45 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 579 ஓட்டங்கள் குவித்தது. பின்னர் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிளாடிஸ் அணி 79 ஓட்டங்களில் சுருண்டு மோசமான தோல்வியை சந்தித்தது. இந்த போட்டியில் நான்ட்விச் கிளப் துடுப்பாட்டக்காரர் 21 வயதான லிம் லிவ்விங்ஸ்டோன் 138 பந்துகளில் 350 ஓட்டங்கள் குவித்து உலக சாதனை படைத்தார்.

இதில் 34 பவுண்டரியும், 27 சிக்சரும் அடங்கும். எல்லாவகையான ஒருநாள் போட்டிகளிலும் ஒரு இன்னிங்சில் வீரர் ஒருவர் குவித்த அதிகபட்ச ஓட்டங்கள் இதுவாகும். இதற்கு முன்பு 2008ம் ஆண்டு ஐதராபாத்தில் நடந்த பள்ளிக்கூட கிரிக்கெட் போட்டியில் ஆந்திர மாநிலத்தை சேர்ந்த நிகிலேஷ் சுரேந்திரன் ஆட்டம் இழக்காமல் 334 ஓட்டங்கள் குவித்ததே உலக சாதனையாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## ரோஹித் சர்மாவிற்கு ரூ.12 லட்சம் அபராதம்




ஐபிஎல் சீசன்–8 கிரிக்கெட் சுற்றுப்போட்டி இந்தியா முழுவதும் உள்ள முக்கிய நகரங்களில் நடைபெற்று வருகிறது. சுற்றுத்தொடரின் 19வது லீக் போட்டி பெங்களூர் சின்னசாமி ஸ்டேடியத்தில் நடைபெற்றது. இதில் பெங்களூர் அணியை 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி வீழ்த்தியது.

இந்த ஐபிஎல் போட்டியில் தொடர்ச்சியாக 4 தோல்விகளை கண்ட மும்பை அணிக்கு இது முதல் வெற்றியாகும். இந்த போட்டியில் மும்பை அணி மெதுவாக பந்து வீசியது தெரிய வந்தது. இதனால் அந்த அணியின் தலைவர் ரோஹித் சர்மாவிற்கு ரூ.12 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது. இந்த சீசனில் விதிக்கப்படும் முதல் அபராதம் இதுவாகும்.

## கிரிக்கெட் அறிவே இல்லாத பாகிஸ்தான் வாரியம் - ரசிகர்கள்

பாகிஸ்தான் அணி 3–0 என்ற கணக்கில் வங்கதேசத்திடம் படுதோல்வியடைந்ததால் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. வங்கதேச சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஒரு போட்டியில் கூட வெற்றி பெறவில்லை. பாகிஸ்தானின் இந்த மோசமான தோல்வியால் பல முன்னாள் வீரர்களும், ரசிகர்களும் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தை கடுமையாக குற்றம் சாட்டி வருகின்றனர். இது தொடர்பாக முன்னாள் பாகிஸ்தான் அணித்தலைவர் இம்ரான் கான் கூறுகையில், பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தில் ஒரு சரியான வரைமுறை இல்லை. அவர்கள் திறமைக்கு மதிப்பதில்லை. வேண்டியவர்களுக்கு வாய்ப்பு தருகிறார்கள். கிரிக்கெட் அறிவே இல்லாதவர்கள் கிரிக்கெட் வாரியத்தில் இருக்கிறார்களே என்று மக்கள் கவலைப்படுகிறார்கள் எனத் தெரிவித்துள்ளார். இதற்கிடையே, தோல்விக்கு பொறுப்பேற்று பயிற்சியாளர் பதவியிலிருந்து வக்கார் யூனிஸ் விலக வேண்டும் என முன்னாள் அணித்தலைவர் ரஷீப் லத்தீப் கூறியுள்ளார்.

## மீண்டும் அணிக்கு திரும்புகிறார் முகமது ஹபீஸ்




பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி வீரரான முகமது ஹபீஸிக்கு பந்துவீச சர்வதேச கிரிக்கெட் பேரவை அனுமதி அளித்துள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரரான முகமது ஹபீஸ் பந்து வீச்சில் சந்தேகம் இருப்பதாக நடுவர்கள் தெரிவித்தனர். இதனால் அவரது பந்து வீச்சு அவுஸ்திரேலியாவில் உள்ள பயிற்சி மையத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அப்போது அவர் ஐ.சி.சி. விதிமுறைக்கு மாறாக பந்து வீசியது தெரியவந்தது. இதனால் கடந்த நவம்பர் மாதம் முதல் அவர் பந்து வீச ஐ.சி.சி. தடை விதித்தது.

இதனால் தனது பந்து வீச்சை ஹபீஸ் சரி செய்தார். இதனைத்தொடர்ந்து கடந்த 9ம் திகதி சென்னையில் உள்ள ஐ.சி.சி. விதிமுறைக்கு உட்பட்ட பந்து வீச்சு மையத்தில் சோதனைக்குட்பட்டார். அப்போது அவரது ஐ.சி.சி. விதிமுறைக்கு உட்பட்டே பந்து வீசியது தெரிய வந்தது. இதனால் அவர் மீதான தடை உடனடியாக நீக்கப்பட்டது.

இதுகுறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய சேர்மன் ஷகார்யார் கான் கூறும்போது, "ஹபீஸ் மீண்டும் அணிக்கு திரும்புவதன் மூலம் பாகிஸ்தான் பந்து வீச்சு மேலும் வலுப்படும். ஹபீஸ் மீண்டும் தனது திறமையான பந்து வீச்சை வெளிப்படுத்துவார் என்று பாகிஸ்தான் அணி நம்புகிறது. சயீத் மற்றும் ஹபீஸ் ஆகியோர் பந்து வீசாதது உலகக்கோப்பை போட்டியில் பாகிஸ்தானை பெரிதும் பாதித்தது" என்றார்.

## பிராந்திய அணியில் சதம் விளாசிய சங்கக்கார



முதல் முறையாக சரே பிராந்திய அணியில் விளையாடும் வாய்ப்பினை பெற்றுள்ள சங்கக்கார ஆரம்பமான போட்டியில் சதம் விளாசியுள்ளார். இலங்கையின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரும் முன்னாள் அணித் தலைவருமான குமார் சங்கக்கார கடந்த உலகக்கிண்ண தொடருடன் ஓய்வு பெற்றார். ஓய்வுக்கு பின் இங்கிலாந்தில் நடைபெற்று வரும் சரே பிராந்திய அணியில் முதல் முறையாக விளையாடும் வாய்ப்பினை குமார் சங்கக்கார பெற்றார்.

மூன்றாவதாக களமிறங்கிய சங்கக்கார முதல் நாள் ஆட்டம் நிறைவடைந்த போது ஆட்டமிழக்காமல் 112 ஓட்டங்கள் (14 பவுண்டரி, 1 சிக்சர்) பெற்றிருந்தார். அத்துடன் சக வீரரான ஸ்டீபன் டேவிஸ் உடன் இணைந்து 213 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் விலை ரூ. 5 லட்சம் மட்டுமே




ஐபிஎல் தொடரில் முக்கிய அணியான சென்னை சூப்பர் கிங்ஸின் மதிப்பு ரூ.5 லட்சம் மட்டுமே என, மதிப்பீடு செய்யப்பட்டது பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. கடந்த 2008ல் தொடங்கிய ஐபிஎல் தொடரில், 2010, 2011ல் சாம்பியன் ஆன சென்னை அணி, 2008, 2012, 2013ல் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. மேலும், அணித்தலைவர் டோனி தலைமையில் 'நம்பர்–1' ஆக உள்ளது.

இதனிடையே, 6வது ஐபிஎல் தொடரில் நடந்த சூதாட்ட விசாரணையில், சென்னை அணியை இந்தியா சிமெண்ட் நிறுவனம் வாங்கியது தவறு என நீதிமன்றம் தெரிவித்தது. இதைத் தொடர்ந்து சென்னை அணியின் பங்குகள், 'சென்னை சூப்பர் கிங்ஸ் லிமிடெட்' என்ற துணை நிறுவனத்துக்கு மாற்றப்பட்டன. ஒரு ஐபிஎல் அணியை விற்கும் போது அதன் மொத்த விலையில் 5 சதவீதத்தை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்துக்கு கட்டணமாக செலுத்த வேண்டும். இந்நிலையில் சென்னை அணியின் மதிப்பு ரூ.5 லட்சம் என, நிர்வாகிகள் மதிப்பிட்டுள்ளனர். அதாவது, கடந்த 2008ல் ரூ.355 கோடிக்கு வாங்கப்பட்ட சென்னை அணி, 7 ஆண்டுகள் கழித்து ரூ.5 லட்சத்துக்கு விற்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, சென்னை அணியை விற்ற வகையில், 5 சதவீத உரிமத் தொகையாக, பிசிசிஐக்கு ரூ.25 ஆயிரம் மட்டும் கொடுத்து விடலாம் என திட்டமிட்டுள்ளனர். ஆனால் புதிய ஐபிஎல் குழு சென்னை அணி மதிப்பை குறைத்து காட்டியதை ஏற்க மறுத்தது. ஏனெனில், சென்னை அணியின் கடந்த ஆண்டு மதிப்பு ரூ.450 கோடி என, அமெரிக்க நிறுவனம் ஒன்று மதிப்பீடு செய்தது. இதன் படி, சென்னை அணி விற்றதில் பி.சி.சி.ஐ உரிமத்தொகையாக சுமார் ரூ. 22.5 கோடி (5 சதவீதம்) வரை கிடைத்திருக்க வேண்டும். சென்னை அணி நிர்வாகத்தின் இச்செயல் பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

## சச்சின் சாதனையை முறியடிக்கும் மேத்யூஸ்

இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சினின் டெஸ்ட் சாதனையை அஞ்சலோ மேத்யூஸ் முறியடிப்பார் என்று இலங்கை அணியின் முன்னாள் மேலாளர் டிஸொய்சா கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், ஜெயவர்த்தன, சங்கக்கார ஆகியோர் அணியில் இல்லாத நிலையில் அவர் தலைமைத்தாங்க வேண்டும், அப்போது அவரது திறமையை நாம் உண்மையில் பார்க்க முடியும். 2015 உலகக்கிண்ணப் போட்டிகள் வரை, அஞ்சலோ மேத்யூஸின் தற்போது செல்லும் பாணியில் அவர் சென்றால் சச்சின் டெண்டுல்கரின் டெஸ்ட் சதங்கள் சாதனையை முறியடிக்க முடியும். அதே போல தற்போது வைத்திருக்கும் சராசரியை நீடித்து நிலைக்கச் செய்ய முடியும். இலங்கை கிரிக்கெட்டுக்கு அவர் இன்னும் நிறைய பங்களிப்புகளை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

46 டெஸ்ட் போட்டிகளில் இதுவரை விளையாடியுள்ள மேத்யூஸ், 3,193 ஓட்டங்களை 51.50 என்ற சராசரியின் கீழ் எடுத்துள்ளார். இதில் 4 சதங்கள், 20 அரைசதங்கள் அடங்கும். மேலும் 156 ஒருநாள் போட்டிகளில் 3,783 ஓட்டங்களை 01 சதம் மற்றும் 26 அரைசதங்களுடன் எடுத்துள்ளார்.

# உலகச் செய்திகள்

WORLD WATCH

## நடுவானில் ஜனாதிபதியை திகிலூட்டிய துணை விமானி



செர்பிய ஜனாதிபதி பயணித்த விமானம் திடீரென குலுங்கி அவசரமாக தரையிறக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. செர்பிய ஜனாதிபதி டோமிஸ்லோவ் நிக்கோலிக் (Tomislav Nikolic), போப்பாண்டவரை சந்திக்க கடந்த வாரம் Falcon 50 ரக விமானத்தில் தன் உதவியாளருடன் பயணித்தார்.

இந்நிலையில் விமானம் நடுவானில் சென்று கொண்டிருந்தபோது, துணை விமானி வைத்திருந்த தேநீர் கைத்தவறி பேனல் மீது கொட்டியுள்ளது. அப்போது அதை அவர் துடைக்க முயன்றதில், ஓட்டோ பைலட் (Auto pilot) ஓப் (off) ஆகிவிட்டது. இதனால் விமானம் திடீரென குலுங்கியதுடன், உயரமும் குறைந்து இறங்க தொடங்கியது. இதையடுத்து ஜனாதிபதியும், அவரது உதவியாளரும் விமானம் நொறுங்கப் போகிறதோ? என அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

ஆனால் விமானி சாமர்த்தியமாக செயற்பட்டதால், சற்று நேரத்திற்கு பிறகு இயல்பு நிலைக்கு திரும்பிய விமானம் செர்பியா தலைநகர் பெல்கிரேடுக்கே (Belgrade) திரும்பி வந்தது. மேலும் விமானம் மீண்டும் புறப்படாததால், பயணத்தை ரத்து செய்து விட்டு தனது மாளிகைக்கே ஜனாதிபதி டோமிஸ்லோவ் திரும்பியுள்ளார். இதுகுறித்து அவரது உதவியாளர் கூறுகையில், மிகவும் ஓட்டை உடைசலான இந்த விமானத்தில் இனி நான் பயணிக்கமாட்டேன் என்றும் இந்த சம்பவத்தால் அனைவரும் அச்சத்தில் உறைந்துவிட்டோம் எனவும் தெரிவித்துள்ளார்

## அதிரடியான ஏவுகணை சோதனை – தலிபான்கள்



தங்களது முதல் ஏவுகணை சோதனையைவெற்றிகரமாகநடத்தியிருப்பதாக, பாகிஸ்தான் தலிபான் தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர். ஆப்கானிஸ்தான் பழங்குடியின பகுதியில் வசித்து வரும் தெக்ரிக்-இ-தலிபான் (Tehreek-i-Taliban) தீவிரவாத இயக்கத்தின் பாகிஸ்தான் கிளை, தற்போது ஓமர்-1 என்ற ஏவுகணை சோதனையை நடத்தியுள்ளது.

இந்த ஏவுகணை சோதனையில் தாங்கள் வெற்றி கண்டுள்ளதாக அந்த இயக்கம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இந்த ஏவுகணை குறித்து அந்த அமைப்பின் தொழில்நுட்ப செய்தி தொடர்பாளர் முகமது குரஸ்ஸினி (Mohammed krurassini) கூறுகையில், ஓமர்-1 (Omar-1) மிகஎளிதாகபிரிக்கவும்சேர்க்கவும்கூடியது என்றும் கடவுளின் அருளால் எங்களது எதிரிகள் பயந்து ஓடப்போகும் காலம் வந்துவிட்டது எனவும் தெரிவித்துள்ளார். மேலும் ஏவுகணையின் பாகங்களை தயாரிக்கும் காட்சிகளும் வெளியிடப்பட்ட வீடியோவில் இடம்பெற்றுள்ளன.

## 900 பேரை பலிவாங்கிய கேப்டனுக்கு நேர்ந்த கதி



மத்திய தரைக்கடலில் 900 பேரை பலிவாங்கிய கப்பலின் கேப்டன் மற்றும் பணியாளர்களை பொலிசார் கைது செய்துள்ளனர். லிபியாவில் உள்நாட்டு போர் வலுத்து வருவதால், தங்கள் உயிரை காப்பாற்றிக் கொள்ளவும், பிழைப்பு தேடி செல்லவும் ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறுகின்றனர். இவ்வாறு வெறியேறும் மக்கள் சட்டவிரோதமாக படகு அல்லது கப்பல் மூலமாக பயணித்து கீரிஸ், இத்தாலி போன்ற நாடுகளில் அகதிகளாய் செல்கின்றனர்.

இந்நிலையில் கடந்த வார இறுதியில், அளவுக்கு அதிகமாக 1,000 அகதிகளை ஏற்றிச்சென்ற கப்பல், நடுக்கடலில் மூழ்கியது. இதில், 900 பேர் இறந்தனர். இந்த கோர விபத்து குறித்து விசாரித்து வரும் இத்தாலிய பொலிசார், கப்பலின் கேப்டன் மற்றும் பணியாளர்களை கைது செய்துள்ளனர். மேலும் கைதானவர்கள் மீது, சட்டவிரோதமாக அகதிகளை ஏற்றிச் சென்றது, அவர்களை படுகொலை செய்தது போன்ற பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## சடலமாய் கிடந்த தாய், குழந்தைகள் – கனடாவில் சம்பவம்



கனடாவில் வீடொன்றில் 5 பேர் மர்மமான முறையில் இறந்து கிடந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கனடாவின் சஸ்கற்சுவானில் (Saskatchewan town) ரிஸ்டேல் (Tisdale) என்ற பகுதியில், புதன்கிழமை நள்ளிரவு 1 மணியளவில் பொலிசார் வீடொன்றிற்குள் சென்றுள்ளனர். அங்கு ஒரு பெண் மற்றும் 9 வயதிற்குட்பட்ட 3 பிள்ளைகளின் உடல்களை கண்டுபிடித்துள்ளனர். இந்த கொலைகளின் சந்தேக நபரை பொலி சார் தேடிய போது பிறின்ஸ் அல்பேட் (Prince Albert) வீடொன்றில் புதன்கிழமை காலை 6.30 மணியளவில் ஒருவர் இறந்து கிடந்ததை கண்டுள்ளனர். அந்த நபருடன் 6 மாத குழந்தை ஒன்றும் காணப்பட்டுள்ளது. தற்சமயம் அந்த குழந்தை சமூகசேவை பிரிவினரின் பராமரிப்பில் உள்ளது என்று பொலிசார் தெரிவித்துள்ளனர். இவரது மரணம் கொலையில்லை என்று கருதும் பொலிசார் இந்த நபர் பாதிக்கப்பட்டவர்களுக்கு தெரிந்தவர் என தெரிவித்துள்ளனர்.

## எகிப்து அதிபருக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை



எகிப்து நாட்டின் முன்னாள் அதிபரான முகமது மொர்ஸிக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கி அந்நாட்டு நீதிமன்றம் அதிரடியாக தீர்ப்பளித்துள்ளது. கடந்த 2012 ஆம் ஆண்டு எகிப்தின் அதிபராக Moham med Morsi பதவி வகித்தபோது, அதிபர் மாளிகைக்கு வெளியே போராட்டத்தில் ஈடுபட்டவர்களை, தனது ஆதரவாளர்களை தூண்டிவிட்டு கொலை செய்ததாக மொர்ஸி மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. அதிபரின் மாளிகைவெளியேபோராட்டக்காரர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே சென்றபோது, கூட்டத்தை கலைக்குமாறு பொலிசாருக்கு மொர்ஸி உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவை பொலிசார் ஏற்க மறுத்ததால் மொர்ஸியின் இஸ்லாமிய சகோதரத்துவ இயக்கத்தை (Muslim Brotherhood Movement) சேர்ந்த ஆதரவாளர்களை தூண்டிவிட்டு போராட்டக்காரர்களை அடக்கியுள்ளார். இதில், ஒரு ஊடகவியலாளர் உட்பட 12 பேர் கொல்லப்பட்டனர். இதனை தொடர்ந்து, 2013 ஆண்டு மொர்ஸிக்கு எதிராக போராட்டம் வலுக்க தொடங்கியதால், அப்போதிய ராணுவ தளபதியான Abdul Fattah al-Sisi அதிரடியாக செயற்பட்டு மொர்ஸியை பதவியிலிருந்து இறக்கி அவர் அதிபரானார். மொர்ஸி மற்றும் அவருடைய ஆதரவாளர்களை கைது செய்து சிறையில் அடைத்த இன்றைய அதிபர், மொர்ஸியின் மீது பல குற்றச்சாட்டுகளை சுமத்தினார்.

மொர்ஸி மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதால், அவருக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மேலும், அவருக்கு ஆதரவாக செயற்பட்ட 22 இஸ்லாமிய நபர்களுக்கும் நீதிமன்றம் தலா 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்துள்ளது. மொர்ஸி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில் ஒன்றிற்கு மட்டும் தற்போது தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மீதுள்ள பிற குற்றங்களை விசாரித்து தீர்ப்பு வழங்கும்போது இந்த தண்டனை இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

## தீவிரவாதிகளின் பெண் போராளிகள் குழுவில் பிரித்தானிய மாணவிகள்



பிரித்தானியாவிலிருந்து தப்பித்த பள்ளி மாணவிகள் மூன்று பேர் தற்போது சிரியாவில் ஆயுத பயிற்சியில் ஈடுபட்டு வருவதாக வெளியான தகவலால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. லண்டன் பள்ளியை சேர்ந்த ஷாமினா பேகம் (15), கதீஜா சுல்தானா (16) மற்றும் அமீரா அப்பாஸி (15) என்ற மாணவிகள் கடந்த பெப்ரவரி மாதம் துருக்கி வழியாக சிரியா சென்றதாக சில வாரங்களுக்கு முன் உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில், தற்போது வெளியாகியுள்ள தகவலில், மூன்று மாணவிகளும் சிரியாவில் உள்ள ஐ.எஸ் அமைப்பின் பெண்கள் போராளிகள் பிரிவான Al-Khansa என்ற அமைப்பில் இணைந்து பல்வேறு பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாக தெரியவந்துள்ளது. Raqqa நகரில் இயங்கி வரும் இந்த பிரிவிற்கு பிரித்தானியாவை சேர்ந்த Aqsa Mahmood என்பவர் தலைவர்களில் ஒரு வராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ultra-religious police force என்று அழைக்கப்படும் இந்த அமைப்பை சேர்ந்தவர்கள் அனைவரும் பெண் போராளிகள். இவர்களின் முக்கிய பணியாக ஐ.எஸ் அமைப்பின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் நகரங்களை கண்காணித்து தனது அமைப்பின் கொள்கைகளை மக்களுக்கு விளக்கி வருவது ஆகும்.

முக்கியமாக, இஸ்லாமிய பெண்கள் உடலை மறைக்கும் வகையில் ஆடை அணிந்திருக்க வேண்டும் என்றும், அவர்கள் ஆண்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதை கடமையாக கொள்ள வேண்டும் எனவும் போதனை செய்து வருகின்றனர். இது மட்டுமன்றி, பிரித்தானிய பள்ளி மாணவிகள் இணைந்துள்ளதாக கருதப்படும் இந்த பிரிவை சேர்ந்த பெண் போராளிகள் தற்காப்பிற்காக ஆயுத பயிற்சியில் ஈடுபட்டு வருவதை சிறந்த பொழுது போக்காகவும், மன நிறைவாக உள்ளதாகவும் கூறியுள்ளனர்.

முன்னதாக, பிரித்தானியா நாட்டை விட்டு சென்ற மாணவி ஒருவர், அங்குள்ள ஜிகாதியை திருமணம் செய்துள்ளதாக தெரியவந்துள்ளதால், கடந்த பெப்ரவரி மாதம் சென்ற பள்ளி மாணவிகளும் திருமணம் செய்துள்ளனரா? என்ற உறுதியான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. பிரித்தானியாவை சேர்ந்த சுமார் 600 இஸ்லாமியர்கள் ஐ.எஸ் அமைப்பில் இணைந்துள்ளதாகவும், அவர்களில் 60 பேர் இளம்பெண்கள் ஆவர். ஐ.எஸ் அமைப்பிற்காக போராடி வரும் உறுப்பினர்களுக்கு மாத ஊதியமாக சுமார் 25 ஆயிரம் சிரியா நாட்டை சேர்ந்த பவுண்டுகள் வழங்கப்பட்டு வருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

## அம்பலமான ஸ்பெயின் மன்னரின் உல்லாச வாழ்க்கை

ஜேர்மன் நாட்டின் உயர் குடும்பத்தை சேர்ந்த பெண்ணுடன் ஸ்பெயினின் முன்னாள் மன்னர் ரகசியமாய் குடும்பம் நடத்தியது தற்போது அம்பலமாகியுள்ளது. ஸ்பெயினில் உள்ள Ana Romero என்ற நபர், அந்நாட்டின் முன்னாள் மன்னர் Juan Carlos (77) அவர்களின் ரகசிய வாழ்க்கை பற்றி Final de Partida என்ற புத்தகம் ஒன்றை எழுதியுள்ளார்.

இந்த புத்தக வெளியீட்டு விழா தலை நகர் மாட்ரிடில் நடைபெற்றது. மொத்தம் 124 பக்கங்களை கொண்ட இந்த புத்தகத்தில் மன்னரின் வாழ்க்கையை பற்றி விரிவாக விவரித்துள்ளார். இந்த புத்தகத்தில் அவர் கூறியிருப்பதாவது, நீண்ட கால ஆட்சிக்கு பிறகு கடந்த யூன் மாதம் 2014 ஆம் ஆண்டு மன்னர் மகுடத்தை தனது மகனான Felipeக்கு Juan Carlos விட்டுக்கொடுத்தார். மன்னர் பதவியில் இருந்தபோது, ஜேர்மனி நாட்டை சேர்ந்த ஒரு அரச குடும்பத்தில் இளவரசரின் மனைவியாக இருந்தவர் Corinna zu Sayn-Wittgenstein (49). இளவரசர் மறைவிற்கு பிறகு, இந்த பெண்ணும் ஸ்பெயின் மன்னரும் கடந்த 2004 ஆம் ஆண்டு சந்தித்துள்ளனர்.

அப்போது, இருவருக்கும் இடையே காதல் வளர்ந்து அது தனது மனைவியான Sofiaவை விவாகரத்து செய்யும் அளவிற்கு சென்றுள்ளது. ஆனால், மன்னர் குடும்பத்தினர் இதை அனுமதிக்கவில்லை என கூறப்படுகிறது. கடந்த 2012ம் ஆண்டில் இருவரும் ஒன்றாக அரசு அலுவலக கூட்டங்களில் கூட கலந்துக்கொண்டது பலரையும் வியப்பில் ஆழ்த்தியது.





பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

சகல விதமான தையல் இயந்திரங்களும் தங்கள் இருப்பிடத்திற்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும்.


தொடர்புகளுக்கு :- 077 6906182

# விந்தை உலகம்

## இயற்கையை காதலிப்பவரா நீங்கள்? கண்டிப்பாக இங்கு செல்லவும்

*செஷல்ஸ் தீவுகள் (Seychelles Islands) வடக்கு இந்திய பெருங்கடலில் சுமார் 115 சிறிய தீவுகளை கொண்டு அமைந்துள்ளது. 1770ல் ஃபிரெஞ்சு அரசின் கட்டுப்பாட்டில் இருந்த இந்த தீவுகள், நெப்போலியன் வாட்டர்லூவில் தோல்வியடைந்ததை அடுத்து 1814ல் பிரித்தானியாவின் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளது. இதையடுத்து விக்டோரியாவை தலைநகரமாக கொண்டு செயற்பட தொடங்கிய இந்த தீவுகள் பிரித்தானியாவிடம் இருந்து 1976ம் ஆண்டு விடுதலை பெற்றுள்ளது. தற்போது சுமார் 90,000 மக்கள் தொகையை கொண்டு விளங்கும் இந்த தீவுகளில், பல்வேறு மதம், மொழி, இனத்தினை சேர்ந்த மக்களும் வசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இயற்கை எழில் கொஞ்சும் இந்த தீவுகளின் 50 சதவிகித இடங்களில், தேசிய பூங்காக்களும், வனப்பகுதிகளும் நிறைந்து காணப்படுகின்றன. மேலும், உலகின் எந்த மூலைகளிலும் காணமுடியாத அழிவின் விளிம்பில் உள்ள எண்ணற்ற செடிகள், மரங்கள் மற்றும் அளவில் மிகச்சிறிய தவளை முதல் மிகப்பெரிய ஆமை போல் விதவிதமான உயிரினங்கள் இங்கு வாழ்ந்து வருகின்றன.*






## பன்றியோடு படுக்கையை பகிர்ந்துக் கொள்ளும் சீன இளம்பெண்

அசுத்தம் மற்றும் நோய்களின் தாயகம் என்றும், தரித்திரத்தின் உருவம் என்றும் பலரால் கருதப்படும் பன்றியுடன் சீனாவைச் சேர்ந்த மூ சோ என்ற இளம்பெண் தனது படுக்கையை பகிர்ந்துக் கொள்ளும் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் தீயாக பரவி வருகின்றது. மூன்றாண்டுகளுக்கு முன்னர் வெறும் இறைச்சிக்காக வளர்க்கும் நோக்கத்தில் ஒரு ஆண் பன்றியை வாங்கிய மூ சோ நாளடைவில் அந்தப் பன்றியின் விளையாட்டுத் தோழியாக மாறிப்போனார். வூஹவா என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் பன்றியுடன் தற்போது படுக்கையை பகிர்ந்துக் கொள்ளும் அளவுக்கு அந்த தோழமை பலப்பட்டுப் போய் உள்ளது.

117 பவுண்டு எடை கொண்ட வூஹவாவை தன் மீது கிடத்திக் கொண்டு இவர் எடுத்துள்ள புகைப்படங்களும், வூஹவாவை மூ சோ முத்தமிட, மூ சோவின் தோளில் சாய்ந்துகொண்டு வூஹவா கொஞ்ச என சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ள இந்த புகைப்படங்கள் பலரால் விரும்பப்படுவதுடன் மட்டுமின்றி, தங்களுக்கும் இதுபோன்ற பன்றித்தோழன் இல்லையே என பலரை ஏக்கமடையை வைத்துள்ளது. இதுபற்றி பூரிப்புடனும், பெருமிதத்துடனும் குறிப்பிடும் மூ சோ, வூஹவா எங்கள் குடும்பத்தில் ஒருவன். ஆனால், சரியான தூங்குமூஞ்சிப் பையன். நான் கூட இருந்தாலும், இல்லாவிட்டாலும் எப்போது பார்த்தாலும் தூங்கிக் கொண்டே இருப்பான். விழித்திருக்கும் கொஞ்சம் நேரம் மட்டும் எங்கள் வீட்டில் வளரும் முயல்களோடும், நாயோடும் விளையாடுவான் என்று கூறி சிரிக்கிறார்.





## இளமையாக மாற பன்றி இரத்தத்தில் குளிக்கும் மொடல் அழகி



அமெரிக்காவில் மொடல் அழகி ஒருவர் இளமையாக காட்சி அளிக்க பன்றி இரத்தத்தில் குளிப்பதாக தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் California வைச் சேர்ந்த மொடல் அழகியான 19 வயது Chanel தனது தோல் புத்துணர்ச்சி பெற பன்றியின் இரத்தத்தில் குளிப்பதாக தெரிவித்துள்ளார்.

தனது உடலில் சுருக்கங்கள் காணப்பட்டதால் தான் பன்றி இரத்தத்தில் குளிக்க தொடங்கியதாக அவர் தெரிவித்துள்ளார். அவர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்த முறை பயன்படுத்தப்பட்டதாகவும், தான் இந்த பன்றி இரத்தத்தை உள்ளூரில் பெறுவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், இந்த இரத்தத்தின் மூலம் ஒரு நாளைக்கு 10 முறை முகத்தை கழுவுவதாக தெரிவித்துள்ளார்.

## பல்லாண்டுகளாக தீராத மர்மமாக ஓடும் ரத்த அருவி



பனிப்பாறைகளால் முற்றிலும் சூழப்பட்ட பூமியின் தென் துருவத்தில் அமைந்துள்ள அண்டார்ட்டிகாவில் ரத்த அருவி ஒன்று பல்லாண்டுகளாக ஓடிக் கொண்டிருக்கிறது. 1911ம் ஆண்டு அவுஸ்திரேலியாவை சேர்ந்த Griffith Taylor என்ற புவியியலாளர் பூமியின் தென் பகுதியில் அமைந்துள்ள அண்டார்ட்டிகாவில் ஒரு வினோத நிகழ்வினை கண்டு ஆச்சரியமடைந்துள்ளார்.

அங்கு ஒரு குறிப்பிட்ட பனிப்பாறையில் இருந்து ரத்த சிவப்பு நிறத்தில் நீர் அருவியாக வெளியேறி கொண்டிருந்தது. தற்போது Taylor பனிப்பாறை என்றழைக்கப்படும் அந்த மிக உயர்ந்த பனிப்பாறையில் இருந்து ரத்தம் போன்ற நீர் பல ஆண்டுகளாக அருவியாக ஓடியதால் பலரும் அதன் மர்மத்தை அறிய முயன்றனர். பனிப்பாறைகளால் முழுதும் நிரம்பிய அண்டார்ட்டிகா கண்டத்தில், குறிப்பிட்ட ஒரு பனிப்பாறையில் இருந்து மட்டும் இவ்வாறு ரத்த நிறத்தில் நீர் அருவியாக பாய்வதை அறிந்த மக்கள் அச்சமும் ஆச்சரியமும் அடைந்துள்ளனர். இதையடுத்து புவியியலாளர்கள் பலரும் இந்த ரத்த நிறம் பற்றிய மர்மத்தினை அறிந்து கொள்ள அங்கு படையெடுக்க தொடங்கியுள்ளனர். அங்கு ஆராய்ச்சியை தொடங்கிய அவர்கள், முதலில் பாசிகள் தான் இந்த நிறமாற்றத்திற்கு காரணம் என்று கருதியுள்ளனர். ஆனால் பல்லாண்டுகளாக நடந்த ஆராய்ச்சிகளின் முடிவாகவே அதன் உண்மையான காரணம் தெரியவந்துள்ளது.

அதாவது அந்த பனிப்பாறையின் அடியில் சுமார் 2 மில்லியன் ஆண்டுகளாக ஒரு ஓடை ஓடிகொண்டிருப்பதாகவும் அங்கு வாழ்ந்து வந்த நுண்ணுயிரிகளில் இருந்து வெளிவந்த சல்ஃபர் மற்றும் இரும்பு ஆகியவற்றால் அந்த சிவப்பு நிறம் தோன்றியது அம்பலமாகியுள்ளது. மேலும், அந்த ஓடையின் நீரில் ஒக்ஸிஜனின் அளவு வெகுவாக இல்லை என்றும், நுண்ணுயிரிகள் சல்ஃபேட்டை உணவாக கொண்டே சுவாசித்து வாழ்ந்ததும் தெரியவந்துள்ளது. இதுமட்டுமல்லாமல் ஒக்ஸிஜன் இல்லாத அந்த நீரினில் உலகில் வேறு எந்த மூலையிலும் இதுவரை கண்டுபிடிக்கப்படாத 17 வகையான நுண்ணுயிரிகள் இருந்ததும் ஆராய்ச்சியாளர்களை கடும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. உயிர் வாழ்வதற்கு ஆதாரமான ஒக்ஸிஜன் அதிகளவில் இல்லாத அந்த ஓடையில் எவ்வாறு இத்தனை அரிய வகை நுண்ணுயிரிகள் இருக்கிறது என்பது பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.


நதி மங்கையர் சொய்ஸ்

மாங்கையர் மனங்கவரும் அனைத்துரக அழகு சாதன
பொருட்களையும் மொத்தமாக ஒரே இடத்தில்
கொள்வனவு செய்திட நாடவேண்டிய ஒரே இடம்








email - vanni_inn@yahoo.com

Vanni Inn

Chinese, Indian, Sri Lankan Food available








Hotel Vanni Inn

A/C Room, Non A/C Room, Com Room, Quality Foods, Hall, Vehicle Parking

வவுனியா மண்ணில் நவீன வசதிகளுடன் கூடிய மங்கலகரமான அனைத்து
நிகழ்வுகளுக்கும், மண்டபத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

2nd Cross Street, Vavuniya. Tel:- 0242222074, Fax:- 0242222074



இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 26.04.2015 அன்று வெளியிடப்பட்டது.